இர்ஷாதாதெ ஹபீப்

(ஞானோபதேசங்கள்)

ஆசிரியர் :

ஷெய்கெ காமில் ஆரிபு பில்லாஹ்

அல்ஹாஜ் காஜா ஹபீபுல்லாஹ் ஷாஹ்

சஷிஸ்தீ, காதிரீ, நக்ஷபந்தீ, சுஹ்ரவர்தீ.

இர்ஷாதாதே ஹபீப்

(உர்தூவிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது)

ஞானோபதேசங்கள்

ஆசிரியர் :

ஷெய்கெ காமில், ஆரிபு பில்லாஹ்

அல்ஹாஜ் காஜா ஹபீபுல்லாஹ் ஷாஹ்

(சுஷ்தி-காதிரீ, நக்ஷபந்தி, ஸுஹ்ரவர்தி)

முதற் பதிப்பு : அக்டோபர் 1962
இரண்டாம் பதிப்பு : மே 1986
உரிமை ஆசிரியருடையது

சமர்ப்பணம்

இந்த ''இர்ஷாதாதெ ஹபீப்'' என்னும் ஞானோபதேச நூலை எமது ஆத்மத் தந்தை யாகிய குருமகான், ஹஜ்ரத் குத்பெ இர்ஷாத் காஜா ஆரிபுல்லாஹ் ஷாஹ், கஷ்ஸ்தீ, காதிரீ, நக்ஷபந்தீ, ஸுஹ்ரவர்தீ கத்தஸல்லாஹு சிர்ரஹு அவர்களின் ஆத்மாவுக்குத் தாழ்மை யுடன் சமர்ப்பிக்கின்றேன்.

—காஜா ஹபீபுல்லாஹ் ஷாஹ்

கிடைக்குமிடங்கள் ;

அல்ஹாஜ் ஹஜ்ரத் முர்ஷித் சாஹிப்
ஆசிரமம், கச்சேரித் தெரு,
காட்டுமன்னார்குடி போஸ்ட் (வழி சிதம்பரம்)
(தென் ஆற்காடு மாவட்டம்)

தீரியெம் புக் செல்லர்ஸ்
83, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 001.

அச்சிட்டோர் ;

தீரியெம் பிரிண்டர்ஸ்
92, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை-600 001.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ
عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَاَصْحَابِهٖ اَجْمَعِيْنَ

ஸலாம்

யாரஸூலல்லாஹ் ஷஹெ குத்ஸீ மகாம்
லீஜியெ அப் அப்னே காதிம் கா ஸலாம்.

அஸ்ஸலாம் அயெ நில்கெ தர்மான் அஸ்ஸலாம்
அஸ்ஸலாம் அயெ சாரயெ ஜான் அஸ்ஸலாம்.

இத்ரதெ அத்ஹார் பார் லாகோன் ஸலாம்
தேரே யாரோன் சார் பார் லாகோன் ஸலாம்.

யா ரஸூலல்லாஹ் ஷஹெ ஜின்னே பஷர்
ஹோன் மேரே மா பாப் குர்பான் ஆப் பர்.

அழிவற்ற ஆண்டவனின் அன்புள்ள தூதுவரே
அருமையாம் நற்றலத்தின் அதிபதியே பேரொளியே
ஒளிலின்ப இஸ்லாத்தின் ஏந்தலரே என்றுமுரை
ளியேவின் அன்புஸலாம் ஏற்றுவப்பீர் யாநபியே!

ர் தயத்தின் நோய்நீக்கும் இன்னமுதே மாமருந்தே
றவாத ஆத்மாவாம் இனிதான மோட்சமுற
தயத்தின் கதிரவனுய் உலகத்தில் வழிகாட்டும்
த்தமரே எங்கள்ஸலாம் உவந்தேற்பீர் யாநபியே!

ற்றோழர் நால்வர்க்கும் நண்ணுமுயர் குலத்தார்க்கும்
ரூயி ரங்கோடி நவில்கின்றேன் நித்தம்ஸலாம்
ற்றுத வான்கருணை வாரிதியே மெய்ஞ்ஞான
ற்பனரே வித்தகரே வாழ்த்துகிறேன் யாநபியே!

ண்ணுலக ஜின்னுக்கும் மானிடர்க்கும் மாபெரிய
ன்னவரே மக்கநகர் மாமதியே மெய்நிதியே
ன்னேயுடன் என்தந்தை அர்ப்பணமே தங்கட்கு
சிதரு வீர்ஏற்று அண்ணலிர ஸூல்நபியே!

தமிழில் : புலவர் ஆபிதீன்

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

முகவுரை

ரஹ்மானும் ரஹீமுமாகிய அல்லாஹுத்த ஆலாவைப் போற்றிப் புகழ்ந்து, சிறப்புக்குரிய சீரிய ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்மீது சலவாத்து ஓதியபின் இதை ஆரம்பிக்கிறேன்.

இந்நூலில் காணப்படும் அரிய விஷயங்களை நாம் திரு குர்ஆன், ஹதீஸ், ஆகியவற்றிலிருந்து ஹஜ்ரத் செய்யது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்), ஹஜ்ரத் இமாம் கஜ்ஜாலி (ரஹ்), ஹஜ்ரத் மௌலானு ரூமி (ரஹ்) ஹஜ்ரத் செய்யது மஹ்மூது சபீஸ்தரி (ரஹ்), ஹஜ்ரத் ஷெய்கு மஹ்மூது பஷ்ரி (ரஹ்) போன்ற நம் முன்னோர் களான மஹான்கள் சாலிஹீன்களுடைய அரும்பெரும் ஞான நூல்களிலிருந்து திரட்டியுள்ளோம். சத்தியத்தைத் தேடும் அன்பர்களுக்கும் நமது சிடர்களான முரீதுகளுக்கும் பயன் படும் முறையில் இந்த நூல் அமைத்துள்ளது. இதற் "இர்ஷாதாதே ஹபீப்" (ஞானோபதேசங்கள்) எனப் பெய சூட்டியுள்ளோம்.

அல்லா(ஹ்)வின் பாதையில் சத்தியத்தைத் தேடுபதை களும் தரீகாவின் சட்ட திட்டங்களின்படி ஒழுகுபவர்களு அல்லா(ஹ்)வின் புறத்திலிருந்து ஜாக்கம் பெறவேண்டு இந்த நூலைப் படித்துப் பயனடையவேண்டும்; இதனு தங்கள் நிலையைச் சீர்செய்து கொள்ளவேண்டும்; ஆ பிணியகற்றும் சஞ்சீவிகள் போன்ற நல்லோர்களின் சக சுத்தில் அமர்ந்து அந்தரங்க அருள்பாக்கியங்களை அடை பெறவேண்டும்; உத்தம மகான்களைக் கண் கொ தரிசிக்கவேண்டும்; இவையே நமது குறிக்கோள், ல அல்ஹம்து லில்லாஹ்.

خُذِ الْعِلْمَ مِنْ أَفْوَاهِ الرِّجَالِ فَإِنَّهُمْ يَقُولُونَ أَفْضَلَ مَا يَحْفَظُونَ

أَحْسَنَ مَا يَقْرَأُونَ (இமாம் கஜ்ஜாலி)

"மெய்ஞ்ஞான சொரூபர்களான மஹான்களின் சகவாசம் மஹத்தான நற்பயனைத் தருவதாகும். மஹான்களுடைய திருவாயிலிருந்து மலரும் ஞானத்தைப்பற்றிப் பிடித்துக் கொள்வாயாக! ஏனெனில், அவர்கள் அறிந்தவற்றிலிருந்து சிறந்தவற்றையே சொல்வார்கள். தாங்கள் கண்டு தெளிந்த வற்றுள் அழகானவற்றையே மொழிவார்கள்.

என்று இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் மேற்காட்டிய வாறு அருளியுள்ளார்கள்.

"இத்தகைய உத்தமர்களின் சகவாசம் மறித்த மனத் துக்குப் புத்துயிர் ஊட்டும் மீண்டும் மரணமே இல்லாத நித்திய ஜீவியத்தைத்தரும்" என்று பாரஸீக ஞானி ஒரு வரும் அருளியுள்ளார்.

எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா, ஒளிமயமான முஹம்மது (ஸல்) அவர்களின் பொருட்டாலும் முஹம்மது டைய வம்சத்தாரின் பொருட்டாலும் இந்நூலை ஏற்றுக் காண்டருள்வானாக! இதன் வாசகர்களுக்கு ரூஹானியத் நன்னும் ஆத்மார்த்த அமுதைத் தந்து தன்திருச்சமூகத்தில் அருகிலாகும் பாக்கியத்தையும் தந்து அருள்பாலிப்பானாக மீன்!

இங்ஙனம்,

அஹ்லுல்லாக்களின் பாததாசியான

(பகீர்) காஜா ஹபீபுல்லாஹ் ஷாஹ்.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

தந்துரை

தன்னில் தானுகித் தனித்து ஏகனுகித் தனிப் பெருங் கருணையாய், அருட்பெரும் புதையலாய், அறிவுச் சுரங்கமாய் ஞானப் பிழம்பாய், தன்னுட்சி புரியும் எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா தனது வல்லமையை வெளிப்படுத்த எண்ணங்கொண்டு. தனக்குப் பிரதிநிதியாக இருக்கத் தக்க முறையில் அரிய படைப்பொன்றைத் தனது சாயலில் அமைத்து மகிழ விரும்பினன். இவ்விருப்பின் காரணமாக 'இன்ஸான்' எனும் மானிடப் பிறவியின் வடிவம் இறைவனது சிந்தனையில் கருப்பொருளாய்ச் சமைந்தது.

இத்தகைய மானிட வர்க்கம் வாழ்க்கை நடத்தி வருவதற்காகவும் வணக்கம் புரிந்து இறைவனை வெளிப்படுத்துவதற்காகவும் பல்லுலகங்களையும் பற்பல வகைப்படைப்புக்களையும் அம்மனித வர்க்கத்திற்குப் பேருதவியாக இருக்கத்தக்க முறையில் முற்கூட்டியே படைத்து அவனை அவற்றைக் காத்து வந்தான்.

இறைவன் தான் நாடிய தருணமும் வேளையும் வந்த போது தனது எண்ணத்தில் உள்ள மானிட வர்க்கத்தைப் படைக்க எண்ணி, அப்படைப்பின் முதற்கனியாய் – முழு மனிதராய்—முதற் பிரதிநிதியாய் – முதல் வழி காட்டியாய் ஹலரத் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஆணாகவும் அவர்களுக்கு அரும்பெருந்துணையாய் இருந்துவர ஹவ்வா (அலை) அவர்களைப் பெண்ணாகவும் படைத்து மனி இனப் பெருந்தொடரை இப்பரந்த உலகில் துவக்கி வை தான்.

பின்னர் மானிட வர்க்கம் தன்னை அறிந்து தெரிந் புரிந்து, இறுதியில் தன்னை அடைந்து கொள்வதில் பயிற்சி

பக்குவமும் பெறுதற்காகக் கணக்கற்ற நபிமார்களையும் ரசூல்மார்களையும் கால, தேச நிலைக்கு ஒப்ப, அம்மனிதஇனப் பெருந்தொடரினிடையே அணி அணியாய் ஏற்படுத்தி வைத் தான்.

இதன் பின்னர் தனது ஆதி எண்ணத்திற்குள் எண்ண மாய்—சிந்தைக்குள் சிறந்த சிந்தனையாய்...கருத்துக்குள் திருப்பொருளாய் இருந்த சம்பூரணத் தூதுவரை இறுதிநாள் வரை உள்ள காலமனைத்திற்கும் ஏற்ற முறையில் ஒரு பெரு நபியை வெளிப்படுத்த இறைவன் எண்ணினன்.

இறுதி நபியவர்கள் தோற்றமாவதற்கு முன்னமேயே இறுதி நபி அவர்களின் வருகைபற்றியும் நிறை மறை குர்ஆன் ஷரீபு அருளப்படுவதுபற்றியும் காலத் தொடரனைத்திலும் நிர்க்கதரிசிகளை முன்னறிவிப்புச் செய்யும் தோரணையிலும் முன் விமர்சனப்படுத்திவைக்கும் விதத்திலும் அனுப்பித் தனது தனிப் பெரும் கருணையை நிறைவேற்றி வைத்தான்.

இதன் பின்னர் நான் படைத்த காலங்களிலேயே வசந்த காலமாயும் திருவருள் சுரக்கும் புனித காலமாயும் உள்ள யானை ஆண்டு, ரபீஉல் அவ்வல் மாதம், வளர்பிறை 12-ல் திங்கட்கிழமை அதிகாலை ஆதவன் தன் பொற் கதிர்களைப் பரப்புவதற்குமுன் இளந்தென்றல் வீசும் இனிய வேளையில், அகிலகோடி படைப்பனைத்திற்கும் அருட்பெருந்தலைவராகவும் இறுதி நபியாகவும் ஹலரத் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பெருந்திருவாகத் தோற்று வித்தான்; பல்லுலகங்களுக்கும் பரமன் தன் தூதுவராக அனுப்பி வைத்தான்; இருட்குபிரின் இனமனைத்தையும் அகற்றி மருட்பவம் அனைத்தையும் போக்கி அருட் பெருங் கொடை வள்ளலாக இருக்கும் முறையில் ஏற்படுத்தி வைத் தான். என்னே! மன்பதைகள்மீது உள்ள அல்லா(ஹ்)வின் தனிப் பெருங்கருணை! அல்ஹம்து லில்லாஹ்.

இத்தகைய இஸ்லாமிய மெய்ஞ்ஞானம்தான் நபிகள் நாயகம் அவர்களுக்குப்பின் அவ்லியாக்கள், குதுபுமார்கள்,

மஷாயீகுகள், உலமாக்கள் ஆகியவர்களால் மன்பதைகளுக்குச் செவ்வனே விளக்கப்பெற்று இறுதி நாள் 'கியாமத்' வரை நன்கு போதிக்கப்படுவதாய் அமைந்து இருக்கிறது.

உலக வாழ்க்கை என்பது ஒரு பெருங்கடலைப்போன்றது. இக்கடலில்தான் மனிதன் நீந்தி, கரை என்னும் மோட்சம் அடையக்கூடியவனாக இருக்கின்றான்; ஆனால், இடையில் ஏற்படக்கூடிய 'ஆசை' என்னும் நீர் வாழ்வனவும், 'பற்று' எனும் பெரும் புயற்காற்றும், 'மாயை' என்னும் பேரலைகளுமான அளப்பரும் அல்லல்களுக்கும் இன்னல்களுக்கும் இலக்காகாமல் இறுதி வரை சென்று வெற்றிக்கரை ஏறுவது அம்மனிதனுக்கு நீங்காக் கடமையாகும். இதற்கு ஒவ்வொரு மனிதனும் தனக்கொரு சரியான மரக்கலத்தைத் தேர்ந்து கொள்வது கடமையுட் பெருங்கடமையாகும்.

வாழ்க்கை என்னும் பெருங்கடலில் மனிதன் தனது நீங்காக் கடமையாகிய மெய்ஞ்ஞானப் பெரு மகிழ்வை அடைந்து களிப்பதற்கு ஒவ்வொரு மனிதனும் அருள் மரக்கலம் போன்றுள்ள 'ஷெய்கே காமில்' என்ற தேர்ச்சியடைந்த ஞான குரு ஒருவரை அணுகி, அவர்களிடம் ஷரிஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத் என்ற சரிகை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய பயிற்சிகளை முறையாகப் பெற்று, குறைவறத் தேர்ந்து, நிறைவுற்ற 'ஸுலூக்' என்னும் பேரொளிப் பாதையில் சீருற நடந்து செல்வது அவனுக்குரிய அரிய, அழகிய கடனுகும்.

அறிவை அருட் கொடையாகப் பெற்ற அன்பனே, இப்பொழுது நீ நன்கு சிந்தனை செய்து பார். அரிதினும் அரிதாகிய மானிடப் பிறவியை நீ அழகுற அடைந்துள்ளாய். அரிதாகிய முஸ்லிமாய் நீ மிளிர்கின்றாய். யாரும் பெறமுடியாத திருக்குர்ஆனைப் பெருமறையாகவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மூலஞான மோன குருவாய்-வழிகாட்டியாகவும் பெற்றுள்ளாய்.

உன்னை தோற்றுவித்துத் தன்னைக் காட்டிக் கொள்ளாமலிருக்க விரும்புகின்றானே அந்த ஒப்பற்ற தன்மைக்கு நீ அருகதை உடையவனாக ஆகிக் கொள்வதில் நீ கருத்துக் கொண்டாயா?

உன்னில், உன் வாழ்வில், உன் உயிரில் எந்த ஒளி, கூடு விட்டுப் பிரகாசிக்க வேண்டுமோ அந்தத் தன்மைக்குத் தக்க விதத்தில் உனது உள்ளத்தைக் கண்ணாடியாக்கிக் கொண்டாயா?

ஆம், என்று துணிந்து சொல்ல உனக்குரிய 'ஷெய்கு' என்பவரை நீ தேர்ந்தெடுத்துக் கொண்டாயா? அப்படியானால் நீ அதிருஷ்டசாலியேதான். உன் வாழ்வின் உண்மையான லட்சியத்தை நீ தெரிந்து கொண்டாய்; உனக்குத் தகுந்த தலைவர், ஷெய்கு நிச்சயம் உனக்கு அருந்துணையாக இருப்பார்; அருள் வழிகாட்டுவார்.

இந்த "இர்ஷாதாதெ ஹபீப்" என்ற நூல், ஞான வழி செல்பவர்களுக்கு அருந்துணை புரிவதற்காக வரைந்து வெளியிடப் பட்டுள்ளதால் இதனைப் பெற்று முறையாகச் செல்வதற்குரிய சந்தர்ப்பத்தை ஆர்வம் படைத்த அனைவரும் அடைய வேண்டுமென விரும்புகின்றேன். மேலும் ஞானப் பயிற்சிகளை நேரில், மக்கள் பெறுவதற்காக (மர்கஸி) **கான் காஷ்யெ ஹபீபிய்யா** என்ற ஞானப் பயிற்சி ஆசிரமம் ஒன்றையும் நடத்தி வருகின்றேன். எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா நன்மையான காரியங்களுக்கு நற்கிருபை ரஹ்மத் செய்வானாக! ஆமீன்!

இந்தப் புத்தகம், நல்ல முறையிலே வெளிவர எல்லா உதவிகளையும் நல்கிய அன்பர்கள் அனைவர்களுக்கும், எனது அன்பையும் ஆசியையும் கூறிக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

[பகீர்] காஜா ஹபீபுல்லாஹ் ஷாஹ்

பிஸ்மில்லாஹ்

பதிப்புரை

இர்ஷாதாதே ஹபீப் (ஞானோபதேசங்கள்) என்னும் இந்த உன்னதமான நூல் தமிழில் வெளிவர உதவி புரிந்த எல்லாம் வல்ல அல்லா(ஹ்)வுக்கே சகல புகழும்.

நாங்கள், எங்களின் கண்ணியமிக்க, ஹஜ்ரத் கிப்லா முர்ஷிது சாஹிப் அவர்களிடம், வேண்டிக் கொண்டதற் கிணங்க, இந்த இர்ஷாதாதே ஹபீப் என்ற நூலை உர்தூவில் எழுதியருளினர்கள். அதைத் தமிழ் கூறும் மக்களுக்குப் பயன்படுவதற்காகத் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள் ளோம்.

இக்கிரந்தம் அச்சில் வெளிவர பணவசதி செய்த அன் புள்ளம் கொண்ட ஹாஜி சாஹிப் ஒருவருக்கும் அவரது குடும்பத்தார்களுக்கும் வல்ல ரப்புல் ஆலமீன் சகல அருட் பாக்கியங்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

இந்த நூலை நல்ல முறையிலே, தர்ஜுமாச் செய்து தந்த பாகவி ஆசிரியர் ஆலி ஜனாப் மவ்லவி T. F. ரஹ்மத்துல் லாஹ் மஆலி சாஹிப் (பாகவி) அவர்களுக்கு எங்களின் நன்றி உரித்தாகுக. தங்களுக்குள்ள, பல அலுவல்களிடையே, சிர மத்தைப் பாராது, இதன் நடையை ஒழுங்குபடுத்தித் தந்து தவிய எமதருமைச் சகோதரரும், பல ஞான ஒளிக் கிரந்தங் களை எழுதிய தென்காசி, அருள் நூல் அச்சகத்தின் உரிமை யாளருமான ஜனாப் R. P. M. கனி சாஹிப் B.A., B.L., அவர் களுக்கு எங்களின் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அச்சிடுவதில் எமக்கு உதவியாக இருந்து, சரிபார்த்து இது நல்ல முறையில் வெளிவர உதவிய பெரியார் புலவர் ஆபிதீன் அவர்களுக்கு எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறோம்.

எமது கண்ணியமிக்க குருமகான் அவர்களால் எழுதப் பட்ட, ஒளராதே ஹபீபும் தயாராகி விட்டது. அடுத்து பைஜுல் ஹபீபின் தமிழ் இரண்டாம் பதிப்பும் வெளி வந்து விட்டது. முரீதுகளாகிய நமக்கெல்லாம் ஹிதாயத் செய்து படி ஏற்றிக் கொண்டிருக்க எல்லாம் வல்ல அல்லாஹ் நமது குருமகான் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக் கியத்தையும் தந்தருள் புரியும்படிவல்லோனை இறைஞ்சுவோ மாக.

அல்லாஹ்வே! உன் சந்நிதான வாயலில் அடிபணிந்து வணங்கி ஜெயம் பெற்ற ஸீலர்களின் கூட்டத்தில் எங்களை ஆக்கிவைத்து, உன்னுடைய லிகா வென்னும் திவ்விய தரிச னத்தைத் தந்தருள்வாயாக. ஆமீன்!

(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

இங்ஙனம் தாழ்மையுள்ள,

சென்னை
1-10-62

ஜி. முகம்மது பாத்ஷா
கலிஃபத்துல் காதிரீ

—0—

பொருளடக்கம்

எண் பக்கம்

முதற் பாகம்

1. முரீதுகளுக்குரிய அத்தியாவசியமான ஒழுக்க முறைகள் ... 1
2. ஷெய்கிடம் மரியாதைக் குறைவாக நடப்பதால் ஈமானின் ஒளி பறிபடுகிறது ... 5
3. முரீதுடைய இலட்சியம் பீரேயாவார் ... 6
4. தரீகத்து நிலைத்திருப்தபற்கு ஷெய்கின் தொடர்பு அவசியம் ... 8
5. தன் ஷெய்கினுல் ஒப்புக் கொள்ளப்பட்டால் ... 11
6. புதிய முரீது பழைய முரீதைப் பின்பற்றக் கூடாது ... 14
7. அதிகாரிக்கு மரியாதை செய்வது அரசருக்கு மரியாதை செய்வதாகும் ... 14
8. பத்துவகை ஞான ஒழுக்கங்கள் ... 15
9. ஷெய்குக்குத் தொண்டு செய்வதால் நற்பாக்கியமுண்டாகும் ... 16
10. ஷெய்கின் தரிசனமே மாபெரும்பாக்கியமாகும்... 18
11. நான்கு வகைக் கிப்லா ... 18
12. முஜாஹிதாக்களாலேயே முஷாஹதா கைகூடும் 19
13. ரப்புடைய ஸிர்ருகளை வெளிப்படுத்துவது குப்ராகும் ... 20
14. ஷெய்குடன் அமர்ந்திருப்பது ஸுன்னத் முஅக்கிதாவாகும் ... 21
15. குரு பதவியும் அவருடைய உரிமையும் ... 24
16. முரீதுடைய மன அழுக்கைப் போக்குபவர் ஷெய்கேயாவார் ... 24
17. ஷெய்கினுலேயே மன அமைதி உண்டாகும் ... 25
18. அல்லா(ஹ்)வின் திருப்தி ஷெய்கின் திருப்தியில் உண்டாகும் ... 25
19. குத்பே-அப்தால் என்னும் நாதாக்களின் நல்லுதவி ... 25
20. நல்லடியாருக்கு அருள் கிடைப்பதில் சுயாதிகாரம் இல்லை ... 27
21. ஒலியாக்களும் பொதுத் தேவைகளில் மனிதர்களைப் போன்றவரே ... 27

இரண்டாவது பாகம்

22. 'தஸவுப்' என்பதன் விளக்கமும் அது சம்பந்தமான ஆதாரங்களும் ... 29
23. ஸூபி என்றுல் யார்? ... 29
24. 'தஸவ்வுப்' என்பது நிருநபி அவர்களின் சுன்னத்தான மார்க்கமே ... 30
25. இந்த ஆத்மார்த்த போதனை உலகம் முடியும் வரை நிலைத்து நிற்கும் ... 31
26. ஆனானின் பயிற்சியின்றி இப்பதவி இல்லை ... 31
27. லக்ஷியத்தை அடைய ஷெய்கின் தொடர்பு அவசியமாகும் ... 32
28. நப்ஸின் தேவை அழிவதே 'பனு'வாகும் ... 32
29. ஆரிபே காமில் தொடர்பின்றி தன்முடிவு ஏற்படாது ... 33
30. வெறுங்கல்லும் மாணிக்கக் கல்லாகும் ... 33
31. இப்னு ஜௌஸி, இப்னு தைமிய்யா ... 34
32. எதார்த்தத்தை மறுப்பது அறியாமையே ... 35
33. எதிர்ப்பவர்களில் பலவகையினர் உண்டு ... 36
34. பொருமையினுல் எதிர்ப்பவர்கள்
35. ஞானம் தெளியும் நல்லோரும் உண்டு ... 37
36. தஸவ்வுப், திருக்குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் பொருத்தமானதாகும் ... 38
37. தஸவ்வுப் மனத்தின் ஒளியாகும் ... 38
38. ஞானவான்களை அணுகித் நியோரை விட்டு விலக வேண்டும் ... 39
39. ஞானவான்களைத் தேடி அடைவது கட்டாயக் கடமை ... 39
40. ஓர் ஆட்சேபனைக்குப் பதில் ... 40
41. இமாம் குஷைரியின் போதனை ... 41
42. சன்மார்க்கத்தை நீடித்து நடத்துவது அல்லா(ஹ்)வின் திட்டமாகும் ... 42
43. ஷெய்கின் அவசியம்பற்றி ஹாபிஜ் இப்னு ஹஜர் (ரஹ்) போதனை ... 43
44. ஸூபிகளின் வழி நபிபெருமான் ஸல்| அவர்களின் நல்வழியாகும் ... 44

45. வாழ்நாளை அரிதாய் எண்ணுக ... 45
46. மனிதனின் மகாத்மியம் ... 46
47. மனை இச்சையை அடக்கவேண்டும் ... 47
48. ஷரீஅத், தரீகத், ஹகீகத், இவற்றின் தூய்மை... 48
49. அன்னிய எண்ணம் நீங்குவதே ஞானப் பரிபக்குவமாகும் ... 48
50. இச்சைக்கு அடிபணிவது மகா பாவமாகும் ... 49
51. அஹ்லுல்லாக்களின் நடைமுறை இல்மையும் கடந்ததாகும் ... 50
52. நப்ஸுக்கு மாறுபாடு செய்வதால் பரவச நிலை (ஹால்) உண்டாகும் ... 51
53. நப்ஸை முஸ்லிம் ஆக்கிக்கொள் ... 51
53. மனத்தை முர்ஷிதே காமிலிடம் ஒப்படைத்துவிடு 51
55. காமில் ஒவ்வொருவரும் தன் காலத்தில் சிறந்தவரேயாவார் ... 52
56. குர்ப்ப ஷுஹூதிக்கு நூரே ஹிதாயத் வேண்டும் ... 53
57. இல்மே காமிலும் இல்மே ஹாலும் ... 54
58. ஹக்கை மறைப்பது உன் உஜூது எனும் நிரையே ... 54
59. 'குர்பை' அறிந்து கொள்வதே குர்பே இலாஹியாகும் ... 55
60. 'பனு பில்லாஹ்' நிலை ... 56
61. இறையருள் இல்லாமல் இந்தப் பதவி சித்தியாகாது ... 56
62. அல்லா(ஹ்)வை அடைவதில் புத்திக்கு இடம்பாடில்லை ... 57
63. ஷரீப் (மெய்ஞ்ஞானி) வஸ்துக்களை ஹக்கைக் கொண்டே அறிகிறார் — 53
64. அன்னியத் தன்மையை நீக்குவதே மனிதனின் பரிபூரணத் தன்மை — 59
65. அவரவர் திறமைக்கேற்ப ஞானம் பிறக்கிறது — 58
66. 'குர்பின்' கடமை அடியான் தன்னை ஹக்கின் நிலையில் அழித்துக்கொள்வதே ஸ் 61
67. அல்லா(ஹ்)வின் தஜல்லி, அடியானின் தராதரத்திற்கு ஏற்பவே உண்டாகும் — 62
68. பல தர்ஜாக்களில் அந்தரங்கம் நிறைந்திருக்கிறது 62
69. ஸ்தூல உணர்வு குழந்தையும் ஆத்ம உணர்வு தாயும் ஆகும் 63
70. இரண்டு வகை உலமாக்கள் நிலை 63
71. இல்மும் அமலும் மஃரிபத்துக்கு வழிகாட்டிகளே 64
72. இன்ஸானே காமில் ஹஜ்ரத் ஜிப்ரயீலைவிட உயர்ந்தவன் 65
73. மனிதன் அல்லா(ஹ்)வின் இரகஸியம் தாங்கியவனுவான் 65
74. கண்ணுக்குக் கண் தெரிவதில்லை 67
75. அல்லாஹ் காணும் காட்சி எது? 67
76. ஒரு கேள்வி 67
77. இதற்குப் பதில் 68
78. அமைதி சிதறும் காரணம் யாது? 69
79. அல்லாஹ்-அய்னுல் இன்ஸான் 70
80. கண், காது, கை, கால் எல்லாம் அவனே 70
81. உலக வாழ்வு கனவுபோன்றது 71
82. வஹ்தத் வெளிப்பட்டால் பன்மை மறைந்து விடும் 73
83. நிர்ணயத்தின் இரண்டு காரணங்கள் 73
84. உள்ளம் கருங்கும்-விரியும் 73
85. மூன்றுவகை முஷாஹதாவில் விலாயத்துப் பதவி உண்டு 74
86. தஜல்லியாத்தை அடைவதே விலாயத் 74
87. நுபுவ்வத் முடிந்து விட்டது. ஆனால்... 75
88. 'பனு' ஆவதற்குக் கராமத்து அவசியமில்லை 75
89. பதவியும் கராமத்தும் வேண்டுவது ஒருவகை வியாதியாகும் ... 76
90. பொதுமக்கள் உறவு நற்பதவியிலிருந்து நீக்கிவிடும் 77
91. வணக்கத்தில் தூய்மையும் பிரியமும் வேண்டும் 77
92. ரியாலத்தின் நோக்கம் இறையுணர்வு பெறுவதே 78
93. அசுத்தம் நீங்கினால் சுத்தம்: இருள் நீங்கினால் ஒளி 79
94. இன்ஸானுக்கு அமரர்கள் ஸஜ்தா செய்ததேன்? 80
95. உள்ளத்தில் ஹக்கைத் தவிர எதற்கும் இடமில்லை 82
96. உள்ளமை ஒழிந்தால்தான் இல்லாமை உண்டாகும் 83
97. ஷரீபின் பேச்சு அந்தரங்கமானது 84
98. மூன்றுவிதமான மரணங்கள் 85
99. மூன்றுவிதமான ஜீவியம் 86
100. பழக்க வழக்கமும் இயற்கையாகிவிடும் 87
101. உன்னையே நீ பரிசுத்தப் படுத்திக்கொள் 88
102. தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிவான் 89
103. உணர்வுள்ள ஞானி சுரங்கம் போன்றவன் 90
104. இரண்டு வகையான ஸாலிக்குகள் 91

105. ஸ்தூல சுத்தம் ஷெய்கின் ஏவலில் அடங்கியிருக்கிறது 91
106. அற்பர்களுக்கு ஞானப் பாக்கியம் எளிதில் கிடைப்பதில்லை 92
107. நபிமார்களும்-ரஸூல்மார்களும் தோன்றியதன் உட்கருத்து 93
108. நற்சகவாசமும் இருவகைக் கஷ்புகளும் 94
109. இல்ஹாமும் வஸ்வஸாவும் என்ன? 95
110. ஹதீஸும், கியாஸும் 96
111. அஹ்லுல்லாக்களை எதிர்ப்பது அல்லா(ஹ்)வை எதிர்ப்பதாகும் 97
112. ஷெய்கின் அந்தரங்கச் சக்தி முரீதுக்குப் பயன்தருகிறது 98
113. அன்னிய சகவாசம் அறவே கூடாது 99
114. இன்னொரு சம்பவம் 99
115. மூன்றுவது சம்பவம் 100
116. தகாதவர்களின் சகவாசத்தால் ஞானியின் மனமும் கெடும் 101
117. ஒதுங்கியிருப்பதே பரிகாரம் 101
118. தனித்திருப்பதில் இரண்டுவகை உண்டு 102
119. அன்னியத் தன்மையை ஒழிப்பது எப்படி? 103
120. இருவகையான முரீதுகள் தன்மை 103
121, நல்ல முரீதைப் பீரே காமில் ஆதரிப்பார் 104
122. நிலைமை மாறுவதும், திருந்துவதும் அல்லா(ஹ்)வின் கிருபை 105
123. முர்ஷிதின் அருட்பார்வையும் தோற்றமும் 106
124. ஷெய்கை சமுகத்தில் 107
125. மகானின் மஜாரில் 107
126. 'நிஸ்பத்' என்னும் வஸீலா 107

மூன்றும் பாகம்

127. ''தனஸ்ஸுலாத்தே லித்தா'' என்னும் ஆறு அரிய ஞானுபதேசங்கள் 109
128. ஞானமார்க்கத்தில் இன்ஸானின் யாத்திரை 110
129. ஹகீகத்தே இன்ஸான் 111
130. மௌலானா ரூமியின் தத்துவம் 111
131. ஓர் உஜூதும் இரண்டு தாத்களும் 112
132. ஆலமே மலக்கூத்-ஆலமே தாஸூத் 115
133. உஜூது தமளஜூதுக்கு உதாரணம் 116
134. குர்பும் மஇயத்தும் 116
135. நூரே முத்லக் 117
136. அந்தரங்க நோக்கை அடையும் வழி 117
137. 'குல்கந்து' போல் மதுரமான ஞானம் 118
138. ஷரீஅத்தின் கட்டளைப்படி நடக்க வேண்டும் 120
139. பிரார்த்தனை 120

பிஸ்மில்லாஹ்

இர்ஷாதாதே ஹபீப்

முதற் பாகம்

முரீதுகளுக்குரிய அத்தியாவசியமான ஒழுக்க முறைகள்

முரீதானவர் தன்னுடைய ஞான குருவாகிய ஷெய்குக்கு மரியாதை புரியும் அளவுக்கேற்ப அவருடைய விசுவாஸமும் பெருகிக் கொண்டே போகும். அந்தக் குரு விசுவாஸம் அதிகரிக்க அதிகரிக்க அத்துணை விரைவில் அவருக்கு ஞானப் பரிபக்குவம் (கமாலியத்) உண்டாகி விடும். ஷரீஅத்து, தரீகத்து, தஸவ்வுப் என்பனவெல்லாம் இந்த ஒழுக்க முறைகளின் சேகரமேயாகும். ஒழுக்க முறைகளைப் பேணிக் காப்பாற்றுதவரையில் ஒரு சிறிது கூட ஞானசித்தி ஏற்படவே முடியாது.

இதையொட்டி ஹஜ்ரத் மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் சொல்லுவதாவது :—

அஸ் குதா க்வாஹேம் தவ்பிகே அதப்
பேஅதப் மஹ்ரூம் மானத்அஸ் லுத்ரே ரப்
பேஅதப் குத்ரா ந தன்ஹா க்வார் கர்த்
பல்கே ஆத்திஷ் தர்ஹமா ஆபாக் கர்த்

இதன் பொருள் :

''மரியாதை செய்யும் பாக்கியத்தை நாம் அல்லாஹுத் தஆலாவிடமிருந்து கேட்டுப் பெறுகிறோம். மரியாதை புரியத் தெரியாதவன் இறைவனின் பேரின்பத்தை இழந்தவனு

வான். ஒழுக்க முறை தெரியாதவன் தன்னை மட்டும் தனியாகக் கெடுத்துக் கொள்வதில்லை. அகில உலகத்துக்குமே தீ வைத்தவனாகிறான்''. மேலும், அபூ ஹபஸ் ஹத்தாது (ரஹ்) அவர்கள், ''அந்தரங்கமான நல்லொழுக்கத்துக்கு வெளிப்படையான நல்லொழுக்க நடைமுறை அடையாளமாயுள்ளது'' என்று அருளியுள்ளார்கள்.

இந்தக் கருத்து,

لَوْخَشَعَ قَلْبُهُ لَخَشَعَ جَوَارِحُهُ

''அவன் மனம் தாழ்ந்து பணிந்தால், அவனுடைய அங்கங்களும் தாழ்ந்து பணிகின்றன'' என்ற ஹதீஸில் வெளியிடப்பட்டுள்ளது.

ஹஜ்ரத் நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், தூர் சீனா மலையில், அல்லாஹ்த் தஆலாவுடன் உரையாடச் சென்றபோது காலணியைக் கழட்டிவிட்டு வெறுங்காலோடு மரியாதையாகச் சென்றார்கள் இதன் இன்பத்தை அவர்களைக் கேட்டாலல்லவோ தெரியும் என்பது ஓர் உருதுப் பாடலின் கருத்தாகும்.

இதையொட்டிய சம்பவம் ஒன்று கூறப்பட்டுள்ளது. அதாவது, அபூஹபஸ் ஹத்தாது (ரஹ்) அவர்கள் ஒருமுறை ஹஜ்ஜுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். போகும் வழியில் பகுதாதுக்குப்போய்ச் சேர்ந்தபோது ஹஜ்ரத் ஜுனைத் பக்தாதி (ரஹ்) அவர்கள் இவர்களை வரவேற்று உபசரித்தார்கள். அப்பொழுது அபூஹபஸ் (ரஹ்) அவர்கள் ஞானகுருவாக இருந்தார்கள். முரீதுகள் வந்து தமது ஷெய்குக்கு எதிரில் பணிந்து வெறுங்காலோடு நின்று மரியாதை புரிந்தார்கள். பயபக்தியோடு பணிவிடை செய்தார்கள். இதைக் கண்டு வியப்படைந்த ஹஜ்ரத் ஜுனைத் (ரஹ்) அவர்கள், ''தாங்கள், நண்பர்களுக்கு ராஜாங்க மரியாதைகள் கற்றுக் கொடுக்கிறீர்களே?'' என்று வினவினார்கள். அதற்கு அவர்கள், ''ஹக்கைத் தேடும் அன்பர்களுக்கு வெளிப்படையான

மரியாதை செய்வது அல்லாஹ்த்தஆலாவுக்குரிய அந்தரங்கமான மரியாதைகளை அனுஷ்டிப்பதற்கு அடையாளமாகும்'' என்று சொன்னார்கள். அப்போது அங்கிருந்த அவர்களுடைய முரீதுகளுள் ஒருவரைக் குறிப்பிட்டு, ''இந்த வாலிபர் தங்களிடத்தில் எவ்வளவுகாலமாக இருக்கின்றார்?'' என்று ஹஜ்ரத் ஜுனைத் (ரஹ்) வினவினார்கள். ''பத்து வருஷங்களாக இருக்கின்றார்'' என்று விடையளித்தார்கள். ''சரி, இந்த வாலிபர்இடத்தில் இன்னும் மேலான மரியாதை முறையும் மேன்மைக்கான பதவியும் உண்டா?'' என்று கேட்டார்கள். இதற்கு அவர்கள், ''ஆமாம், இந்த நண்பர் பதினெண்ணூயிரம் திர்ஹம் (பொற்காசு)களைத் தமது பையிலிருந்து எடுத்து, எங்கள் அவசிய காரியங்களுக்குச் செலவு செய்திருக்கிறார். அது மட்டுமன்று; மேலும் பதினெண்ணூயிரம் பொற்காசுகளை அவர் கடனுகவும் வாங்கிவந்து எங்களிடம் சமர்ப்பித்துள்ளார். இவ்வளவெல்லாம் செய்துள்ள இவர், அந்தப் பணத்தை எங்களிடமிருந்து கேட்கக் கூடத் துணியவில்லை'' என்று விளக்கிச் சொன்னார்கள். ''மஷாயிகுமார்களுக்கு உங்கள் பணத்தைக் கொண்டும் சரீரத்தைக் கொண்டும் ஊழியம் புரியுங்கள். அவர்களுடைய நடவடிக்கை பற்றிக் குற்றம் குறை காணுதீர்கள். அவர்களை நிராகரிப்பவன் (அவநம்பிக்கை கொள்பவன்) ஒருபோதும் ஈடேற்றம் பெற மாட்டான்'' என்று காஜா அப்துல் காலிக் கஜ்தவானி (ரஹ்) அவர்கள் சொல்லியுள்ளார்கள்.

முஹம்மத் பின் புழைல் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ''ஸாலிஹானவர்களின் சகவாசம் கிடைத்து இருந்தும் அவர்களுக்குச் செய்யவேண்டிய ஊழியங்களைச் செய்யாமலிருப்பது கல்வியறிவை அடையப் பெற்றிருந்தும், அதன்படி ஒழுகாமலிருப்பதும் அவ்விதம் ஒழுக்கத்துடன் நடந்தாலும் அதில் சித்த சுத்தியுடன் நடவாமையும் போன்ற துரதிர்ஷ்டமான நிலைமை வேறு எதுவுமே இல்லை'' என்று.

அபூ உமர் ஜுக்காஜி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ''நான் முப்பது வருஷகாலம், ஹஜ்ரத் ஜுனைத் பக்தாதி

(ரஹ்) அவர்களுடைய கக்கூசை என் கைகளால் சுத்தம் செய்து அதனுல் பெருமையடைந்தேன்'' என்று.

ஷெய்கு முஹியித்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் அருளியுள்ளதாவது: ''முரீதுடைய கடமை யாதெனில், தகுதியான ஷெய்கிடம் பைஅத்துப் பெற்று அவரது சமூகத்தைத் தேடி அடையவேண்டும்'' மனப்பூர்வமாக மதித்து அவரை அணுக வேண்டும். கட்டாயத்தின் பேரில் பைஅத்துப் பெறவே கூடாது. தமது ஷெய்கிடம் எந்த விஷயத்தைப் பற்றியும் ஆட்சேபனை இளைப்பக் கூடாது. அவரது வாய் மொழி எதற்கும், குதர்க்கமான பொருள் கூறக் கூடாது. ஷெய்கு அவ்விதம் கூறியதன் 'அஸ்ராரை'(உட்பொருளை)த் தெரிந்துக் கொள்ள முயலவேண்டும். அவரது வெளிப்படையான சொற்களைப் பற்றிப் பிடித்து ஒழுகவேண்டும். அப்போது தான் அவரது சமிக்கைகளின்மீது நீங்கள் வெற்றி பெற முடியும். இந்த அருள் இல்லத்தின் தலைவாசல் உங்களுக்குத் திறந்து கொள்ளும். மேலும், தன்னை மற்ற முரீதுகளை விடத் தாழ்ந்தவனுகவே பாவிக்கவேண்டும். இன்னும் ஷெய்கு அவர்கள் சமூகத்தில் வீற்றிருக்கும்போது தன்னுடைய உரையில் ஷெய்கு அவர்களைத் தவிர வேறுயாருக்குமே எவ்வித உரிமையும் கிடையாது என்று உறுதிக்கொள்ள வேண்டும். விடை கூறித்தான் தீரவேண்டும் என்றபடி எந்தக் கேள்வியும் ஷெய்கு இடத்தில் கேட்கக் கூடாது. ஆனுல், தமக்கு மனத்தில் ஏதேனும் தோன்றினுல் அதை ஷெய்கு அவர்களிடம் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். அதற்கு ஷெய்கு விளக்கம் சொன்னுல் சரி; இல்லாவிட்டால் பதில் சொல்லும்படி வற்புறுத்தவே கூடாது. இப்படிக் கேட்பது மரியாதை கெட்ட தன்மையாகும்.''

மேலும், ஷெய்கு அவர்கள் கற்பித்துக் கொடுத்த நிக்று நியானத்தில் எப்போதும் மனத்தை ஈடுபடுத்தி வைக்க வேண்டும். ஏதேனும் காரியத்தில் மறதி ஏற்பட்டால் அல்லது வேறு சங்கடமான சம்பவம் நிகழ்ந்து விட்டால் நிக்று, நியானத்தில் ஈடுபட்டு விடவேண்டும். மறதி ஏற்படாதிருந்தால் இத்தகைய இன்னல் உண்டாகி இருக்காது, 'கல்பு'

என்னும் இதயத்தில் ஒரே சமயத்தில் இரண்டு காரியங்கள் குடியிருக்கமாட்டா. அதாவது, மனம் நிக்று நியானத்தில் ஈடுபட்டிருக்கும்போது வேறெரு காரியத்தைச் செய்யாது. எனவே, அப்போது கெட்ட ஊசாட்டங்கள் அங்கே உண்டாக மாட்டா.

முரீதுமீதுள்ள மற்றெரு கடமை யாதெனில், ஷெய்குடைய உரையாடலில் வெளிப்படும் எந்த விஷயத்தையும் அவன் சர்ச்சைக்குரியதாக ஆக்கிவிடக் கூடாது. ஷெய்கு அவர்கள் நேர்மைக்கு முரணுக ஒன்றை கூறுவதாகத் தோன்றினுலும், அதுபற்றிய விவாதத்தை உண்டாக்கக் கூடாது. காரணம், ஷெய்கானவர் அப்படிப்பட்ட விஷயத்தையும் ஏதேனுமொரு மஸ்லிஹத் (இணக்கம்) கொண்டு சொல்லியிருக்கவும் கூடும். தர்க்கம் செய்வது ஒருவகையான சச்சரவேயாகும். ஷெய்கிடம் தர்க்கவாதம் செய்வது ஹறாமாகும். சச்சரவு உண்டாக்கும் முரீது ஷைத்தானுக்கு வசப்பட்டவனுவான்.

ஷெய்கிடம் மரியாதைக் குறைவாக நடப்பதால் ஈமானின் ஒளி பறிபடுகிறது

முரீதானவன் நம்பிக்கை உடையவனுக இருக்க வேண்டும்; ஷெய்கின் ரகசியங்களைப் பேணிக் காப்பாற்றவேண்டும்; அனுமதி இல்லாமல் அதை வெளிப்படுத்தக் கூடாது; இவை அவனுடைய தலையாய கடமைகளாகும்.

''ஷெய்குக்குக் கௌரவம் அளிப்பதில் அல்லா(ஹ்)வுக்குக் கௌரவம் அளிப்பது அடங்கி இருக்கிறது. ஷெய்குக்குரிய உரிமைகள் அல்லாஹுத்தஆலாவுக்குரிய உரிமைகளாகும்'' என்று 'புத்துஹாத்' என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளது.

எனவே, ஷெய்குடைய சகவாசத்தில் இருப்பவனுகவும், அவரைப் பின்பற்றி நடப்பவனுகவும் இருந்து அவருக்குக்

கௌரவமும், மரியாதையும் செய்யாத முரீதின் முடிவு பரிதாபகரமானதாக ஆகிவிடும். அதாவது, அவன் இதயம் அல்லா(ஹ்)வுக்குரிய உறைவிடமாக அமைய மாட்டாது. அவன் அல்லாஹுத்தஆலாவுக்குக் கண்ணியமளிக்காதவனுகவும், மறதியாளனுகவும் இருப்பான். எனவே மரியாதை ஒழுக்கமுடையவர்கள் அல்லாஹுத்தஆலா இடத்தில் கண்ணியமுடையவர்களாக இருப்பர். ஷெய்குக்கு மரியாதை செய்யாததைவிட முரீது ஒருவனுக்கு மிகப் பெரிய துரதிர்ஷ்டம் வேறு எதுவுமில்லை. எனவே, முரீது ஒருவன் தன் ஷெய்குக்குக் கௌரவமும், மரியாதையும் செய்யும் பாக்கியத்தை இழந்துவிட்டால், அல்லாஹுத்த ஆலா அவன் உள்ளத்திலிருந்து ஈமானின் ஒளியைப் பறித்துக் கொள்கிறன்.

ஒரு முரீதுடைய உள்ளத்தில் தன் ஷெய்கிடம் மரியாதை இருந்தால்தான் அவன் ஷெய்கின் திருச்சமுகத்தில் நிலைகொள்ள முடியும் இல்லாவிட்டால், அவரது சகவாஸத்தை விட்டு அவன் ஒதுங்கிக் கொள்ளவேண்டும். ஒரு கணமேனும் அவர் முன் இருக்கக் கூடாது. அப்படி இருப்பானுயின் அவனுக்கே அது நீமை பயக்கும். ஏனெனில், ஷெய்கின் சமுகத்தில் இருப்பதனுலாய பயன் இந்த நிபந்தனையின் மீதே விதியாக்கப்பட்டிருக்கிறது. முரீதுடைய உள்ளத்தில் எப்போதும் ஷெய்கு கௌரவிக்கப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். வெளியில் இருக்கும்போது முதலில் ஷெய்கின் கண்ணியத்தை மனத்தில் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். பிறகே அந்தத் திருச் சமுகத்தில் போகவேண்டும்.

முரீதுடைய இலட்சியம் பீரேயாவார்

'ஜவாஹிருஸ் ஸுலூக்' என்னும் நூலில் சொல்லப்பட்டுள்ளதாவது: சகலவிதமான பகிரங்க அந்தரங்க உலக சம்பந்தங்களையும் முறித்தெறிந்து விட்டு வந்தவனே ஆரம்ப சீடன் (முரீதே முப்ததி) ஆவான். மக்களிடம் அவனுக்கு எவ்விதப் பாசமும் இருக்கக்கூடாது. அல்லாஹ் அல்லாதைதைத் திரஸ்கரித்து விட்டுச் சதா சர்வ காலமும் அல்லா(ஹ்)

வின் தியானத்திலும், தொழுகையிலும், நோன்பிலும் ஈடுபட்டிருப்பதே அவன் கருமமாய் இருக்கவேண்டும். எப்போதும் ஒலுவுடன் தோழர்களின் சமுகத்தில் இருக்கவேண்டும். மேலும், அவன் தன்னையே தன்னுடைய சில இலக்ஷியங்களோடு ஷெய்கு அவர்களிடம் ஒப்படைத்து விடவேண்டும். அவன் மனத்தில் ஷெய்கின் லக்ஷியத்தை விட்டு வேறு லக்ஷியம் ஏதேனுமிருந்தால், அவன் அந்த ஷெய்கின் முரீதாக மாட்டான்; தன் இஷ்டத்தின் முரீதாகவே இருப்பான். எனவே, எண்ணங்கள் குடிகொண்டிருப்பது ஒழுக்க முறையாக மாட்டாது. எண்ணங்களை விடுவதே ஒழுக்க முறையாகும் என்பதை முரீது உணரவேண்டும்.

ஷரீஅத்து, கல்வி, குர்ஆன் ஒதுதல் முதலியன நல்ல காரியங்களே. ஆனுல், அல்லா(ஹ்)வை அடைவது வேறு விஷயம்.

நடுத்தரமான முரீது ஒருவனுடைய காரியாதிகள் பக்திவணக்கக்கார ஆதியுடைய விவகாரங்களுக்கு நேர்மாறுனவையாகும். முரீதானவர் சத்தியத்தைத் தேடுபவராவார். அப்படிப்பட்ட சாதகர்க்குப் புறச் சுத்தத்தோடு அகத் தூய்மையும் அவசியமானதாகும். வெறுமனே, திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பதும், நோன்பு நோற்பதும், தொழுது கொள்வதும் மட்டும் அவர்களுடைய வேலைகளாக இருக்கக் கூடாது. ஷரீஅத்துடைய பேணுதலிலும் குர்ஆன் ஒதுவதிலும் ஈடுபட்டிருப்பதும் நல்ல காரியங்களே என்பதில் சந்தேகமில்லை. ஆனுல், அல்லா(ஹ்)வைத் தேடுபவனின் லக்ஷியமே வேறு வகையானதாகும். அது என்னவெனில், ஆசாபாசம், பேராசை, லோபித்தனம், பெருமை, பொருமை, வெளிப்பகட்டு, மோசத்தனம், உண்பது உடுப்பதில் ஆசை, புகழ், நீமைகளில் பற்று ஆகிய இழிகுணங்களை விட்டு மனமும் அந்தரங்கமும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். அத்துடன் புகழத் தக்க நற்குணங்கள் நிறைந்திருக்க வேண்டும். எந்த விஷயங்கள் அவரை இறைவனது தியானத்தை விட்டும்—சத்தியத் தேர்ச்சியை விட்டும்—அப்

பாலாக்குமோ அவ்விஷயங்களை அறிந்து அவர் ஒதுங்கிக் கொள்ளவேண்டும். இது பர்லான கடமை போலாகும். எனவே, எந்தக் காரியம் செய்தாலும் முற்றும் அல்லா(ஹ்) வுக்காகவே செய்ய வேண்டும். காரணம் அவர் அல்லா(ஹ்) வைத் தேடுபவராக இருக்கிறார். சுயநலத்தைத் தேடுபவ ராக இல்லை.

தரீகத்து நிலைத்திருப்பதற்கு ஷெய்கின் தொடர்பு அவசியம்

ஆரம்ப முரீதுக்குத் தரீகத்தில் ஸ்திரமான நிலைபாடு ஏற் படாதவரை ஷெய்கின் நல்லுறவை விட்டுத் தனிமையாய் ஒதுங்கிப் போய் விடக்கூடாது, அப்படிப் போனால், ஷைத் தான் வந்து அவனுடன் உறவுகொண்டு அவனைக் குழப்பத் தில் மூழ்கச் செய்து விடுவான். எனவே, முரீதானவர் தன் னுடைய இனமல்லாத மற்ற அன்னியர்களுடன் சேர்ந்து உட் காருவது மிகக் கெடுதலாகும். உண்மையாளரான நல்ல முரீதுக்குத் தன்னுடைய ஷெய்கின் நற் சகவாஸத்தில் ஒரு நாள் ஈடுபட்டு ஊழியம் புரிவது, நாற்பது சில்லாக்கள் (1600 நாள் தவம்) இருப்பதைவிட மேலானதாகும்.

இபுருஹீம் பின் ஷைபானுல் கிர்மானி (ரஹ்) சொல்லி இருப்பதாக 'நபஹாத்' என்னும் நூலில் இவ்வாறு காணப் படுகிறது:

''தனது ஷெய்குக்குக் கௌரவம் தராதவன் பொய்யி லும் வீண் விதண்டவாதங்களிலுமே சிக்கிச் சீரழிந்து போவான்.''

தன் ஆசானுகிய மகானைப் பின்பற்றி நடந்து அவர் விருப்புக்கும் அருளுக்கும் கட்டுப்பட்டு இருப்பவனுக்கு அல்லாஹுத்தஆலாவின் மகத்தான அருள் உண்டாகும் என்று மஜ்முஉஸ்-ஸுலூக் என்னும் நூலில் கூறப்பட்டிருக்கி றது.

ஒரு வரலாறு:—

முரீதாகிய ஒருவர், தஜ்லா நதியில் மூழ்கி விடும் நிலையில் சிக்கிக் கொண்டிருந்தார். அப்போது தெய்வீகமாக முதலில் ஒரு கை தோன்றியது. அசரீரியாக ''நீ இந்தக் கையை பிடித் துக்கொள். நீ தப்பித்துக் கொள்வாய்'' என்ற சத்தம் வந்த தது. அன்னவர், ''இது யாருடைய கை'' என்று ஒரு கேள்வி கேட்டார். ''இது உன்னுடைய ஆசான்களில் இன் னவருடைய கை'' என்று விடை கிடைத்தது.

இவருக்கு இஷ்டமில்லாததால், அந்தக் கையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளவில்லை. எனவே அந்தக் கை போய் வேறொரு கை தோன்றியது. ''இது யாருடைய கை'' என்று மீண்டும் கேட்டார். ''ஒரு மஹானுடைய திருக்கரம்''என்று பதில் சத்தம் வந்தது. இதையும் அவர் பிடித்துக் கொள்ள வில்லை. மூன்றுவதாக மீண்டும் ஒரு கை தோன்றியது. ''இது யாருடைய கை'' என்றுமுரீது கேட்டார்.''இது உன்னுடைய குருவின் கை'' என்று பதில் சத்தம் வந்தது. உடனே அவர் தன் கையை நீட்டி அந்தக் கையைப் பற்றிக் கொண்டார். இதனால் தண்ணீரில் மூழ்கிப் போவதிலிருந்து தப்பினார்.

பிறகு அவர், தம்முடைய குருவின் சமூகத்தில் போய் நிகழ்ந்த சம்பவத்தை எடுத்துரைத்தார். இதைக்கேட்டுப் பீர் அவர்கள்நீ உன்னுடைய கையை வேறுகைகளிடம் கொடுத்தி ருப்பாயானால் நீமார்தூதாக(தள்ளப்பட்டவனாக)ப் போயிருப் பாய். அந்தக் கை எனக்கு வழிகாட்டிய பெரியோர்களுடைய கைகளாய் இருந்தும், நீ உன்னுடைய கையை என் கையில் தான் கொடுத்தாய் நீ செய்தது தான் மரியாதையான நற் செயல்'' என்று விளக்கம் கூறினார்கள்.

ஹஜ்ரத் ரூமி (ரஹ்) அவர்கள் சொல்லுகிறார்கள்:''ஒப்புக் கொள்ளப்பட்ட நல்ல முரீது உடைய அடையாளம் யாதெ னில், அவர் ஒரு போதும் அன்னியரின் 'சகவாசத்தில் உட் கார்ந்திருக்கமாட்டார். அன்னியர்களிடம் உட்காரவேண்டிய

அவசியம் ஏற்பட்டு விட்டால் வஞ்சகன் பள்ளிவாசலில் உட்காருவதை போலவும், படிப்பை வெறுக்கும் சிறுவன் பள்ளி கூடத்தில் உட்காருவதைப் போலவும், கைதி சிறைக்குள் இருப்பது போலவும் இருப்பார்.

ஹஜ்ரத் துன்னூன் மிஸ்ரி(ரஹ்) அவர்கள் சொல்லுகிறார்கள்: ''முரீதானவன் தன்னுடைய ஷெய்குக்குரிய மரியாதை ஒழுக்கத்தை விட்டுவிட்டால், அவன் முன்னிருந்த இடத்துக்கே போய் சேர்ந்து விடுவான். ஏனெனில், அவன் உயர் பதவிக்கு வரத்தக்க காரியம் இந்த ஒழுக்கமேயாகும். இந்த நல்லிணக்கிடையில் இல்லாமல் போனால் அவன் பழைய நிலைமைக்கேபோய் சேர்த்து விடுகின்றான். ஏனெனில், ஷெய்குக்குரிய உரிமைகள் நபிமார்களுக்குரிய உரிமைகளைப் போன்ற வைகளாகும் என்று பெரியோர்கள் கூறி இருக்கிறார்கள்.''

''முரீது ஒருவர் இருக்கிறார். இவர் அதிகம் தொழுது வணங்கும் வணக்கஸ்தனுகவுமிருக்கிறார். ஆனால் ஷெய்கிடம் இருக்கவேண்டிய விசுவாஸம் இவரிடம் மிக குறைவு. மற்றொரு முரீதிடம் இந்த விசுவாஸம் மிக அதிகமாய் உண்டு. ஆனால் தொழுகை வணக்கம் முதலியவைகளில் அதிகப் பிரியமில்லை. இந்த இரண்டு பேர்களிலும்யாருடைய பதவி உயர்தரமானது என்று சுல்தானுல் மஷாயிக் (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்டது.

அதற்கு அவர்கள்: ''தன் ஷெய்கிடம் அதிகப் பிரியமும் அதிதாவும் உடைய முரீதின் பதவி மற்றவரின் பதவியை விட உயர்வானதாகும். ஏனெனில், இவ்வுயரியவரின் தூய்மையான நல்ல நேரம் அன்னவரின் பராக்கான நேரங்களைவிட மிகச் சிறந்ததாகும்'' என்று விடையிறுத்தார்கள்.

ஹஜ்ரத் முஜத்தித் அல்புஸானி (ரஹ்) அவர்கள் தமது புனித மல்பூஜாத்தில் ஓர் இடத்தில் சொல்லியிருப்பதாவது: ''பகிரங்கமான சொத்தும் செல்வமும் எந்த இடத்திலிருந்து கிடைத்தபோதிலும் சரியே, அது தன்னுடைய ஷெய்கின்

(துஆவின்) பொருட்டாலேயே கிடைத்தது என்று எண்ண வேண்டும். ஏனெனில், அதற்குத் தகுதியானவர் அவரேதான் எந்த விஷயமும் ஒழுங்காகிப் பரிரங்கத்துக்கு வந்தாலும் அந்த உண்மை அவருடையதேயாகும். இப்படிக் கருதுவது ஞான சீடர்களின் தகுதிக்கு அடையாளமாகும். இதை உணர்ந்து ஒழுகிக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் பகைவனான ஷைத்தான் சமயம்பார்த்து இவனைக் குழப்பத்திலாக்கி வழி கெடுத்து விடுவான்.''

தன் ஷெய்கினால் ஒப்புக்கொள்ளப்பட்டால் . . .

''ஒரே இடத்தில் நிலைப்பவன் எல்லா இடத்திலும் இருப்பான். எல்லா இடத்திலுமிருப்பவன் ஓர் இடத்திலும் நிலைக்க மாட்டான்'' என்பது பார்ஸி முது மொழியொன்றின் கருத்தாகும். அதாவது தன்னுடைய ஷெய்கினால் ஒப்புக்கொள்ளப்பட்டவன் சகல ஷெய்குமார்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டவனுவான். தன்னுடைய குருவினால் வெறுத்துத் தள்ளப்பட்டவன் யாவராலும் வெறுத்துத் தள்ளப்பட்டவனேயாவான்.

முரீது யாரேனும் தன்னுடைய ஷெய்கின் சந்நிதானத்திலிருந்து தள்ளப்படுவாராயின், அவரே வேறெந்த ஷெய்குமார்களும் ஓர் அளவுக்குக்கூட உயர்த்திவைக்க முடியாது. ஆனால், நல்ல முரீது தன் ஷெய்கின் நல்லுறவால் பயிற்சி பெற்றவராய் இருந்து ஏதோ ஒரு சங்கடமான காரணத்தினால் மேற்பதவிக்குக்குப்போக முடியாமல் நின்றுவிட்டால், பிறகு இவர் வேறொரு ஷெய்கிடம் போய்ச் சேர்ந்து கொண்டால், இவர்மீது குற்றம் கிடையாது. ஒருக்கால் இந்தப் புது ஷெய்கு இவரைக் கடைத்தேறச் செய்து உன்னத நிலைக்குக் கொண்டுவர முடியலாம். எனினும், அம்முரீதுமீது கடமை யாதெனில், இந்தப் புது ஷெய்கின் சகவாஸத்தின் பொருட்டால் கிடைக்கும் அருள்பாக்கியங்களையும் தம் முந்திய ஷெய்கின் அருள்பாக்கியத்தினால் (ஒப்புக்கொள்ளப் பட்டதால்) கிடைத்ததென்றே கருதவேண்டும். இவ்வாறு பெரியார்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஹஜ்ரத் முஜத்தித் அல்புஸானி (ரஹ்) அவர்கள் சொல்வ
தாவது; ''ஷெய்கானவர் அல்லா(ஹ்)வின் ரஸூலின் பிரதி
நிதியாவார். இவரைப் பின்பற்றிப் பதவிகளைப் பேணிக்காப்
பதும் அல்லாஹ் ரஸூலுக்கு வழிப்பட்டு நடப்பதேயாகும்.
அனுப்பப்பட்டவர்க்கு மரியாதை செய்வது அனுப்பியவருக்கு
மரியாதை செய்வதாகும்.

தரீகத்துடைய நடைமுறைகள் இந்த வழிபாட்டைத்
தவிர வேறு வகையில் சாத்தியமில்லை. ஆகையினால், முரீதா
னவர் மற்றெல்லாப் புறத்திலிருந்தும் முகத்தைத் திருப்பிக்
கொண்டு தன்னுடைய ஷெய்கின் பக்கம் முகம் நோக்கி
இருக்கவேண்டும். ஷெய்கு அவர்களுடைய சமூகத்திலிருக்கும்
போது அவர்களது அனுமதி இல்லாமல் நபில் தொழுவதும்,
வேறு திக்குறுகள் செய்வதும் கூடா. அவர்களது திருமுகத்
தைத் தவிர வேறு பக்கங்களில் கவனத்தைச் செலுத்தக்
கூடாது. பார்வை சுன்னத்தான தொழுகைகளைத் தவிர வேறு
தொழுகைகளை அவர்களுடைய சமூகத்தில் தொழக்
கூடாது.''

'ஸுபில்' என்ற நூலில் சொல்லப்பட்டிருப்பதாவது:
''சத்தியவான்களான முரீதுகள் தம்முடைய ஷெய்கின்
போதனையான திக்று, அவுறாதுகளில் ஈமானுடைய பேரின்
பத்தை அடைகிறார்கள். அல்லாஹுத்தஆலாவின் திருப்
பெயரையும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய திருப்
பெயரையும் உச்சரிக்கும்போது இவர்கள் அடையும் பேரின்
பத்தையே ஷெய்கு மஷாயிக் உடைய திருப்பெயரைச்
சொல்லும்போதும் அடைகிறார்கள். ஷெய்கின் திருப்பெய
ரைத் தியானிப்பதில் ஈமான் வளர்ச்சி அடைகிறது.

مَنْ اَحَبَّ شَيْئًا فَاَكْثَرَ ذِكْرَهٗ

''ஒருவர் ஒன்றைப்பற்றிப் பிரியம் கொண்டிருந்
தால் அதைப்பற்றி அதிகம் தியானிப்பாராக! இது
தான் முஹப்பத்துக்குரிய அடையாளம், இலட்சியம்
யாவுமாகும்.''

ஆஷிக்கானவன்(காதலன்) தன்னுடைய மஃஷூக்கையே
(காதலியையே) அதிகம் நினைத்து உருகுவதில் அடையும்
இன்பத்தை யாரே அறிவர்! அவன் அப்பெயரைத் தியானிப்
பதில் ஒருக்காலும் சோர்வு அடைவதே இல்லை.

முரீதானவர் சதாவும் தமது ஷெய்கின் வீட்டு வாசற்
படியிலேயே சேவை செய்து கொண்டிருக்கவேண்டும்.

தன்னுடைய காரியாதிகள் அனைத்தின் லக்ஷியம் அந்த
வாசற்படியிலிருந்தே கிடைக்கும் என்று நிடநம்பிக்கை
கொள்ளவேண்டும். ஹஜ்ரத் ஜுனைத் (ரஹ்) அவர்களிடம்,
''தாங்கள் இவ்வளவு பெரிய பதவியை எந்தநற்செய்கையால்
அடையப்பெற்றீர்கள்'' என்று கேட்கப்பட்டதற்கு அவர்கள்
இவ்வாறு பதில் அளித்தார்கள். ''நான் நாற்பது ஆண்டு
காலம் எனது குருநாதரான ஸிர்ரிஸக்தி (ரஹ்) அவர்களு
டைய வாசற்படியில் ஒற்றைக்காலில் நின்று காத்துக்கொண்
டிருந்தேன். என்னுடைய கோரிக்கைகளை அந்தத் தலைவாசலி
லிருந்தே வேண்டிக்கொண்டிருந்தேன். இறுதியில், நான்
வேண்டிக்கொண்டது எனக்குக் கிடைத்துவிட்டது.''

முரீதானவர் தன் ஷெய்கின் சமூகத்தில் தன்பொருள்
கௌரவம், உயிர் அனைத்தையும் அர்ப்பணஞ் செய்யத் தயங்
கக்கூடாது. இவைகளைத் தியாகம் செய்வதால் இருலோகத்
துப் பாக்கியங்களும் சித்தியாவதாக உணரவேண்டும்.

மேலும், முரீதானவர் ஷெய்கின் சொற்கள், செயல்கள்,
நிலைகள் எதைப்பற்றியும் ஒருவிதக் குறையும் கூறக்கூடாது.
அனைவையாவும் நேர்மையானவை என்று எண்ணவேண்டும்.
ஏனெனில், காமிலான உத்தம ஷெய்கின் நாட்டமெல்லாம்
அல்லாஹுத்தஆலாவின் நாட்டத்தில் மறைந்து அழிந்து
போய்விடும். எனவே, அல்லாஹுத்த ஆலாவின் இஷ்டமில்
லாமல் நடக்காது. அவர் முரீது விஷயத்தில் செய்யும் காரிய
மெல்லாம் நேர்மையானதேயாகும். இதன் உட்கருத்து ஷரீ
அத்தில் முரீதுக்கு விளங்காதாயினும், பிறகு போகப்போக
அந்த ரகசியங்கள் விளக்கமாகும்.

புதிய முரீது பழைய முரீதைப் பின்பற்றக் கூடாது

முரீதானவர் ஷெய்கின் குணங்களிலோ, செயல்களிலோ குற்றம் கண்டு பிடிக்கும் குறுகிய கண்கொண்டு பார்க்கக் கூடாது. வாய்திறந்து ஏதும் குறை சொல்லக்கூடாது. ஷெய்கு செய்யும் ஏதாவது ஒரு காரியம் பகிரங்கத்தில் தீங்கானதாகத் தோன்றினாலும் உண்மையில் அது மிகவும் நல்லதாகவே இருக்கும் என்பதை உறுதியாக நம்பவேண்டும்.

ஷெய்கின்மீது குறை கூறுபவன் அதே குறைக்கு ஆளாக நேரும். ஆரம்ப நிலையிலுள்ள புதிய முரீது பக்குவமடைந்த பழைய முரீதைப் பின்பற்றி நன் முயற்சியையும், தவத்தை யும், கடமையையும் கைவிட்டு விடக்கூடாது. ஏனெனில், பழைய முரீதுக்குப் பயன்தரும் சில விஷயங்கள் புதிய முரீதுக்குத் தீமையை உண்டாக்கிவிடும்.

எந்த ஒரு விஷயத்திலும் ஷெய்கைப் பரீட்சித்துப் பார்க்க கூடாது. ஏனெனில், பரீட்சித்துப் பார்ப்பது அனுவியத் தலீலீடேயாகும். பக்குவமற்ற ஒருவர் பக்குவமடைந்தவர் களைச் சோதிக்க முடியாது.

அதிகாரிக்கு மரியாதை செய்வது அரசருக்கு மரியாதை செய்வதாகும்

ஷெய்கானவர், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய பிரதிநிதியாவார். இவரைப் பின்பற்றி நடப்பதும், மரியாதை செலுத்துவதும் அல்லாஹ் ரசூலுக்கு வழிப்பட்டு நடப்பது போலாகும். எனவே, அதிகாரிக்கு மரியாதை செய்வது அரசருக்கு மரியாதை செய்வதாகும்.

ஒருவருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்ட பிறகு, அதன் கண்ணியத்தைக் காப்பாற்றும் முறையில் நடப்பது அவசியமாகும். நடைமுறையில் வெறுப்பு ஏற்படாமல் கவ னித்துக் கொள்ள வேண்டும். வெறுப்பு என்பது அன்புக்கு எதிரிடையானது தானே! இதனால் விசுவாசமே நாசமாகி

விடும். விசுவாசம் போய்விட்டால், பிறகு தொடர்பு மட்டும் நீடிப்பது எங்ஙனம்?

பத்து வகை ஞான ஒழுக்கங்கள்

'மஜ்மு உஸ்ஸுலூக்' என்னும் நூலில் பத்து வகை ஞான ஒழுக்கங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. அதில் கூறப்பட்டிருப்ப தாவது:

ஸூபியாக்களான நாதாக்கள் 'தஸவ்வுப்' என்னும் ஞானமார்க்கத்தின் செயல் முறைகளைப் பகிரங்கத்தில் ஐந் தாகவும், அந்தரங்கத்தில் ஐந்தாகவும் வகுத்துக் கூறியிருக் கிறார்கள். பகிரங்கத்திலுள்ள ஐந்தாவது:

1. ஷெய்குக்கும், மார்க்கத் தோழர்களுக்கும், பலஹீன மான எளியவர்க்கும் தொண்டு செய்யவேண்டும்.

2. ஞானநாதரான ஷெய்கு ஒருவருடைய ஞான போதனைகளை அடையப் பெறவேண்டும்.

3. வழிபாடு, வணக்கம், ஒழுக்கம் இவைகளைத் தவிர் திருந்து அதிகமாகச் செய்யவேண்டும். திக்று, பிக்று, முரா கபா என்னும் ஜப, தப தியானத்திலும் அதிகம் ஈடுபட வேண்டும்.

4. ஷெய்கின் சமூகத்தில் இணைந்திருக்கவேண்டும். அவ ருக்கு செய்யவேண்டிய தொண்டுகளைச் செய்து முடிக்கவேண் டும். இந்நற்செயலைக் கட்டாயமின்றிப் பலாத்காரமின்றி, வெறுப்பின்றி, தன்னலமின்றி மனப்பூர்வமாய்ச் செய்யவேண் டும். பிரேதம் குளிப்பாட்டுகிறவர்களின் கைகளில் இடப்பது போல் ஷெய்கிடம் இடக்கவேண்டும்.

5. தானதருமம் புரிவதில் மிகத் தீவிரமாக இருக்க வேண்டும். பரோபகாரத்தோடும் தியாகச் சிந்தையோடும் நடந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறே அந்தரங்கத்தில், ஞானமார்க்கத்தின் நடை முறை ஐந்தாகும்.

1. ஷரீஅத்தினதும், தரீகத்தினதும் அஹ்காம் என்னும் ஏவல் விலக்கல்களை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும்.

2. அந்த ஏவல் விலக்கல்களை மனப்பூர்வமாகவும், தூய எண்ணத்துடனும் நிறைவேற்றி வரவேண்டும்.

3. தன்னுடைய உள்ளத்தில் பரவச நிலையை உண்டாக்கிக்கொள்ளவேண்டும்.

4. கல்பு என்னும் இதயத்தினுள் இடம்பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. ஹக்குத்தஆலாவின் மஃரிபத் என்னும் [illegible] ஞானத்தை அடையவேண்டும். ஞான வழிப்படி [illegible]க்கும் முரீதுடைய தன்மையில் இந்த ஐவகை பகிரங்க அந்தரங்க நடைமுறைகள் அமையாத வரையில் அவரை ''ஸூபி'' (ஞானி) என்று சொல்லமுடியாது. ஒரு குறிப்பிட்ட விஷயத்தை அடையப் பெற வேண்மானால், அதற்கு இந்த நிபந்தனைகள் வேண்டும். இது தவறிப்போனால் அசலான விஷயமே தவறிப்போய் விடும்.

ஷெய்குக்குத் தொண்டு செய்வதால் நற்பாக்கிய முண்டாகும்

நவாப் இஜ்ஜத்துல்லாஹ்கான், ஹஜ்ரத் ஷாஹ்யூசுப் கலந்தக (ரஹ்) என்ற ஞானிகள் நாயகத்தின் முரீதுகளுள் ஒருவராய் இருந்தார். ஒரு நாள் ஹஜ்ரத் கலந்தர், இவரிடம் ''எனக்குப் பணிப்பெண்கள் இருவர் வேண்டும். குறிப்பிட்ட காலம் வரை என் வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்காகவே அவர்கள் தேவைப்படுகின்றனர்'' என்று கேட்டுக்கொண்டார்கள். நவாப் சாஹிப் ஜஹானாபாதிலிருந்த தமது கன்னியர்களான இரண்டு புதல்வியரையும் அவசியமான

சாமான்களுடன் ஹஜ்ரத் கலந்தர் அவர்களிடம் அனுப்பி வைத்தார். ''நான் இந்தப் பெண்களைத் தங்களுக்கு வேண்டிய 'ஒலு'ச் செய்வதற்கான தண்ணீர் முதலியன கொண்டு வந்து கொடுக்கும் வேலைக்காக அனுப்பியிருக்கிறேன்'' என்று நவாப் சாஹிப் சொல்லியனுப்பியிருந்தார்.

இப்பெண்கள் ஹஜ்ரத் அவர்களிடம் வந்து மிகமிக நல்ல முறையில் நடந்துகொண்டனர். வேலை முடிந்தபின் அந்தப் பெண்களைத் திருப்பி அரண்மனைக்கு அனுப்பிவிட ஹஜ்ரத் அவர்களுக்கு மனம் வரவில்லை. எனவே, அவ்விரண்டு பெண்களையும் தம்முடைய இரண்டு புதல்வர்களுக்கும் திருமணம் செய்து வைத்துக்கொண்டார்கள்.

இவ்வியப்பான செய்தி ஆலம்கீர் ஔரங்கசீப் மன்னருக்குத் தெரிய வந்தது. அவர் நவாப் சாஹிபுக்கு விடுத்த செய்தியாவது: ''இந்த எளிய பக்கீருடன் சம்பந்தம் கொள்வதற்காக, உமது பெண்களை அங்கே அனுப்பியிருக்கிறீர். உமக்கும் பக்கீர்களுக்கும் என்ன சம்பந்தம்?''

இதற்கு நவாப் சாஹிப் சொன்னார்:

''உண்மையில் நான் பக்கீர் (மகான்)களுடன் சம்பந்தி உறவு கொள்ள வேண்டுமென்று என் புதல்வியரை அங்கே அனுப்பவில்லை. அவர்களுக்கு ஒலுவுக்குத் தண்ணீர்கொண்டு வந்து கொடுக்கும் பணிவிடைக்கே அப்பெண்களை அனுப்பி வைத்தேன்'' என்று.

அதுகேட்ட மன்னர் மௌனமாகிவிட்டார். நவாப் சாஹிப் அரசவைப் பிரபுவாய் இருந்தும் பகிரங்கமான கௌரவத்தைப் பெரிதாக மதிக்கவில்லை. தமது குருநாதருக்குப் பணிவிடை செய்வதையே பெரிதாக எண்ணினார். அதனால் நற்பாக்கியம் அடைந்தார். இதில் நவாப் சாஹிபுடைய விசுவாசமும் குரு பக்தியும் வெளிப்படுகின்றன. (இந்த வரலாறு 'மனாக்கிபுல் அஸ்பியா' என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.)

ஷெய்கின் தரிசனமே மாபெரும் பாக்கியமாகும்

ஹஜ்ரத் ஷெய்குல் இஸ்லாம் அவர்கள் சொல்வதாவது: ''விசுவாசமுடையவர்களுக்குச் சம்பந்தமுடைய 'கிப்லா' என்னும் உறைவிடம் ஷெய்கின் முகதரிசனமும், அவர் சகவாசமுமேயாகும். ஷெய்கைத் தரிசிப்பது அவர்களுடைய கடமைகளுள் ஒன்றாகும். குருநாதரின் முக தரிசனத்தால் அவர்களுக்குக் கிடைக்கும் மகாபேறு வேறு எதனாலும் அவர்களுக்குக் கிட்டி விடுவதில்லை,''

மேலும், அவர்கள் கூறியிருப்பதாவது: ''யா அல்லாஹ், நீ உன் நல்லடியார்களுக்கு அருள்புரிகின்ற நற்சாதனம் மிக மேலானது, உன்னை அடைய விரும்பி முயற்சிப்பவர் உன்னை அடையப் பெறுகிறார். உன்னைக் காணுதவரை அவர் உன்னை நன்கறிந்து கொள்வதில்லை''.

எனவே, முரீதானவர் ஷெய்கின் திருமுகத்தைக் 'கிப்லா' வாகவும், அவருடைய இல்லத்தைக் 'கஃபா' வாகவும் மானஸீகமாய்ப் பாவித்துக் கொள்ளவேண்டும்.

நான்குவகைக் கிப்லா

காஜா ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்கள், தங்கள் நூலில் கிப்லா நான்கு வகைப்படும் என்று கூறி, அவற்றை இவ்வாறு விவரப் படுத்தியுள்ளார்கள்:

முதலாவது கிப்லா: சடதத்துவ உலகில் உள்ளதாகும். இதை நோக்கி நின்று முஸ்லீம்கள் அனைவரும் தமது தொழுகையை நிறைவேற்ற வேண்டுவது பர்லு எனும் முக்கிய கடமையாகும்.

இரண்டாவது கிப்லா: கல்பு என்னும் உள்ளமாகும். மெய்ஞ்ஞானிகளான தரீகத்துடையவர்களின் முழுக் கவனமும் இதன் பக்கமே சார்ந்திருக்கும். இதிலேயே அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள்.

மூன்றாவது கிப்லா, ஷெய்கு ஆவார். முரீதுகளுடைய முழு கவனமும் எப்போதும் ஷெய்கின் பக்கமே இருக்கும். நான்காவது கிப்லா: வஜ்ஹுல்லாஹ் (அல்லா(ஹ்)வின் திருவதனம்) ஆகும். இது எல்லாக் கிப்லாக்களையும் அடையவைத்து, பிறவற்றை இல்லாமலாக்குவதாகும்.

''மஃஷூக் (காதலி) உடைய பேரழகை (ஜமாலை)த் தவிர வேறு கிப்லா இல்லை. எனவே, இஷ்க் என்னும் காதல் உண்டாகி ஏற்கனவே இருந்த கிப்லாக்களை இல்லாமலாக்கி விட்டது'' என்பது பாரஸீக கவிதை யொன்றின் கருத்தாகும்.

முஜாஹிதாக்களாலேயே முஷாஹதா கைகூடும்

முரீதுகள் மீதுள்ள மற்றொரு கடமையாவது: அல்லா(ஹ்)வின் திருச்சந்நிதியின் பரிச்சயமுடைய உத்தமர்களைப் பரிகாசமோ, மரியாதைக் குறைவோ செய்யக்கூடாது. அவர்களைக் கண்டுஅச்சப்பட வேண்டும். ஏனெனில், அவர்கள் ஸைபுல்லாஹ் (அல்லா(ஹ்)வின் வாளாயுதம்) ஆவர். அல்லா(ஹ்)வின்வாளாயுதத்திலிருந்து நாம் தப்பிக்க வேண்டுமல்லவா ?

மேலும், சொல்லாலோ,செயலாலோ ஷெய்க்கு எவ்வித எதிர்ப்பும் புரியக்கூடாது. ஷெய்கு கட்டளையிடுபவர். முரீது அக்கட்டளைப்படி நடக்க வேண்டியவர். அவர் ஆமிர், இவர் மஃமூர், ஷெய்கு புறத்திலிருந்து உண்டாகும் ஒரு காரியம் அல்லாஹ் இடமிருந்து உண்டாகும் ஒரு காரியம் போலாகும். ஷெய்கு எதைப்பற்றி கட்டளையிட்டாலும் உடனே அதைத் தாமதமின்றியும் தடையின்றியும் நிறைவேற்ற வேண்டும்.

முரீது, தன்னுடைய இச்சையின் ஊசாட்டங்களை அடக்கியாளவேண்டும். இச்சையை அடக்கிவைப்பது சைத்தானை விரட்டியடிப்பது போலாகும். அதைவிடக் கடினமான வேலை என்றும் சொல்லலாம்.

சீடனே, நீ உன் இச்சையை பற்பலவிதமான முஜாஹிதாக்களால் (சத்முயற்சிகளால்) வசமாக்கமுயல். ஏனென்றால், முஜாஹிதாவை (சத்முயற்சியை)க் கொண்டுதான் ஞான திருஷ்டி உண்டாகும். எனவே நீ உன் லக்ஷியத்தை அடைய வேண்டுமானால் உன் நப்ஸுக்கு மாறுபாடு செய்துவா! பணிவை மேற்கொண்டு நீ மண்ணைப் போலாகிவிடு. முதியவர், வாலிபர் அனைவரும் அந்த மண்ணின் மீது கால் வைத்து நடந்து போகட்டும்!

ரப்புடைய ஸிர்ருகளை வெளியிடுவது குப்ராகும்

முரீதானவன், தன்னுடைய ஷெய்குக்கோ, ஷெய்குடைய கலீபாவுக்கோ ஏதேனும் தீங்கு விளைவிப்பானுயின், அவன் அல்லா(ஹ்)வுக்கும் ரஸூலுக்கும் தீங்கு விளைவித்தவனுவான். இம்மையிலும், மறுமையிலும் அவனுக்கு மாபெரும் நஷ்டமே உண்டாகும். தன் ஷெய்குடைய அல்லது கலீபா உடைய நடத்தையில் குற்றம் தேடுபவன், அதனுல் தான் எந்த நற் பயனையும் அடைய முடியாது.

எனவே, முரீது தம்முடைய ஷெய்குக்கு முற்றும் வழி பட்டு நடப்பாரானுல், இவர் கோரிய லக்ஷியத்தை நிச்சயம் அடைய முடியும்.

ஒருவருக்கு குஃபியத்துடைய அஸ்ராருகள், ஓரளவு தெரிய வந்திருந்தால், அதை அமானத்தாக மனத்தில் பாதுகாத்து வைக்கவேண்டும். அந்தப் பரம ரகஸியங்களை வெளிப்படுத்துவது தரீகத்தில் ஜாயிஸ் ஆகமாட்டாது. மீறிச் சொன்னுல் 'குர்பே இலாஹி'யுடைய பதவியிலிருந்து அவர் வீழ்ந்து போவார்.

''அஸ்ராரே குஃபியத்தை வெளிப்படுத்திச் சொல்லிக் கொண்டிருப்பது குப்ரு'' என்று ஹதீதிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஷெய்குடன் அமர்ந்திருப்பது ஸுன்னத் முஅக்கிதாவாகும்

காஜா அலாவுத்தீன் அத்தா (ரஹ்) சொல்வதாவது: ''முரீதானவர் ஷெய்கின் சமுகத்தில் அமர்ந்திருப்பது ஸுன்னத்தே முஅக்கிதாவாகும். இங்ஙனம் அமல் செய்யத் தினமும் முடியாவிட்டால் மாதத்துக்கு இரண்டு முறை அல்லது ஒருமுறையாவது செய்ய வேண்டும். இதுவும் முடியாவிட்டால் கடிதப் போக்குவரத்திலாவது தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் 'முற்றும் மறைவு' என்ற குறைபாடு நேரிடாது.

ஏ நண்பனே, அஹ்லுல்லாக்களாகிய பெரியோர்களுடைய வெளிக்கோலத்தின் மீது கண்ணேட்டமிடுபவன், நன்மையை இழந்தவனுவான்; இம்மை-மறுமை இரண்டிலும் நஷ்டம் அடைந்தவனுவான். இம்மாதிரி நிருநபி (ஸல்) அவர்களின் வெளித் தோற்றத்தைக் கண்ணேட்டமிட்டுத்தான் அபூஜஹலும் அபூதாலிபும் இஸ்லாமிய பாக்கியத்தை இழந்து விட்டார்கள். எனவே, அல்லா(ஹ்)வின் நல்லடியார்களுடைய வெளித் தோற்றத்தினை ஆராயாமல் இருப்பதுவே ஒரு நற்பாக்கியந்தான். நல்லவர்களின் பார்வை எப்போதும், பெரியோர்களுடைய அந்தரங்க குணங்களின் மீதே சென்று அந்த அந்தரங்கத்துடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

பெரியோர்களுடைய அந்தரங்கமானது நீல் நதியின் பிரவாகம் போன்றதாகும். இப்பிரவாகம் தகாதவர்களுக்குத் துன்பமாகவும், நண்பர்களுக்குத் தண்ணீராகவும் பயனளிக்கும்.

'ஸிபாத்தே பஷ்ரியத்—பஷரீ என்னும் மனிதப் பண்பு அஹ்லுல்லாக்களிடம் காணப்படும் அளவுக்கு, வெளிப்படையானவர்களில் காணப்படுவதில்லை. மேடு பள்ளமான இடத்தில் விழும் இருளைவிடச் சரிசமமான இடத்தில் விழும் இருளானது பட்டவர்த்தனமாகவும் தெளிவாகவும் எடுப்பாகவும்

தெரியும்; ஆனால், மனிதப் பண்பாட்டில் தோன்றும் இருளானது, சரிசமமான முறையில் எங்கும் பரவி வியாபித்ததைப் போல் காணப்படும். இது சில சமயங்களில் 'கல்பு, ரூஹு' என்னும் உடல் உயிர் இரண்டையும் அடைய வந்தடைந்துகொள்கிறது. இது பாமரர்களின் தன்மையாகும்.

'கவாஸ்' என்னும் சிறப்புற்றவர்களிடம் இந்த இருளானது ஸ்தூலம், நப்ஸுவரை போய், எல்லை வகுத்துக்கொண்டு நின்று விடும்; உள்ளே பாயாது.

'அகஸ்ஸுல் கவாஸ்' என்னும் சிறப்புடையவர்களிலும் மிகச் சிறப்பானவர்கள் விஷயத்தில், இந்த இருளானது 'நப்ஸ்'வரைக்கும் கூடப் போகாது. இவர்களின் உள்ளம் பரிசுத்தமாகவே இருக்கும். வெளி ஸ்தூலத்தில் மட்டும் பட்டு நின்றுவிடும்.

'அவாம்' என்னும் பாமரர்களில் இந்த இருளானது முற்றும் பாய்ந்து நஷ்டத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்கும். அல்லா(ஹ்)வின் நல்லடியார்களான அந்தக் 'கவாஸ்' விஷயத்தில் இந்த இருள் நெருங்கினாலும் கமாலியத்தால் அவர் பரிபக்குவமடைகிறார். சிறப்புற்றவர்களின்இந்தத் தன்மை, பாமரர்களின் இருளையும் துரத்தி, அவர்களின் உள்ளத்தையும் உயிரையும் தூய்மைப் படுத்தும். அவர்களுடைய மனத்தைத் தெளிவாக்கி, இச்சையைப் பரிசுத்தப் படுத்திவிடும்.

அங்ஙனம் கவாஸ்களின் உள்ளத்தில் இவ்வித இருள் இல்லாதிருந்தால், அவாம்களுக்கும் கவாஸ்களுக்கும் சம்பந்தமே இருக்காது. 'நன்மை அடைதல்—நன்மை அளித்தல்' என்ற வழிமுறையும் அடைபட்டுப் போகும். எனவே, இந்த இருள் சிறந்தவர்களைக் களங்கப்படுத்தி விடக்கூடிய அளவுக்கு அவர்களிடம் நீடித்திருக்க மாட்டாது. அப்படி உண்டானாலும், உடனே அவர்கள் புரியும் பாவமன்னிப்பு, பச்சாத்தாபம், (இஸ்திக்பார் —தவ்பா) ஆகிய காரணங்களால், அந்த இருட் களங்கம் உடனே நீங்கிப் போய், முன்னேற்றமும் பரிபக்குவமும் உண்டாகின்றன.

இத்தகைய (அஞ்ஞான) இருள் அமரர்களுக்குக் கிடையவே கிடையாது. இதன் காரணத்தால்தான் அவர்கள் ஆத்மீக முன்னேற்றமில்லாமல் ஒரே நிலையில் இருக்கிறார்கள். 'லுல்மத்' என்னும் இந்த இருள் 'பழிப்பை உண்டாக்கும் ஒரு வகைப் புகழ்ச்சி போன்றது' என்று கூறப்படுகிறது.

அவாம்களான அறிவீனர்கள், அஹ்லுல்லாக்களிடம் இத்தகைய மனித குணப்பண்பு மட்டும் இருப்பதைக் கண்டு பிரமித்து போகிறார்கள். அவர்களில் மறைந்திருக்கும் சக்தியை, வெளிப்படையில் காணுது ஏமாறுகிறார்கள். எனவே, ஒவ்வோர் அந்தஸ்துக்கும் தனிப்பட்ட சில விசேஷத் தன்மைகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஸ்தானத்துக்கும் தனியான காரண காரியங்களும் இருக்கின்றன''.

அல்லா(ஹ்)வின் நல்லடியார்கள்—கவாஸ்களின் அந்தரங்கத்தில் (பாத்தினில்) அல்லாஹ்வின் கருணை நிறைந்திருக்கும். அவர்களின் வெளிப்படை நிலையில் 'ஜஹ்மத்' என்னும் சங்கடமே மிகைத்திருக்கும். எனவே, அவர்களுடைய அந்தரங்கத்தை நோட்டமிடுபவர் நல்லவர்களாய் இருப்பார்கள்; அவர்களுடைய பகிரங்கத்தை நோட்டமிடுபவர்கள் துராத்மாக்களாய் இருப்பார்கள். இவர்கள் புறத்தே எளிமையாகக் காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் மகத்தானவர்களாய் இருப்பார்கள். இவர்கள் வெளிக்குப் பூமியின் மீது இருப்பவர்களாயினும், அந்தரங்கத்தில் வானத்தில் சஞ்சரிப்பவர்களாவர். இவர்களுடைய சமுகத்தில் அமர்பவர்கள் ஒருபோதும் நன்மை இழக்க மாட்டார்கள். இவர்களுடன் நட்புறவு கொள்பவர்கள் நற்பாக்கியவான்களாவது உறுதி. இவர்களுடைய பெருமையைப் பற்றி அல்லாஹுத்தஆலாவே மேற்காணுமாறு திருவுளமாகிறான் :

أُولَٰئِكَ حِزْبُ اللَّهِ ۗ أَلَا إِنَّ حِزْبَ اللَّهِ هُمُ الْمُفْلِحُونَ

''அவர்கள் தாம் அல்லாஹுத்தஆலாவின் திருக்கூட்டத்தார் ஆவர். அறிந்து கொள். அல்லாஹுத்தஆலாவுடைய திருக்கூட்டத்தார் (கவாலிகள்) தாம் வெற்றி பெற்றவர்களாவர்''.

குரு பதவியும் அவருடைய உரிமையும்

ஹக்குதார் அனைவருடையவும் உரிமைகளிலெல்லாம் ஷெய்கின் உரிமைதான் மகத்தானதாகும். அல்லா ஹுத்த ஆலாவுடைய அருட் கொடைகளையும், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய உபகாரங்களையும் பிரதானமாய்க் கருத வேண்டும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் எல்லோருக்கும் உண்மையில் ஷெய்காய் இருக்கிறார்கள். மற்றவர்களுடைய உரிமைகளோடு இவர்களுடைய உரிமையைச் சீர்தூக்கி பார்க்கக் கூடாது.

சரீரத்தை வெளிப்படுத்திக் கொடுத்தவர் தாய் தந்தையாவர் ஆனால், ஹகீகத்தை வெளிப்படுத்திக் கொடுத்தவர் ஆத்மார்த்த குருவான ஷெய்கேயாவார். சரீரத்தின் வாழ்வு கொஞ்ச காலத்துக்குத் தான்; ஆனால் ரூஹானியத்தின் வாழ்வு நித்திய வாழ்வாகும்.

முரீதுடைய மன அழுக்கைப் போக்குபவர் ஷெய்கேயாவார்

முரீதுடைய அந்தரங்கத்திலுள்ள மன அழுக்கை (நஜாஸத்தை)த் தம்முடைய பரிசுத்தமான 'கல்பு-ரூஹு' டைய நோட்டம் கொண்டு நீக்கி வைப்பவர் ஷெய்கேயாவார். சில சமயங்களில் முரீதுகள் சிலருடைய மன அழுக்கைப் போக்குவதற்காக, ஷெய்கு அவர்கள் தமது ஆத்மார்த்த சக்தி கொண்டு முயலும்போது அந்த அழுக்கு ஷெய்கையே களங்கப் படுத்தி விடுவதும் உண்டு. எனினும், சற்று நேரத்தில் அந்த களங்கம் நீங்கிப் போய்விடும்.

ஷெய்கிலேயே மன அமைதி உண்டாகும்

முரீதுகள் ஷெய்கின் அனுகிரகத்திலேயே அல்லா(ஹ்) வரைபோய்ச் சேருகிறார்கள். இதைவிடப் பெரிய பாக்கியம் நிலையும்' துனியாவிலும் வேறென்ன இருக்கமுடியும். பொதுப் படையாகச் சுயமாகவே அழுக்கடைந்து போயிருக்கும் 'நப்ஸே அம்மாரா' வானது ஷெய்கின் பொருட்டாலேயே பரிசுத்தம் அடைகின்றது. மேலும் நீமையை ஏவும் தன் 'அம்மாரா' தன்மையை விட்டும் நீங்கி 'இத்மினன்' என்னும் நிம்மதி நிலையை அடைகிறது. குப்ரியத்தான தன்மையை விட்டு நீங்கி இஸ்லாத்தின் ஹகீகத்தை அடைகிறது. (இதை விளக்கினால் மிகவும் விரிவடையும்).

அல்லா(ஹ்)வின் திருப்தி ஷெய்கின் திருப்தியில் உண்டாகும்

தனக்கொரு நன்மை உண்டானால் அது பிறருடைய திருப்தியால் உண்டாயிற்றென்றும், தனக்கொரு சங்கடம் நேரிட்டால் அது ஷெய்குடைய அதிருப்தியால் உண்டாயிற்றென்றும் கருதவேண்டும். எனவே அல்லா(ஹ்)வின் திருப்தி ஷெய்கின் திருப்தியில் மறைந்திருக்கிறது. ஆகையால், முரீதானவர் தன்னைத் தான் ஷெய்கின் திருப்திகரத்தில் ஒப்புக் கொடுத்துவிடாதவரையில் அல்லாஹுத்த ஆலாவின் திருப்தியை அடைந்துவிட முடியாது. முரீதுக்கு ஆபத்து நேரிடுவது ஷெய்குக்குக் கஷ்டம் கொடுத்ததன் பயனாகும். எந்தத் தவறுக்கும் பரிகாரம் உண்டு; ஆனால், ஷெய்குக்குக் கஷ்டம் கொடுத்ததற்கு எவ்விதப் பரிகாரமும் இல்லை. (இது பாரசீகப் பாடலொன்றின் கருத்து.)

'குத்பே—அப்தால்' என்னும் நாதாக்களின் நல்லுதவி

'' அல்லாஹ் உடன் மதியிழந்து இரு. ஆனால் முஹம்மதுடன் மதியோடு இரு'' என்பது பாரசீக முதுமொழியாகும். இதில் ஆழ்ந்த தத்துவம் அடங்கியுள்ளது.

குத்பே-அப்தால் என்னும் மகான்களின் தொடர்பினால்தான் மேற்கூறிய அனுகிரகத்தை அடைய முடியும். இவர்கள் பிரபஞ்சத்தின் 'உஜூதுடனும் அதன் 'பகா' உடனும் சம்மந்தம் வைத்துக் கொண்டிருப்பவர்களாவர்.

எனவே, சிருஷ்டிகள் உண்டாவதும், ரிஸ்கு கிடைப்பதும் நோய்களும் துன்பங்களும் நீங்கிப் போவதும், சுகமும் சௌக்கியமும் உண்டாவதும் குத்பே-அப்தாலின் சொந்தமான அனுக்கிரகங்களேக் கொண்டேயாகும்.

இவர்கள் எப்போதும் தங்கள் காரியாதிகளிலே ஈடுபட்டிருப்பார்கள். இவர்களே விட்டுப் பிரபஞ்சம் காலியாக மாட்டாது. ஏனெனில் பிரபஞ்சத்தின் நிருவாகமே இவர்களேப் பொருந்தித்தான் இருக்கிறது.

குதுப்மார்களில் ஒருவர் மறைந்து விட்டால், மற்றவர் அந்த இடத்தில் நியமிக்கப்பட்டு வருகிறார். இவர்களுக் கிடையில் கமாலியத்தில் மட்டும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கலாம்.

குத்பே இர்ஷாதின் போதனே மகத்தானது. இவைகளால் அனுக்கிரகங்கள் உண்டாகும். உலகத்தின் நேர்வழி காட்டல் (ஹிதாயத்) அவர்களின் போதனே கொண்டு நடைபெறும். எனவே நம்மவர்க்கு ஈமானும் ஹிதாயத்தும், நற்காரியம் புரியும் பாக்கியமும் கிடைப்பதும், இன்னும் பாவங்களே விட்டும் தெளபாச் செய்யும் வாய்ப்புக் கிடைப்பதும் இந்தக் குத்பே இர்ஷாதுகளுடைய அனுக்கிரகத்தினுலேயேயாகும்.

குத்பே இர்ஷாத் தனிச் சிறந்த பரிபூரணமானவர். நமது நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஒழுகினவர். இத்தனிச் சிறப்புடையவரின் ஆற்றல், நபிகள் (ஸல்) அவர்களின் ஆற்றலுக்கு ஒத்தமைந்ததாகும். அதற்கும் இதற்குமுள்ள

வித்தியாசம் இத்திபாஃ என்னும் வழிபடுதலில் அமைந்திருக்கிறது. உதாரணமாக, நபிகள் பெருமானூர் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்கள் காலத்தில் 'குத்பே இர்ஷா' தாகவும் இருந்தார்கள். அதன்பின் ஒவ்வொருவர் குத்பே இர்ஷாதாக தோன்றி இர்ஷாத் என்னும் போதனே செய்து வருகிறார்கள். இந்த முறையில் ஹஜ்ரத் காஜா உவைஸ் கர்னீ (ரஹ்) அவர்கள், தங்கள் காலத்துக்கு குத்பே அப்தாலாக விளங்கி வந்தார்கள். குத்பே இர்ஷாத்களாலேயே உலகத்தாருக்கு அனுகிரகங்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன.

நல்லடியாருக்கு அருள் கிடைப்பதில் சுயாதிகாரம் இல்லை

குதுப்கள் மூலம் உலகத்துக்கு அனுக்கிரகம் கிடைப்பதற்கு ஒரு வழிமுறையுண்டு. அதாவது: குத்பானவர் சகல குணும்சங்களும் பொருந்தியவராய் இருப்பதால், உலக அனுக்கிரகங்கள் தோன்றுவதற்கு அவர் ஒரு தோற்றமாகவும் அருள் நிழலாகவும் விளங்குகிறார். மற்றெல்லாம் குதுப் தன்மையின் விளக்கங்களேயாகும்.

எனவே, அனுக்கிரகமானது ஹக்குடையபுறத்திலிருந்து லதீபத்தின் பக்கம் தங்கு தடையின்றி வந்து சேருகிறது. லதீபத்தானது தாராளமாக இந்த அருளே ஏற்றுக் கொள்கிறது. சுருங்கக் கூறுங்கால், எல்லா அனுகிரகங்களுக்கும் ஆதிகர்த்தா, எல்லாம் வல்ல அல்லா ஹுத்த ஆலாவேயாவான். அந்த அனுக்கிரகத்தை உலகத்தார்க்கு விநியோகிக்கும் 'வாஸிதா'வுக்குச் சுயேச்சதிகாரம் கிடையாது. பல சந்தர்ப்பங்களில் இந்த 'வாஸிதா' வுக்குத் தெரியாமலேயே அருள் பாக்கியப் பதவி கிடைத்து வருவதும் உண்டு.

ஒளலியாக்களும் பொதுத் தேவைகளில் மனிதர்களேப் போன்றவரே

ஒளலியா என்னும் ஒலிமார்களுக்கு, அவர்களுடைய மனித குணப் பண்பு, (இயற்கை விதி) ஒரு நிரை

மறைவாய் இருக்கிறது. எனவே பொதுவாக இதர மனிதர்களுக்கு உலக வாழ்வில் என்னென்ன வஸ்துக்கள் தேவைப்படுமோ, அவை யாவும் இவர்களுக்கும் தேவையாகவே இருக்கின்றன. இவர்கள் ஒளலியாவாக விளங்குவது இவர்களுடைய உலக வாழ்க்கையை— தேவைகளைப் பொருத்து இருக்கவில்லை. இவர்கள் உண்பது உறங்குவது இருக்கட்டும், இவர்களும் சில சமயங்களில் மற்ற மனிதர்கள் கோபங்கொள்வதைப் போலவே கோபம் கொள்வார்கள். நபிகள் நாயகம் செய்யிதுல் முர்ஸலீன் முஹம்மத் (ஸல்) அவர்கள், தங்கள் தன்மையைப் பற்றிச் சுயமே திருவுளமாயிருப்பதாவது :

اَغْضَبُ كَمَا يَغْضَبُ الْبَشَرُ

"மற்ற மனிதர்களைப்போல் நானும் கோபம் அடைந்திருக்கிறேன்" என்பது இந்த ஹதீதின் கருத்து.

அங்ஙனமிருக்க, வலிமார்களுக்கு மட்டும் மனித சுபாவங்கள் இல்லாமல் போய்விடுமா? எனவே, இயற்கைப்படி, எல்லோரையும் போலவே இவர்களும் உணவு உண்டு, நீர் பருகி, மனைவி மக்கள் உறவினர்களுடன் பழகிக் குடித்தன வாழ்வு வாழ்ந்து வருவதில் மற்றவர்களைச் சேர்ந்தே இருந்துவருவார்கள்.

இயற்கை முறையில் மனிதர்களுக்கு அத்தியாவசியமான காரியங்கள் இவர்களை விட்டும் நீங்கியிருக்கவில்லை. ஆனால், மற்றவர்களுக்கும் இவர்களுக்கும் ஒரு வித்தியாசம் என்னவெனில், அஹ்லுல்லாக்களான இவர்களுக்கு அல்லா(ஹ்)வுடன் அந்தரங்கத்தில் ஒரு தொடர்பு இருந்து வருகிறது. இதையே 'ஹால்' (பரவச நிலை) என்பார்கள். இது சாதாரண ஜனங்களுக்குக் கிட்டாத ஒன்றாகும்.

இரண்டாவது பாகம்

'தஸவ்வுப்' என்பதன் விளக்கமும் அது சம்பந்தமான ஆதாரங்களும்

தஸவ்வுப் என்பது ஓர் அரிய இல்மு (கலை) ஆகும். இதில் அல்லாஹுத்தஆலாவுடைய 'ஜாத்' இன்னது 'ஸிபாத்' இன்னது என்ற அரிய ஞானங்களைப் பற்றிச் சர்ச்சை செய்யப்படுகிறது. இதில் 'அஃமால், அஷ்ஃகால்' என்னும் செயல்முறைகள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. இந்த 'அஃமால்'கள் அந்தரங்கத்தைத் தூய்மையாக்கி அல்லாஹ் இடத்தில் நம்மைக் கொண்டு போய்ச் சேர்த்து வைப்பவையாகும். இந்தக் காரியாதிகள், குர்ஆன் என்னும் கிதாபிற்கும் 'ஹதீது' என்னும் சுன்னத்துக்கும் கொஞ்சம் கூட முரண் இல்லாதவகையில் அமைந்திருக்க வேண்டும். மேலும், இஸ்லாமிய போதனையின் பிரதான சாராம்சமாகவும் இருக்கவேண்டும். இந்தத் 'தஸவ்வுப்' என்னும் ஞானவழியைப் பின்பற்றுத வரையில் எந்த முஸ்லிமும் ஈமானே காமில் ஆனவராய் (பரிபூரணமடைந்தவராய்) ஆக முடியாது.

ஸூபி என்றால் யார்?

"தன் உள்ளத்தை ஊசாட்டங்களை விட்டும், நீமைகளை விட்டும் தூய்மையானதாக ஆக்கித் தன் மனத்தை அல்லாஹுத்தஆலாவையன்றி வேறு எதன்மீதும் ஆர்வம் கொள்ள விடாதவரே 'ஸூபி'யாவார்" என்று ஹஜ்ரத் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) தங்கள் 'குன்யத்' என்னும் நூலில் அருளியுள்ளார்கள்.

ஹஜ்ரத் இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்களும் மற்றும் முற்காலத்து மகான்களும் 'ஸூபி' (ஞானி) என்பதற்கு மேற்கூறிய இதே பொருள்தான் கூறி இருக்கின்றார்கள்.

'தஸவ்வுப்' என்பது தீரு நபி அவர்களின் சுன்னத்தான மார்க்கமே

'தஸவ்வுப்' உடைய உண்மையைப் பற்றி எந்த முஸ்லிமும் நிராகரித்துப் பேச முடியாது. அப்படிப்பட்ட உண்மை நிறைந்த கலியில் இக்காலே சில மாறுபாடுகளும் பேதங்களும் உண்டாகி விட்டன. இத்தகைய பேதங்கள் முற்காலப் பெரியோர்களுடைய வாழ்நாளில் உண்டானதில்லே. இக்காலத்து நிலேமை, அக்காலத்து நிலேமைக்கு வெகுதூரம் மாறுபட்டிருக்கின்றது. முற்கால உத்தமப் பெரியோர்களேப் போன்று இக்காலேயில் உள்-வெளிப் பரிசுத்தமானவர்கள் வெகு சிலரே காணக் கிடைக்கின்றனர்.

'தஸவ்வுப்' என்பதை நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலேஹிவஸல்லம் அவர்களது ஆசாரத்தில் இருந்தது போலவும், உத்தம ஸஹாபாக்களின் திருக்கூட்டமாகிய 'அஸ்ஹாபே ஸுப்பா'க்களுடைய காலத்தில் இருந்தது போலவும், அவர்களே அடுத்து வந்த தாபிஈன், தபஅதாபிஈன்களின் அனுஷ்டானங்களில் இருந்ததுபோலவும் இக்காலேயில் பரிசுத்தமான நிலேயில் கொண்டாடப் படுவது மிகவும் அரிதாயுள்ளது. முற்காலப் பெரியோர்கள் 'தஸவ்வுப்' என்னும் ஞானத்தை விலேயில்லாச் செல்வமாகப் போற்றி வளர்த்துப் பயனடைந்தனர். இறைவனுடைய இரகசியங்களே முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் கொண்டு வந்தார்கள். அதனேப் பெரியோர்கள் இதய வாயில்மூலம் அடைந்துள்ளார்கள்.

இந்த ஆத்மார்த்த போதனே உலகம் முடியுமவரை நிலேத்து நிற்கும்

ஹஜ்ரத் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள், 'குன்யத்' என்னும் நூலில் சொல்லியிருப்பதாவது: ''ஆதிகாலத் தொட்டே அல்லாஹுத்தஆலா, ஆத்மார்த்தம் (ரூஹானியத்) சம்பந்தமான பயிற்சியை உண்டாக்கி நிலேக்கலத்திருக்கின்றான். எப்படியென்றால், ஒருமகான் போதனே செய்வார்; மற்றவர் அந்த அருளே ஏற்றுக் கொள்வார். நபிமார்களிடமிருந்து அவர்களுடைய பிரதிநிதிகளும், உரியவர்களும், தோழர்களும் இந்தப் போதனேயை அடைந்து வந்தனர். அதற்குப் பிறகு, பயிற்சி பெற்றவர்கள் போதனே செய்து வந்தார்கள். இதே மாதிரி போதனேயானது உலக முடிவு நாளாகிய கியாமத்துவரை நீடித்து நிலேத்து இருக்கும்.''

ஆலானின் பயிற்சியின்றி இப்பதவி இல்லே

அல்லாஹுத்தஆலா மாத்தரில் ஒர் ஆலாவின் நேரடியான போதனேயும் பயிற்சியுமின்றி, இந்த உயரிய ஞானவழியில் உயர்பதவி அடையுமாறு செய்துள்ளது வெகு சிலருடைய விஷயத்தில்தான் உண்மையாகும். உதாரணமாக, ஹஜ்ரத் இப்ராஹிம் (அலே), நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்), ஹஜ்ரத் உவைஸ் கர்னி (ரஹ்) ஆகியவர்களின் பெயர்களே மட்டுமே குறிப்பிடலாம். இதை ஆட்சேபிப்பதற்கு இல்லே.

பொதுப்படையாக மனிதரில் எவருமே ஷெய்கின் ஞானப் பயிற்சியில்லாமல், இத்துறையில் முன்னேறி உன்னதப் பதவியை அடைந்து விட முடியாது. ஏனெனில், இதில் எத்தகைய வாதம் செய்து சாதிப்பதற்கும் ஆதாரம் இல்லே. ஆகவே, பொதுவாக மனித சமுகத்தின் சுபாவங்களில் அலசரித்து, காமிலான ஷெய்கின் தொடர்பு அத்தியாவசியமானதென்று முடிவு செய்யப்பட்டுவிட்டது. ஷெய்கின் போதனேயும் வழிகாட்டுதலும் இல்லாமல் எவரும் இந்த

ஞானப் பாதையின் படித்தரங்களைக் கடந்து லக்ஷியத்தை அடைந்துவிட முடியாது.

லக்ஷியத்தை அடைய ஷெய்கின் தொடர்பு அவசியமாகும்

فَلَا يَنْبَغِي لَهُ أَنْ يَنْقَطِعَ عَنِ الشَّيْخِ حَتَّى يَسْتَغْنِيَ عَنْهُ بِالْوُصُوْلِ
إِلَى رَبِّهِ عَزَّ وَجَلَّ

அதாவது முரீது ஒருவருக்கு அல்லாஹு ஜல்ல ஷானஹுவத ஆலாவின் 'வஸ்லு' என்னும் ஒன்றித்தல் சித்தியாகாதவரை அவர் ஷெய்கின் உறவை முறித்துக் கொள்ளக் கூடாது.

முதலில் ஷெய்கின் கூட்டுறவு வேண்டும். பிறகு பூரணமாகப் பயிற்சி பெறவேண்டும். 'உஸூலு இலல்லாஹ்' என்னும் அல்லா(ஹ்)வுடன் ஒன்றித்தல் சித்தியாகாதவரை-ஞான மார்க்கத்தில் லக்ஷ்யம் கைகூடாதவரை-முரீதானவர் ஷெய்கை விட்டும் பிரிந்து விடக்கூடாது என்பது விளக்கமாகும். 'ஜாமிஉல் வுஸூல்' என்ற நூலில் இவ்வாறே கூறப்பட்டுள்ளது.

நப்ஸின் தேவை அழிவதே 'பனா'வாகும்

தரீகத்துடைய கடைசி எல்லைக்கு இவ்வாறு வரம்பு கூறப்பட்டுள்ளது: நப்ஸின் தேட்டங்கள் முழுவதும் அழித்தொழிந்து போக வேண்டும்; அத்துடன் 'அவஸாபேஇலாஹி' என்னும் தெய்வீகக் குணங்கள் இதயத்தில் குடிகொள்ள வேண்டும். இதையே தஸவ்வுபின் பரிபாஷையில் 'பனபில்லாஹ்' (இறைவன் தன்மையில் அழிந்து போதல்) என்று சொல்கிறார்கள்.

தரீகத்தின் 'ஸுலூக்' என்னும் நடவடிக்கையில் காமிலான ஷெய்கு அவசியம்தான் என்று ஒப்புக்கொண்டவர்கள் (1) பனபிஷ் ஷெய்கு (2) பனபிர் ரஸூல் (3) பனபில்லாஹ் என்னும் மூன்று படித்தரங்களையும் சாதகன் கடந்து நீர வேண்டும். இதன் விளக்கமும் நுட்பமும் 'ஷெய்கே காமில்' இடத்தில்தான் கிடைக்க முடியும்.

ஆரிபே காமிலின் தொடர்பின்றி நன் முடிவு ஏற்படாது

ஆரிபே காமில் (தேர்ந்த ஞான போதகர்) இல்லாமலேயே, வெறும் வழக்கா சாரமான வணக்கத்தைக் கொண்டு மனத் தெளிவும் ஆத்மத் தூய்மையும் அடைந்துவிட முடியும் என்று எவரேனும் சொல்வாராயின் அவர் முற்றும் பொய் சொல்பவரேயாவர்.

யாம் அனுபவத்தில் எத்தனையோ ஆலிம் உலமாக்களைப் பார்த்திருக்கின்றோம். அவர்கள் தனுடைய இல்மிலும், படிப்பிலும் (ஆலிம் பாஜில் என) ஒப்புக் கொள்ளப் பட்டவர்களாகவே இருக்கின்றனர். அத்துடன், ஏவல் விலக்கல்களை முற்றும் பேணி நடப்பவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால், நடை முறையில் மனிதர்குரிய கீழ்த்தரமான (நப்ஸானியத்) தன்மைகளான பெருமை அகங்காரம், கோபம், காமம் லோபித்தனம் பொறுமை முதலிய இழி குணங்களை விட்டும் கொஞ்சம் கூட தப்பினவர்களாக காணப்படவில்லை.

இதற்கு நேர்மாறுகக் குறைவான இல்முடையவர்களில் உத்தமர்களையும் நாம் அறிகிறோம். இவர்கள், காமிலான ஷெய்கின் சகவாசம் காரணமாக மேற்கூறிய கீழ்த்தரமான இச்சைகளை விட்டும் ஒதுங்கி பரிசுத்தவான்களாய் விளங்குவதையும் காண முடிகிறது.

வெறுங்கல்லும் மாணிக்க கல்லாகும்

மஸ்னவி ஷரீபில் மௌலானா ரூமி (ரஹ்) சொல்லுகிறார்கள் :

1. சிறந்த ஆத்ம ஞான குரு ஒருவருடைய அருட் பார்வை உன்மீது படாதவரை நீ உன்னுயை உள்ளமையைப் பற்றிய ஞானத்தைப் பெறமாட்டாய்!

2. ஷெய்கின் அருள் நிழலால் தான் உன்னுடைய இச்சை என்னும் நப்ஸைக் கொல்ல முடியும். ஆகையால், நப்ஸைக் கொல்லும் அந்த மகானுடைய உடையைப் பற்றிப் பிடித்துக் கொள்!

3. நீ கருங்கல்லாக இருந்தாலும் சலவைக் கல்லாக இருந்தாலும் ஞானசிரியரிடம் நீ சேர்ந்து விட்டால், வைர மாக மாறிவிடுவாய்!

இப்னு ஜௌஸி இப்னு தைமிய்யா

'தஸவ்வுப்' பற்றிய எதார்த்தத்தை அறியாத பலர் உத் தமமான பேச்சுக்களைக் கூட மறுத்துத் தள்ளி விடுகின்றார் கள். இது ஒருவகைக் குரோதமாகும். பிடிவாதத்தையும் குரோதத்தையும் ஒதுக்கி விட்டு இவர்கள் யோசித்து பார்ப் பார்களானால் ஞானிகளில் யாரையும் நிராகரிக்கமாட்டார் கள்.

இப்னு ஜௌஸி, இப்னு தைமிய்யா ஆகிய முஹத்திஸ் கள்கூட ஆய்ந்தோய்ந்து பாராமல் தரீகத்துக்கே இமாம் களான மகான் ஹஜ்ரத் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்), ஹஜ்ரத் ஜுனைது (ரஹ்), ஹஜ்ரத் ஷிப்லி (ரஹ்), ஆகியவர்களையும், மற்றும் தேர்ந்த ஞானசிரியர்களையும் தாக்கி எழுதிவிட்டார்கள். அதாவது :

"ولعمري لقد طوى هؤلاء بساط الشريعه طيا فياليتهم لم يتصوفوا"

"என்னுடைய ஆயுளின் மீது சத்தியமாகக் கூறுகி றேன்: (ஸூபியாக்களான) இந்தப் பிரமுகர்கள் ஷரீ அத் என்னும் விரிப்பை சுருட்டி மூடி விட்டார்கள்.

அந்தோ! இவர்கள் தரீகத்துடைய மார்க்கததை தேர்ந்தெடுக்காதிருந்தால் நலமாயிருக்கும்" என்று.

எதார்த்தத்தை மறப்பது அறியாமையே

இத்தகைய எதிர்ப்பான வார்த்தைகளை சிலர் எப்பொழு தும் மஷாயிக்மார்கள் விஷயத்தில் பிரயோகித்து வருகின் றனர். காரணம், இவர்கள் உண்மையெனும் ஹகிகத்தை அறியாதது தான். வலியுல்லாக்களின் தன்மையையும் அவர் களுடைய சம்பூரணத்துவத்தையும் அறிவதற்கு அந்தரங்க மான (ஞானக்)கண் தேவை. இத்தகைய பொறுப்பற்ற பேச்சுகளைக் கண்கொண்டு பார்த்ததன் பயனேயாகும்.

இப்படி அவசரப்பட்டு எதிர்த்துப் பேசி விட்ட சிலர் பிறகு அறிவு தெளிந்து உண்மையை ஒப்புக் கொண்டும் இருக் கிறார்கள். உதாரணமாக, ஹஜ்ரத் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்), ஷெய்கு இஜ்ஜுத்தீன் (ரஹ்), போன்ற மாபெரும் முஹத்திஸ்கள் முதலில் நிராகரித்து ஒதுக்கிய சங் கை மிக்க ஸூபியாக்களுடைய அந்தரங்க அருள் என்னும் அற்புதங்களைப் பின்னர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஹஜ்ரத் இமாம் அப்துல் வஹாப் ஷிஃரானி (ரஹ்) அவர்கள் தங்களுடைய 'லவாக்கிஹுல் அன்வார்' என்னும் நூலின் முகவுரையில் இவ்வாறு எழுதுகின்றார்கள் :

"இந்த ஸூபியாக் கூட்டத்தினரை ஒவ்வொரு காலத்தி லும் சிலர் எதிர்த்து வந்துள்ளனர். இதற்கும் காரணம், உண்மையை இவர்கள் அறியாததேயாகும். ஞானவான்க ளான மகான்கள் இந்தத் துறையில் அடைந்த உன்னதமான ஸ்தானத்தையும் முன்னேற்றத்தையும் சாதாரண அறிவுடைய மக்களால் அறிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. ஆயினும், இந்த மகான்கள் அந்த மக்களின் எதிர்ப்பை பொருட்படுத்தவில்லை. பெரிய மலைகளைப் போல் மனங்குலை யாது நின்று மாபெரும் வெற்றி கண்டனர்."

எதிர்ப்பவர்களில் பலவகையினர் உண்டு

ஞான மார்க்கத்தை நிராகரித்து ஒதுக்குபவர்கள் அறிவுக் குறைவின் காரணத்தினாலேயே அப்படிச் செய்து வருகிறார்கள். திருக்குர்ஆனும் ஹதீதும் இந்த 'மாரிப், அஸ்ரார்' என்னும் ஞான இரகசியங்களை எடுத்துக் கூறியிருக்க இந்தத் தத்துவங்களை அவர்கள் உணர்ந்து கொள்ளத் துணிவதில்லை.

இதற்குக் காரணம். அஹ்லே ஹகீகத்தாகிய ஞானவான்களைப்பற்றி அவர்கள் மனத்தில் உண்டாகும் வெறுப்பேயாகும். எனவே, பிடிவாதமாகப் பொய்யைக் கூறுவதைத் தவிர இவர்களுக்கு வேறு வழியில்லை.

இத்தகைய போக்குடையவர்களைப் பற்றித்தான்,

كَذَّبُوا بِمَا لَمْ يُحِيطُوا بِعِلْمِهِ

''இவர்கள் தங்கள் அறிவைக் கொண்டு அடையவல்லாத கொள்ளாததாலேயே (உணர முடியாமல் போனதாலேயே, எதிர்த்துப்) பொய் மொழியைக் கூறுகின்றார்கள்''

என்று திருக்குர்ஆன் இயம்புகின்றது.

பொருமையினால் எதிர்ப்பவர்கள்

மேற்கூறியவர்களில் சிலர் தங்கள் சுயநலம் காரணமாகவும் ஞானவான்களை எதிர்க்கின்றனர். வேறு சிலர் பொருமையும் குரோதமும் காரணமாக இவ்வாறு எதிர்த்து வருகின்றனர். இப்படிப்பட்டவர்களின் பொருமையைப் பற்றித் திருக்குர்ஆன்,

حَسَدًا مِّنْ عِندِ أَنفُسِهِم

''அவர்களுடைய மனத்துள்ளிருக்கும் பொருமை யேயாகும்.''

என்று பேசுகிறது. அதாவது, பொருமை காரணமாகவே இவர்கள் ஞானவான்களை எதிர்த்துப் பொய்ப்பிக்க முனைகின்றனர். வேறு சிலர் பெருமை காரணமாகவும் அப்படிச் செய்கின்றனர். அவர்கள் மனசாட்சிப்படி உணர்ந்து சிந்தித்துப் பார்ப்பதில்லை.

மேலும், சிலர் ஞானவான்களைத் தங்களைப் போன்றே மதித்துக் கொண்டு ''இவர்களும் நம்மைப் போல்தானே இருக்கின்றனர். நம்மைப்போல் சுபாவத் தேவைகள் இவர்களுக்கும் இருக்கின்றனவே. இவர்களுக்கு மட்டும் இந்தப் பதவி எங்கிருந்து கிடைத்து விட்டது'' என்று ஏளனமாகக் கூறித் திரிகின்றனர்.

وَمَالِ هَٰذَا الرَّسُولِ يَأْكُلُ الطَّعَامَ وَيَمْشِي فِي الْأَسْوَاقِ

''இந்த ரஸூலுக்கு என்ன நேரிட்டு விட்டது! (நம்மைப் போல்தானே) இவரும் உணவு உண்கிறார், கடைத் தெருவில் அலைகிறார்''

என்று காபிர்கள், நபி பெருமானாரைப் பற்றிக் கூறுவதாக அல்லாஹுத்தஆலா திருக்குர்ஆனில் சுட்டிக் காட்டியது எதிர்ப்பவர்கள் விஷயத்திலும் பொருந்துவதாகவே இருக்கிறது!

ஞானம் தெளியும் நல்லோரும் உண்டு

ஞானவான்களைக் குறைவாகப் பேசுபவர்கள், மற்றும் பல காரணங்களாலும் அவ்வாறு செய்கிறார்கள். இஃதொரு புதிய செய்கையன்று. நபிமார்களுடைய காலத்தில் கூட இப்படிப்பட்டவர்கள் இருந்தார்கள். அல்லா(ஹ்)வின் நல்லடியார்களை வெறுத்து மூடத்தனமான எதிர்ப்புக்கள் ஆதிகாலந்தொட்டு இருந்தே வந்துள்ளன; எனினும், நல்லடி

யார்கள் இதற்கெல்லாம் பயந்து ஒதுங்கிவிடாமல் நெஞ்சு சுயர்த்தி நின்று, ஸ்திரமாகத் தங்கள் கடமைகளைச் செய்து வந்துள்ளனர்.

''நபிமார்களுடைய நடவடிக்கைகளை ஒட்டியே சங்கை மிக்க ஸூபியாக்களும் செயல்பட்டு வந்துள்ளனர். அவர்களின் அடிச்சுவட்டிலேயே இவர்களும் நடந்துவந்துள்ளனர்'' என்று மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட இமாம் அப்துல் வஹாப் ஷிஃரானி (ரஹ்) அவர்கள் தங்களுடைய 'லிவாகிவுல் அன்வார்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தஸவ்வுப், தீருக்குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் பொருத்தமானதாகும்

தஸவ்வுப் சம்பந்தப்பட்ட நமது ஞான போதனைகள் திருக்குர்ஆன் ஆதாரமான ஆயத்துக்களுக்கும், ஹதீது களுக்கும், 'இஜ்மாஃ உம்மத்' என்னும் ஸஹ்ளத்து ஜமாஅத்தின் கோட்பாடுகளுக்கும் முரண்பாடாக இல்லாதவரை, இதை ஒரு போதும் இழிவெனக் கை விடக்கூடாது.

ஆகவே, தஸவ்வுபிலுள்ள ஏதேனுமொரு விஷயம், குர்ஆன், ஹதீது, இஜ்மாஃ ஆகிய முவ்வகை ஆதாரங்களுக்கும் முரண்பட்டதாகக் காணப்பட்டால், அதை நிராகரிக்கும் உரிமை அனைவர்க்கும் உண்டு. அப்படிப்பட்ட விஷயத்தைக் களைந்தெறிய வேண்டுமேயன்றி, ஒரே அடியாகத் தஸவ்வுபையே நிராகரித்து விடக்கூடாது. நிராகரிப்பதால், கெட்ட எண்ணமும் குரோதமும் வளருமேயன்றி வேறு நற்பயன் ஏதும் விளையாது.

தஸவ்வுப் மனத்தின் ஒளியாகும்

உண்மையில் தஸவ்வுப் என்னும் மெய்ஞ்ஞானம் சத்தியத்தின் பிரகாசமாகும்; இதயத்தின் ஒளி (நூருல் கல்பி) ஆகும். இந்தப் பிரகாசம் அல்லா(ஹ்)வின் வேதமாகிய

திருமறையின் படியும் நாயகத் திருமொழியாகிய ஹதீதின் படியும் அல்லா(ஹ்)வின் ஒலிமார்கள், தங்கள் இதயங்களில் உண்டாக்கிய ஞான ஒளியாகும். (இதையே ஸூபியாக்கள் பின்பற்றுகின்றனர்).

ஞானவான்களை அணுகித் தீயோரை விட்டு விலகவேண்டும்

ஷெய்கு முஹம்மது மஃரிபி ஷாதிலி (ரஹ்) சொல்லுகிறார்கள்: ''எப்போதும் நீங்கள் தரீகத்துக்காரர்களைப் பின்பற்றி நடந்து கொள்ளுங்கள். இப்படிப்பட்டவர்கள் அபூர்வமாக மிகச் சிலரே இருந்தாலும் சரியே. இதற்குத் தகாதவர்களை விட்டும் ஒதுங்கி இருங்கள். இத்தகையோர் தொகையில் ஏராளமானவர்களாய் இருந்தாலும் சரியே'' என்று.

தரீகத்துக்காரர்களுடைய உண்மை யுரையாகிய 'ஹக்காளியத்' விஷயமாய் நீங்கள் ஹஜ்ரத் மூஸா (அலை). ஹஜ்ரத் கிழ்ரு (அலை) ஆகியவர்களின் வரலாற்றைக் கவனித்து நடந்து கொள்ளுங்கள். இதுவே போதுமான ஆதாரமுடையதாகும்.

ஞானவான்களைத் தேடி அடைவது கட்டாயக் கடமை

'அஹ்லே தரீகத்'தைச் சார்ந்த ஞானவான்களைத் தேடி அடைவது அல்லா(ஹ்)வை விசுவாசித்துத் தேடுபவர் ஒவ்வொருவருக்கும் கட்டாயக் கடமை (வாஜிப்) ஆகும். காமிலான ஷெய்கைத் தேடி அடைவது வாஜிப் என்று ஸ்திரப்படுத்தி இமாம் ஷெஃரானி ரஹ்மத்துல்லாஹி அவர்கள் தனது 'அல்வஃரே குதுஸியா' என்னும் நூலில் எழுதியிருக்கிறார்கள். மேலும், அவர்கள் எழுதுவதாவது: ''அந்தரங்கமான அசுத்தங்களை நீக்குவது வாஜிபாகிய கடமையாகும். இதனால் தான் இதய அசுத்தங்கள் தூரமாகும். மனத்தின் களங்கத்தைப் போக்குவதற்கு ஷெய்கே காமிலைப் பின்பற்றி நடப்பதைத் தவிர வேறு மார்க்கமேயில்லை.''

ஓர் ஆட்சேபனைக்குப் பதில்

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சந்தேகம் எழுகிறது. அதாவது, ஸூபியாக்களுடைய நடைமுறை இஸ்லாத்துக்கு அவசியமானதாய் இருந்தால், ஸூபியாக்களும் தாபிஈன்களும், இஜ்திஹாது செய்த இமாம்களும் ஷரீஅத்தின் அஹ்காம்களை எல்லாம் சாங்கோபங்கமாக விளக்கி விவரித்துக் காட்டியதைப் போல் ஸூபியாக்களுடைய தஸவ்வுப் பற்றியும் விளக்கம் செய்திருப்பார்களல்லவா? உடலிலுள்ள நோய்களுக்குப் பரிகாரம் சொல்லியிருப்பதுபோல் உள்ளத்திலுள்ள நோய்களுக்கும் பரிகாரம் சொல்லியிருப்பார்களல்லவா? அவ்விதம் செய்யாதது ஏன்?

இத்தக் கேள்விக்கு விடை வருமாறு: அந்தப் பெரியோர்களுடைய காலம் உத்தமமான காலமாய் இருந்தது. இக் காலத்தில் காணப்படுவது போன்ற பித்அத்துக்களும் (புதுமைகளும்) ஒழுக்கக் குறைகளும் அக்காலையில் இருக்க வில்லை. எல்லாம் பரிசுத்தமாக இருந்தன. முஸ்லிம்கள் திருக்குர்ஆன் போதனையையும், ஹதீதுக் கட்டளையையும் தம் உயிரினும் மேலாய் ஏற்று நடந்து வந்தார்கள். ஸுன்னத்தான நடைமுறைக்கு ஓர் அணுவளவும் மாறுபாடு இல்லாமல் பேணுதலாய் நடந்து வந்தார்கள்.

அந்த உத்தமக் காலத்துக்குப் பிற்காலத்தில் பல்லிபிக்குகளென்ற தத்துவவாதிகள் தோன்றி முரண்பாடுகளில் மிகைத்து விட்டனர். இதனால் பொதுமக்களின் உள்ளங்களிலே, நுபுவத்தின் ஒளி (இஸ்லாமிய ஆசாரம்) குன்றத் தலைப்பட்டது. எனவே, 'உலமாயே-ரப்பானி' என்னும் ஞானப் பேராசிரியர்கள் முன் வந்து கவனத்தை இந்தப் பக்கம் திருப்பினர்கள். இதய நோய்களான அந்தரங்கப் பிணிகளைப் போக்குவதற்காகவும், உள்ளத்தைத் தூய்மையாக்குவதற்காகவும் ஞான மார்க்க நடவடிக்கைகளான திக்று பிக்று அஷ்கால்களைத் திருக்குர்ஆன் கட்டளைக்கும் ஹதீது போதனைக்கும் ஒத்த முறையில் அமைத்துப் போதிக்கலானார்கள்.

'குறூனே ஊலா' என்னும் முற்காலத்து ஸஹாபா பெருமக்கள் இமாம்களுக்கு இருப்பது போன்ற அறிவாற்றல் உடையவர்களாய் இருந்தமையால் அவர்களுக்கு மஷாயிக் மார்களின் அவசியமில்லாது போய்விட்டது. ஆகவே, இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? அவர்களோ இஸ்லாத்தைப் பேணுவதில் அந்தரங்கமும் பஹிரங்கமும் முற்றும் ஷரீஅத்துக்குப் பொருந்தியவர்களாய்-முன் மாதிரியானவர்களாய் விளங்கினார்கள். இதுதான் ஸூபியாக்களின் தஸவ்வுப் தோன்றியதற்கு அசல் காரணமாகும்.

இமாம் குஷைரியின் போதனை

பொதுமக்களுக்கு ஷெய்குமார்களின் அவசியம் பற்றி, (மேற்கூறிய கேள்விக்குப் பதிலாக) இமாம் குஷைரி (ரஹ்) அவர்கள் தங்கள் நூலொன்றில் விளக்கம் கூறுவதாவது;

"اول ماحدث ظهور الامراض الباطنية او اخر لمائة الثالثة

لقوله خير القرون قرنى ثم الذين يلونهم ثم الذين يلونهم

فمن شهد له رسول الله بالخيرية فقد حاز رتبة الكمال كله"

"அந்தரங்க வியாதிகள் (அஞ்சாரங்கள்) தோன்றிய முதற்காலம் ஹிஜ்ரி மூன்றாவது நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இதைக் குறித்து நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள்: ''என்னுடைய காலத்தில் பிறந்தவர்கள் (கைருள் குரூன்கள்) என்னுடைய காலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தாம். அதற்குப் பிறகு நல்லவர்கள் அதற்கு அடுத்த காலத்தினர்கள். அதற்குப் பிறகு நல்லவர்கள் அதற்கும் அடுத்த காலத்தினர்கள்'' என்பதாகும். எனவே, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் பிறந்த சாட்சியம் அளிக்கப்பெற்ற அக்காலத்தவர்களே சகல சிறப்புகளும் பரிபூரணமாகப் பெற்றிருந்தவர்கள் ஆவர்.

இந்தச் சிறந்த விளக்கம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்தி அமைந்திருக்கின்றது. உதாரணமாகப் பகலவனுகிய சூரியன் அஸ்தமித்த பிறகும் சிறிது நேரம் பிரகாசமாக இருந்து கொண்டுதான் இருக்கும். அ தன் பிறகு சிறிது சிறிதுதாக ஒளி மங்கி முற்றும் இருள் கௌவிக் கொண்டு விடுகிறது. இதே மாதிரிதான், ஞான சூரியனுகிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகத்தை விட்டு விடை பெற்று மறைந்த பிறகும் சிறிது காலம் 'அன்வாரே நுபுவத்' என்னும் சன்மார்க்கப் பிரகாசம், ஸஹாபாக்கள், தாபிஈன்கள், தபஅ தாபிஈன்கள் ஆகியவர்களுடைய இதயங்களிலே சுடர் விட்டுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகே சிறிது சிறிதாக அந்தச் சன்மார்க்கப் பிரகாசம் குன்றி பித்அத்துக்கள் என்னும் அனுசாரங்கள் இடம் பெறலாயின. பிறகு ஒரேயடியாக அனுசார இருள் சூழ்ந்து கொண்டு விட்டது.

இப்படிப்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்தில்தான் அருளாளனுகிய அல்லாஹுத் தஆலாவின் கிருபையால் புது ஒளி தோன்றியது. அதாவது, அவ்லியாக்களையும் ஸாலிஹாக்களையும் பற்பல நாடுகளிலும் பற்பல காலங்களிலும் அல்லாஹ் தோன்றச் செய்தான். இம்மஹான்கள் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களுடைய உண்மையான ஞானபோதனைகளை வில்லிலா முறையில் மக்களுக்கு எடுத்துரைப்பதை நிலை நிறுத்தினர்கள். இதுவே தஸவ்வுப் என்பதாகும்.

சன்மார்க்கத்தை நீடித்து நடத்துவது அல்லா(ஹ்)வின் திட்டமாகும்

முஸ்லிம்களில் இக்காலே சந்தேகத்திற்கிடமான வழக்கங்களை விட்டு இஸ்லாத்தின் பக்கம்—ஹகீகத்தின் பக்கம் வர விரும்புகிறவர்களும், சின்னஞ்சிறு மஸ்அலாக்களின் விவாதங்களில் சிக்கியபின் அதிலிருந்து விடுபட்டுக் குரோதங்களை விட்டுச் சுத்தமாகி நல்வழிக்கு வர விரும்புபவர்களும், தீய கருத்துடைய புரட்டர்களின் மாயப் பேச்சுக்களில் மயங்கிக்

கெட்டலைந்தபின் மனத்தைப் பரிசுத்தப் படுத்திக் கொண்டு நல்ல வழிக்கு வர விரும்புபவர்களும் ஷெய்கே காமில் என்னும் மெய்ஞ்ஞான ஆசானைத் தேடி அடைவதிலேயே கருத்துக் கொண்டு விடுவார்கள். இவர்கள் இந்த ஞான வழியை நிராகரிக்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

ஷெய்கின் அவசியம் பற்றி ஹாபிஜ் இப்னு ஹஜர் (ரஹ்) போதனை

பிற்காலத்துப் பெரிய ஞானிகளுள் ஒருவரான ஹாபிஜ் இப்னு ஹஜர் ஷாபிஈ புகாரி (ரஹ்) அவர்கள் ஒரு பெரிய அருநிபுடைய முஹத்திஸ் ஆகவும் விளங்கினர்கள். இவர்கள் இந்த உண்மையை எத்துணை ஆணித்தரமாக எடுத்துரைக் கிறார்கள்: படியுங்கள்.

حَيْثُ قَالَ فَلْيَتَّخِذْ ثِقَةً وَحُجَّةً وَلَا يَلْتَفِتْ إِلَى مَنْ يَتَعَسَّفُ
وَلْيَتَحَرَّ أَوْرَعَ الْمَشَائِخِ وَ أَعْرَفَهُمْ بِقَوَانِينِ الشَّرِيعَةِ وَالْحَقِيقَةِ
وَلْيَتْرُكْ رُسُومَهُ وَلْيَدْخُلْ تَحْتَ إِشَارَتِهِ وَمَنْ ظَفَرَ بِشَيْخٍ هٰذَا
الْوَصْفِ فَحَرَامٌ عَلَيْهِ أَنْ يَتْرُكَهُ وَيَدُلُّكَ عَلَيْهِ الْأَدِلَّةُ الْأَرْبَعُ
بَلْ يَشْهَدُ لَهُ الْكُتُبُ السَّمَاوِيَّةُ "

இவ்வரபு வாக்கியத்தின் கருத்தாவது :

"அல்லா(ஹ்)வைத் தேடியடைய விரும்பும் தாலிபின் கடமை யாதெனில், சிறந்த, காமிலான, ஆரிபான ஷெய்கு ஒருவரை அவர் தமக்கு வழிகாட்டியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்; இத்துறையில் குரோதங் கொண்டவர்களின் பேச்சுகளுக்குச் சிறிதும் செவிசாய்க்கக் கூடாது. ஆனல்,

ஒரு விஷயத்தைக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்
அதாவது, தான் அணுகும் ஷெய்கு ஆரிபே காமிலா
(முற்றும் அறிந்த ஞானியாக)வும், ஷரீஅத்தின் கட்டளை
களையும், தரீகத்தின் நடைமுறைகளையும் நன்கு அறிந்
வராகவும் இருக்க வேண்டும்: மேலும், தாலிபானவர்
மெளடிக முறைகளை விட்டுத் தமது ஷெய்கின் கட்டளை
படியே நடக்க வேண்டும்.

இங்ஙனம் யாருக்கேனும் நல்ல-காமிலான-வழிகாட்டி
ஷெய்கு கிடைத்துவிடுவாரானால், பிறகு அவரை விட்டுப்
பிரிவது ஹராமாகும். நாம்கூறும் இந்த வாதங்களுக்குத் திரு
குர்ஆன், ஹதீது, இஜ்மாஃ, கியாஸ் ஆகிய நான்கிலும்
சரியான ஆதாரங்கள் உள்ளன. இவைமட்டுமல்ல; நான்கு
வேத கிரந்தங்களும் இந்த நேர்மையான விஷயத்தை வ
யுறுத்தவும் செய்கின்றன.''

தஸவ்வுப் சம்பந்தமான ஞான நூல்களில் இத்தகை
மேற்கோள்கள் ஏராளமுண்டு. ஞானவழி நடப்போருக்கு
இங்கே எடுத்துக் கூறிய அளவே போதுமானதாகும். குரோத
குணமுடையவர்கள் இத்தகைய நன்மொழிகளாலும்
பயனடைய மாட்டார்கள். எனவே, நல்ல தன்மையுடைய
உத்தம கனவான் எவருக்கேனும் இந்தப் பாக்கியம்
கிடைத்துத் தம்முடைய தவருன எண்ணங்களைத் திருத்தி
கொள்வாராயின் அதுவே பெரும் பாக்கியமாகும்! எனக்கும்
அந்தப் பாக்கியம் உண்டாகட்டும்.

ஸூபிகளின் வழி நபி பெருமான் (ஸல்) அவர்களின் நல்வழியாகும்

அருமை நண்பனே, ஷெய்கே காமிலைத் தேடி அடைய
வேண்டியது உன் கடமையாகும். அவரிடம் மாறுட்டம்
ஏதும் செய்யாதிரு. மறுமைக்கான காரியங்களில் அதிகம்
கவனத்தைச் செலுத்திவா! தவருன எண்ணங்களை விட்டும்
தப்பிப்பிழை! ஸூபியாக்களுடைய நடைமுறை நிருக்குர்ஆன்

கூறுக்கு முரணானது என்று நீ சந்தேகிக்கக் கூடாது,
ஏனெனில், இவ்விதம் ஐயமுண்டாவது 'குப்ரு' ஆகும்.
தரீபாதையை ஞானவான்களின் (ஷெய்கு காமில்களின்)
நடைமுறை அல்லாகே முஹம்மதிய்யா, ஸீரத்தே அஹ்ம
திய்யா, ஸுன்னத்தே இலாஹிய்யா ஆகும்.

வாழ்நாளை அரியதாய் எண்ணுக

அருமை நண்பனே, இப்போது உன் ஆயுளின் அரிய
காலம் உன் வசமுள்ளது. ஞான நடவடிக்கைக்கான நல்ல
தருணம் உனக்கு வாய்த்திருக்கிறது. இதை நீ அறிய தருண
மாகப் பாவித்துக்கொள். இத்தகைய தருணத்தில்,
மனிதருக்குச் சகல உலகின் அறிவாற்றலும் சித்தியாகும்.
பரிபூரணத் தன்மை கிடைக்கும். இவையெல்லாம் இத்
தருணத்திற்குரியவைகளேயாகும். இப்போதுள்ள வாலிபம்
மறைந்து உன் உடல் சோர்ந்து நீ முதுமை அடைந்தபின்,
நீ எதையும் செய்யச் சக்தி பெறமாட்டாய்! அதற்கான
அவகாசமும் கிடைக்காது. அப்படிப்பட்ட காலத்தில்
நீ ''ஆகா, நாம் அப்பொழுது அந்தப் பரிபக்குவத்தையடைய
வில்லையே-பாக்கியம் பெறவில்லையே!'' என்று எண்ணி ஏங்கு
வதால் ஒரு பயனும் உண்டாகி விடாது. வெறும் கைசேதம்
தான் மிஞ்சும்.

ஒரு கவிதையின் பொருள்:

(1) ''இப்போது நல்ல சந்தர்ப்பம் வெளிப்படையாய்
இருப்பதால், நீ ஏதும் அந்தரங்கத்துக்காக
ஆயத்தம் செய்து கொள்ளாமற் போய்விடாதே.

(2) அந்தக் கடைசி நாட்களில் உனக்கென்ன பயன்
ஏற்படும்? எப்படி நீ ஹக்குடைய ஸிர்ருகளை
(இரகசியங்களை) அடையப் பெறுவாய்?

(3) புறக்கல்வியையே ஒருவன் கற்பதில் நாட்களைக்
கடத்துவானாயின் – அகக் கல்வியைத் தேடி அடை
யாது புறக்கணிப்பானாயின்,

(4) அவன் மறுமைக்குரிய மௌல்வியாக ஆக முடியாது. மக்தள் அவனே மௌல்வி என்று ஓயாமல் அழைத்தாலும் என்ன பயன்?

(5) நண்பனே, மௌல்வி என்றால் மௌலாவுக்காக அவ்வாறு ஆகவேண்டும். அப்போதுதான் மறுமைக்கான தல்வி எதுவென்ற வித்தியாசம் புலப்படும்.

(6) மறுமைக்கான தல்வி ஞானம்பெற்ற ஆலிம்கள், ஸூபியாக்கள் யாவரும் இந்தக் கல்வியே பரிபூரண மான-கடமையான-கல்வி என்று சொல்கிறார்கள்.

(7) இந்த நல்ல கல்வியை விட்டு முகம் திருப்பிக் கொள்பவன் அல்லா(ஹ்)வின் வேதனைக்குத்தான் ஆளாவான்.''

மனிதனின் மகாத்மியம்

அருமை நண்பனே, இன்னாளுமை நீ, ஆதிகால வாக்குறுதியின்படி படைக்கப்பட்டிருக்கிறாய். அதற்கான ஞானத்தையும், செயல் முறைகளையும் அடைந்து அவற்றின் மூலம் அல்லாஹுத் தஆலாவின் மஃரிபத்தை எய்துவது உன் கடமையாகும். உலகத்தில் அல்லாஹுத் தஆலா, எத்தனையோ வகையான படைப்புக்களை உண்டாக்கியிருக்கிறான். ஆனால், ஈமானுடைய அமானத்தைச் சுமப்பதற்கு மனிதனை மட்டும்தான் தேர்ந்தெடுத்தான். வணக்கம் (இபாதத்து) சகல படைப்புக்களுக்குமே பொதுவாயினும், மகாமே இலாஹிவரை கொண்டு போய்ச் சேர்க்கும்படியான வணக்கத்தை நிகழ்த்தும் ஆற்றல் மனிதனுக்கு மட்டுமேதான் அருளப்பட்டுள்ளது. எனவே, ஹக்கைத் தேடி அடைய முயலாதவன் மனிதனே அல்லன். உருவம் மட்டும்தான் மனிதனுடையதாய் இருக்கும்; அவனுக்கு அசலான ஜீவன் இருக்காது. பரிபூரணத்தை அடைந்த ஆரிபுகளுடைய கண்களில் உண்டாகும் குளிர்ச்சியை அடைய நீ தெண்டிக்க வேண்டும்.

இல்மும் அமலும் தாய்—தந்தையாகும். அறிவு தந்தையின் ஸ்தானத்தை வகிக்கிறது; இதற்கான செயலாற்றல் வணக்கம் - தாயின் ஸ்தானத்திலிருக்கிறது. தாயும் தந்தையும் ஒன்று சேராதவரையில் அதனால் கிட்டும் 'பயன்' உண்டானதெங்ஙனம்? தாய் தனியே ஒதுங்கியிருந்துவிட்டால் சேய் உண்டாகாது. ஈஸா நபியை நீ குறிப்பிடலாம். அவர்கள் பிரபஞ்சம் முழுவதுக்கும் தகப்பன் இல்லாமல் உண்டானதற்குத் தனிப்பட்ட அத்தாட்சியாவார்கள். இதே போன்று தான் வணக்கம் என்னும் தாய் இல்லாமல் அறிவு என்னும் தகப்பனால் மட்டும் பிள்ளை என்னும் 'அஹ்வால்' உண்டாக்க முடியாது. ஆயினும், மூர்ஷிதே காமிலின் கட்டளைப்படி நடந்தால் இந்தப் பலனும் உண்டாகி விடலாம்.

''அன்னூரிரு கல் மஃரூம்'' (சொல்)
'அபூர்வமானது இல்லாததற்குச் சமம்'
என்ற நியதியை நாம் மறந்துவிடக் கூடாது.

மனை இச்சையை அடக்க வேண்டும்

அருமை நண்பனே, நீ சதாகாலமும் நப்ஸின் இச்சைகளுக்குக் கீழ்ப்பட்டவனாகவே இருக்கிறாய். உடல் சம்பந்தமான இன்பங்களை நீக்கி ஒழித்தால்தான், ரூஹானியத்தான ஆத்மப் பரிபக்குவங்களை நீ அடைய முடியும். இதை நீ செய்ய வேண்டாமா? வேண்டுமென்றால் நீ, தன்னைத் தானே இயற்றிப்பட்ட ஆசாபாசங்களை விட்டும் காப்பாற்றிக் கொள்வாயாக!

இதற்கான தைரியம் உன்னிடம் இல்லாமற்போனதால், உன்னை விடத் தூர்ப்பாக்கியசாலியை-நன்மையை இழந்து விட்டவனை—நான் எங்குமே கண்டதில்லை. நப்ஸின் இச்சை என்னும் திரைக்குள் நீ அடைபட்டுக் கிடக்கும் துரதிர்ஷ்டத்தை நீ தேடிக்கொண்டாய். இதிலிருந்து விடுபடுவாயாக

ஷரீஅத், தரீகத், ஹகீகத் இவற்றின் தூய்மை

நண்பனே கேள். இந்த உலகத்தில் நான்கு (ஸ்தூல) விலக்குகள் உண்டு. அவற்றிலிருந்து விலகி விடுபட்டுப் பரிசுத்தம் அடைவதற்கு நான்கு வழிமுறைகளும் இருக்கின்றன. அவை வருமாறு :

முதலாவது: தொடக்கு, நஜாஸத்து ஆகிய அசுத்தங்களை விட்டு, உடலையும் உடைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்வது. இந்தத் தொடக்கை நீக்காவிட்டால் தொழுகை கூடாது.

இரண்டாவது : ஷைத்தானின் ஊசாட்டங்களை விட்டும், பாவங்களை விட்டும் பரிசுத்தமாய் இருப்பது. இந்த இரண்டும் ஷரீஅத்துச் சம்பந்தப்பட்டவைகளாகும்.

மூன்றாவது : தீய பழக்க வழக்கங்களை விட்டும் பரிசுத்தமாய் இருப்பதாகும். கெட்ட பழக்கத்தால் மனிதன் நாற்கால் மிருகத்தைப் போலாகி விடுகிறான். பரிசுத்தம் தரீகத்தின் நபர்களைப் பற்றிய சொந்த விஷயமாகும். இது நபிமார்களுக்குரிய சிறப்பு நடைமுறையாகும்.

நான்காவது : மனத்தைப் பரிசுத்தப் படுத்திக் கொள்வதாகும். அதாவது, அல்லாஹ் அல்லாததை விட்டும் மனத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். இதனால் ஞான நடவடிக்கையாளரின் லக்ஷியம் கைகூடி வருகிறது.

அன்னிய எண்ணம் நீங்குவதே ஞானப் பரிபக்குவமாகும்

இறுதியில் கூறியது ஹகிகத்தான பரிசுத்தமாகும். இந்த நான்கு வகைப் பரிசுத்தங்களையும் அடைந்துவிடுபவர் லாஹிராகவும் பாத்தினுகவும் (பகிரங்க அந்தரங்கப்) பரிசுத்தம் அடைந்தவராகிறார். இறைவனிடம் எதையும் கேட்பதற்கு அருகதை உடையவராகிறார். அவருக்கு,

اَلصَّلٰوةُ مِعْرَاجُ الْمُؤْمِنِيْنَ

"தொழுகை மூமின்களுக்குரிய மிஃராஜ் ஆகும்"

என்ற தத்துவ உண்மையும் வெளிப்படையாகும். இந்த ஸ்தானத்திலும் ஆகிரத்திலும்தாம் ஹக்குடைய தரிசனம் காணமுடியும். இவ்வழியின்றி வேறுவழிகளில் நீ வீண் பிரயத்தனங்கள் புரிந்து வாழ்நாளை வீணாக்காதே.

இச்சைக்கு அடிபணிவது மகா பாவமாகும்

அரிய நண்பனே, இறைவனின் சந்நிதானம் என்னும் குர்பே மௌலாவை நாடி முயன்று கொண்டிருப்பவர், மார்க்கத்துக்கே மகா சத்துருவான நப்ஸுடன் கடுமையாகப் போராடியாக வேண்டும். அங்ஙனமிருக்க, நீ எத்தனை காலம்தான், நீசத்தனமான நப்ஸுக்கு (இச்சைகளுக்கு)க் கீழ்ப்படிந்து கொண்டிருப்பாய்? உண்மையில் இது விக்கிரக வணக்கம் போன்ற பெரிய பாவமாகும். நண்பா, நீ அந்தரங்க உலகைநாடிச் சென்று குர்பே மௌலாவை அடைந்து கொள்வதற்காக ஜீவபிரயாணம் செய்வாயாக! சத்தியப் பாதையில் ஏற்படும் தடைகள் இக-பர சம்பந்தமானவையாயினும் அவைகளை இடறித் தள்ளி மேலே செல்! இரவும் பகலும் இதே பாதையில் போய்க்கொண்டிரு! எந்த இடத்திலும் இடையில் சிரமப்பரிகாரம் செய்து தாமதியாதே! அடியார்களுக்கும் ஹக்குக்கும் இடையில் இருக்கும் தங்கும் தலங்களில் நீ தங்கிவிடாதே! எல்லா. 'மன்ஜில்'களையும் கடந்துபோய் விடு; எந்த நிலையிலும் நீ உன்னுடைய ஷெய்கைக் காமிலான ஞானசிரியரின் பிடியை விட்டு விடாதே.

அஹ்லுல்லாக்களின் நடைமுறை இல்மையும் கடந்ததாகும்

அக்லு என்னும் புத்திக்கு மேலாகவும் ஒரு மார்க்கம் இருக்கிறது. அதைக் கடந்து சென்றால், மனிதன் மறைவான பெரும் ரகசியங்களையும் அறிந்து கொள்கிறான். (புத்தி என்பது இல்மு)

''மூமினை அடியானுடைய எல்லையானது இல்மை (புத்தியை)யும் கடந்ததாகும். அங்குக் காதலின் (இஷ்கின்) இன்பமும் உண்டு. தரிசனத்தின் (தீதாரின்) நல்வாக்கும் உண்டு'' (அல்லாமா இக்பால் (ரஹ்) அவர்களின் உர்துக் கவிதை)

இந்த வகை இபாதத்தும் ஸுலூக்கும் ஒலியுல்லாக்களின் நிரந்தரமான கண்ணோட்டத்தாலும் சித்தியாவதுண்டு. இது நபிமார்களுடைய நடைமுறையாகும். இதற்கோர் உதாரணம் சொல்லுவோம். கல்லுக்கும் இரும்புக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. இவ்விரண்டின் தீண்டலில் அல்லாஹுத்தஆலா, நெருப்பை மறைத்து வைத்திருக்கிறான். இரும்பைக் கொண்டு கல்லைத் தட்டினால் நெருப்பு உண்டாகும். ஆனால், இவை இரண்டும் தனித்தனியே விலகியிருந்தால் எதிலிருந்தும் தீச்சுடர் உண்டாக மாட்டாது.

இஷ்கின் நடைமுறையும் இதுபோன்றதுதான். இது அனுபவப்பூர்வமான முறையாகும். இதே மர்மத்தை அல்லாஹுத்தஆலா, மனிதருடைய உயிர்-உடல்களுக்கிடையில் உண்டாக்கி வைத்திருக்கிறான். எனவே, உயிரும் உடலும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டால், இஷ்க் என்னும் நெருப்பு உண்டாகிறது. இந்த ஒளி உண்டாகி விட்டால் மறைவான விஷயங்களும், மறைக்கப்பட்ட ரகசியங்களும், அந்த பிரகாசத்தில் நிதரிசனமாகி விடுகின்றன.

ஆனால், உடலுக்கோ உயிருக்கோ இவ்விரண்டில் எதற்கும் தனித்து இந்த பிரேமை உண்டாவதற்கு ரூஹும் ஜிஸ்மும் (உயிரும்-உடலும்) மோதிக் கொள்ளவேண்டும்.

ஒன்றை ஒன்றின்மீது அடிக்க வேண்டும். இந்த வழியில் நீ ஈடுபட்டு உன் இச்சைக்கு மாறுபாடு புரிந்து நப்ஸை முறித்து 'ரியாலத்' என்னும் தவத்தில் நிலைப்பாயாக!

நப்ஸுக்கு மாறுபாடு செய்வதால் பரவச நிலை உண்டாகும்

நண்பனே, நீ அல்லா(ஹ்)வின் சொந்த நல்லடியானாக ஆகவேண்டுமென்று விரும்பினால், மக்களுடைய ஆர்பாட்டத்தை விட்டு ஒதுங்கித் தனித்திருப்பாயாக! அப்போது தான் நீ பெருமை-தற்பெருமை என்னும் சுழலிலிருந்து தப்பி வாழமுடியும். தன் உஜூதை (உன் தன்னை)ப் பாராட்டும் முட்டுக்கட்டையை உன் பாதையிலிருந்து அகற்றிக்கொள். மாயத் நிரைகள் அனைத்தும் அதிலிருந்தே உண்டாகின்றன ஏனெனில், நப்ஸே 'அம்மாரா'வானது உன்னைச் சதா காலமும் கெட்ட எண்ணங்களிலும் தற்புகழ்ச்சிகளிலும் மூழ்கச் செய்து உன்னை அழிவின் பக்கம் அழைத்துச் சென்று விடும். ஆகையால், நீ உன்னை இத்தகைய கெட்ட எண்ணங்களை விட்டும் காப்பாற்றிக் கொண்டு எக்காலமும் உன்னை புதுப்பித்துக் கொள்வாயாக.

நப்ஸை முஸ்லிம் ஆக்கிக்கொள்

ஒரு வகையில் நமக்குள் இருப்பது காபிரான நப்ஸ் ஆகும். நப்ஸின் வெளிப்படையான இஸ்லாத்தைக்கொண்டு நீ ஏமாந்து விடாதே. அந்த நயவஞ்சகனை உண்மை முஸ்லிமாக்கும் முயற்சியில் ஈடுபடு. ஏனெனில், நப்ஸானது இயற்கையாகவே குப்ரியத்தான விஷயங்களைச் செய்யும் இயல்புடையதாக அமைந்துள்ளது. உன்னை அது கெட்ட வழிக்கிவிடும்.

மனத்தை முர்ஷிதே காமிலிடம் ஒப்படைத்துவிடு

காமிலான முர்ஷிது காட்டிய வழிப்படி நீ இறைவனின் தியானத்தில் சதா ஈடுபட்டிரு. ஒரு வினாடியையும் மறதியில்

வீணுக்காதே. உன்னுடைய மனத்தை முர்ஷிதே காமிலிடம் ஒப்படைத்துவிடு. ஏனெனில், அந்தந்தக் காலத்து மெய்ஞ் ஞானிகளின் இதயங்களில் 'வஹத்ததே ஜாத்' என்னும் ஏகத் துவ ஒளியானது அந்தந்தக் காலத்தின் தன்மைக் கேற்ப நிரம் பிச் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது! இதிலிருந்து தான் நீயும் பங்கு பெறுவாய். எந்த சமயத்திலும் அவரு டைய உத்தரவு இல்லாமல் வெளியே புறப்பட்டுப் போகாதே! அவருடைய செயல்களின் உட்கருத்து உனக்குப் புரியாமல் போனால், மூசா நபிக்கு முன் ஹஜ்ரத் கில்று நபியின் செயல் களை நினைத்துக் கொண்டு பொறுமையாக இரு. காமிலான முர்ஷிதானவர் முரீதுகளுடைய உள்ளங்களைத் தமக்குக் கீழ்ப் படிந்ததாக்கித் தம் பக்கல் இழுத்துக் கொள்கிறார்.

அப்போதுதான் அவர் மீது உனக்கு அபிமானம் ஏற்பட்டு அவருடைய உத்தரவுக்கு மாறுபாடு செய்யாமல் இருப்பாய். மேலும், அவர் மஃரிபத்து தௌஹீது ஆகியவற்றின் ஒளியை அதனுள் நிரப்பி உனக்கு அறிமுகப்படுத்தி வைப்பார். இந்த லக்ஷியத்தைக் கொண்டு அவர் உன் மனத்தைப் போதனை யாலும், சில சமயங்களில் பாட்டுக்களாலும், மஃரிபத்துடைய பேச்சுக்களாலும் கவர்ந்து உன் மனத்தைப் பக்குவப்படுத்து வார். சில சமயங்களில் அவரே ஞானமஸ்தை உனக்குப் புகட்டுபவராக காட்சியளிப்பார். அதன் மூலம் உன்னை அவர் மெய்ம்மறக்கச்செய்து லக்ஷியத்தின் பக்கம் அழைத்துச் செல்வார்.

இப்படிப்பட்ட காமிலானவர்களுக்கு முன்னால் ஞான வழிப்படி நடக்கும் சாலிஹீன்கள் சிலர் அல்லா(ஹ்)வின் பக்கம் சார்ந்தவர்களாய் இருந்தும் விளக்கமில்லாமலும் தடு மாற்றமடைகின்றனர். ஏனெனில், அவர்களின் அறிவும் தெளிவும் மெய்ஞ்ஞானிகளின் முன்னால் ஒன்றுமே இல்லை.

காமில் ஒவ்வொருவரும் தன் காலத்தில் சிறந்தவரேயாவார்

இனி அந்த முர்ஷிதே-காமிலானவர், ஷரீஅத்தின் இல்மு போதிக்கும் மதரஸாக்களை அறிந்தவராயிருந்து, தாலிப்

களாகிய சிஷ்யர்களுக்குச் சிறிது 'அஸ்ரார்களை'ச் சொல்லிக் கொடுத்தாலும், மார்க்கச் சட்டம் பேசும் அந்தப் 'பக்கீஹீகள்' இந்த மஃரிபத்தின் பேச்சுக்களைக் கேட்டுத் திடுக்கிட்டுச்சித்தம் குழைந்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய அறிவாற்றல் முர்ஷிதே காமிலின் ஞானத்தின் முன் ஜஹல் என்னும் அறியாமையே ஆகும். இந்த நிலை பல்வேறு காலங் களிலும் இருந்தே வந்துள்ளது. எனவே, ஷெய்கானவர் தம் முடைய கமாலியத்தினால் தம் காலத்தில் சிறந்தவராகத் திகழ்கிறார். தமது கமாலியத்தால்-இவர் தம் ஞான போதனை யால்-தமது காலத்தை அலங்கரிக்கிறார். உண்மையில் இவர் தம் ஞான போதனையால் தமது காலத்தை அலங்கரிப்பதுடன் தாமே அலங்காரமாகவும் விளங்குகிறார். இந்த நிலைமையில் நம்முடைய ஞான குருவான முர்ஷிதே காமில் அவருடைய முரீதுகள் அனைவரும் போற்றிக் கொண்டாட வேண்டும்.

சூர்பே ஷுஹூதிக்கு நூரே ஹிதாயத் வேண்டும்

நண்பனே, ''சூர்பே ஈ ஜாதி'' என்பது இறைவனைத் தேடுவதாகும். 'சூர்பேஷுஹூதி' என்பது 'நான்' என்னும் கனவத்தை (மஜாஸியை) விட்டு விடுதலைப் பெறுவதாகும். சூர்பே ஷுஹூதியானது ஹிதாயத்தின் ஒளி பெறுவிடின் கைகூடாது. எனவே உனக்கு அல்லாஹுத் தஆலா, உன் னுடைய இயற்கை நல்லமைப்பிற்கிணங்கத் தன் புறத்தி லிருந்து பேரொளியை (நூரே காஸை)க் கொடுத்து அருள் புரிந்தால் இது உன் பாக்கியமாகும். ஒளியாக்களுக்கும், அன்பியாக்களுக்கும் இவ்வாறான விசேஷ பாக்கியம் கிடைப்ப தண்டு. இந்தப் பாக்கியம், உனக்குக் கிடைத்தால் இறை யொளியினால் பகிரங்கக் காட்சிகள் மறைந்து போய்விடும். இது ஸ்தூல சம்பந்தங்களை விட்டு வெளியேற்றிக் சூர்பே இலாஹியின் பக்கம் உன்னைக் கொண்டு போகும். அதுவரை என் நிலை இப்காவி என்னும் வெளித் தோற்றந்தான். எனவே, நீ ஸ்தூல உலகத்திலிருந்தாலும் சரி; சூட்சும உலகத் தில் இருந்தாலும் சரி; இதனால் உனக்குச் சில சமயங்களில்

உள்ளமை தோன்றும், சில சமயங்களில் இல்லாமை தோன்றும்.

இல்மே காலும் இல்மே ஹாலும்

இல்மே கால் என்பது வெளிப்படையான கல்வியறிவாகும். இல்மே ஹாவின் பொருட்டால் அமலிலும் வணக்கத்திலும் ஒருவிதப் பரவசநிலை (ஹால்) உண்டாகும். அப்போது, அல்லா(ஹ்)வுக்கும் அடியானுக்கும் இடையிலுள்ள திரை விலகிப் போய்விடும். இந்த நிலை இல்மே காலைவிட மிகச் சிறந்ததாகும். கால் என்னும் ஏட்டுக் கல்வியினால் அமல்களின் தாரதம மியங்களை அறிவதுதான் குறிக்கோளாக இருக்கிறது. ஆனால், அமல் புரிவதால் 'தஜல்லியாத் இலாஹி' என்னும் இறைவனின் திருவருள் ஜோதி உண்டாகும். அமல் செய்பவருக்கு வெளிப்படையானஇல்மு இல்லாவிடினும் சரி, அமலானது உடலோடு மட்டுமில்லாமல் உயிரோடும் கலந்ததாய் இருக்க வேண்டும். இல்லையேல் இஃது அமல் (பூரண வணக்கம்) ஆகாது.

ஹக்கை மறைப்பது உன்
உஜூது என்னும் திரையே

ஞானமார்க்கத்தில் செல்லும் சாலிக் சில சமயங்களில் ஹக்கின் பாதையில் தடைபட்டு நின்றுவிடலாம். அப்படித் தட்டுண்டு நின்றுவிடுபவன், 'மூர்தத்' ஆகி விடுவான். ஹக்கின் பாதையில் இப்படிப்பட்ட தடைகளும் திரைகளும் உண்டு.

இந்தத் திரைகள் எப்படிப்பட்டனவாய் இருப்பினும் அவற்றை விட்டும் முகம் திருப்பிக் கொள்ளவேண்டும். எதுவரை உன்னுடைய 'உஜூது' (நான்) என்னும் பாசம் நிலைத்திருக்குமோ அதுவரை அல்லாஹுத்தஆலா தன்னுடைய அஸ்மா...ஸிபாத் என்னும் திரைகளுக்கு அப்பால் உன்னை விட்டும் மறைந்தே இருப்பான். எனவே, உன்னுடைய

'உஜூது' மறைந்து அழிந்து போனால்தான் நீ எல்லாத் திரைகளையும் கடந்து செல்வாய். ஆதலின், ஹக்கை விட்டும் உன்னைத் தடுக்கும் திரை உன்னுடைய 'உஜூதா'கிய 'நீ' என்னும் கவனமே. இதை நீ கடந்துவிட்டால், ஹக்கு உனக்கு உன்னைவிட அருகில் ஆகிவிடுவான். அதாவது, உனக்கும் ஹக்குக்கும் இடையில் திரை இருக்காது!

''ஒளியின் துளியானவனே, நீ முற்றும் ஒளிமயமாகிவிடு; அதற்கு வழி, நீ உன்னை விட்டு வெளிப்பட்டுச் சதானந்தத்தில் ஆகிவிடு!'' என்று மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் தங்கள் பாடல் ஒன்றில் கூறியுள்ளார்கள்.

'கூர்பை' அறிந்து கொள்வதே
கூர்பே இலாஹியாகும்

قُرْبُكَ مِنْهُ اَنْ تَكُوْنَ مُشَاهِدًا لِقُرْبِهٖ

''நீ அல்லா(ஹ்)வினளவில் 'குர்பு' (நெருக்கம்) அடைவதற்கு வழியாதெனில், அவன் உன்னில் மிக சமீபமாக இருக்கிறான் என்பதை உணர்ந்து, நீ அவனை உன்னில் தரிசிப்பதாக இருக்கும்''.

''கூர்பே இலாஹி அடைவதற்கு மேலேயும் ஏற வேண்டியதில்லை; கீழேயும் இறங்கவேண்டியதில்லை; ஆனால், தன்னுடைய உஜூ தென்னும் திரையை அகற்றுவதே போதும்; இதுவே குர்பாகும்''

''இறை நாட்டத்தில் தன்னை அர்ப்பணிப்பதே கூர்பை அடைவதற்குரிய வழி; அதாவது உன்னை நீ மறந்திருப்பதே (இழந்திருப்பதே) கூர்பாகும்.'' இதுதான் பனா என்ற இல்லாமையாகும். (உர்துப் பாடல் ஒன்றின் கருத்து)

'பனுபில்லாஹ்' நிலை

ஞான வழி நடக்கும் சாலிக் 'பனுபில்லாஹ்' என்னும் நிலையை அடையவேண்டும். வஹ்தத்தின் ஒளிக் கிரணங்களில் பிரபஞ்சத்தின் அனுக்கள் மறைந்துவிடுவது போல, அப்படி மாகி மறைந்து விடவேண்டும். கடலில் ஒரு துளி மழைத் தண்ணீர் விழுந்ததும் அதில் ஐக்கியமாகி எப்படித் தன்னை அழித்துக்கொள்கிறதோ அப்படி இறைவனில் நாஸ்தியாகி விடவேண்டும்.

இரும்பின் உதாரணத்தை இதற்கு எடுத்துக்கொள்ளலாம். இரும்பை நெருப்பிலிட்டுக் காய்ச்சிச் சூடேற்றினால் அது செந்நிறம் அடைந்து நெருப்பைப்போலவே கோலம் கொண்டு விடுகிறது. அப்படியானால், இரும்பு நெருப்பாகி விடுகிறதா? இல்லை. ஆனால், நெருப்புக்குரிய சகல குணங்களையும் அது பெற்றுக்கொண்டு விடுகின்றது. இதைப் பார்ப்போர் இரும்பு நெருப்பாகிவிட்டது என்று சொல்வர். 'பனுபில்லாஹ்'வின் அந்தஸ்தை அடையும்போது, மனிதனின் நிலையும் இப்படித்தான் ஆகிவிடுகிறது. ஆனால், ஸதூலத்தால் அன்று; தபக்குர் என்னும் சித்தத்தால் இந்நிலை சாத்தியமாகிறது. அதாவது பன்மையிலிருந்து ஒருமையின் (ஏகத்துவத்தின்) பக்கம் ஆத்மா சார்ந்து விடுகிறது. இதுவே 'குர்பே நவாபில்' ஆகும்.

இறையருள் இல்லாமல் இந்தப் பதவி சித்தியாகாது

மேற்கூறிய நிலை 'ஸைரே கஷ்பி' என்று சொல்லப்படும். 'இஸ்திஃ லாலி, என்று சொல்லப்படமாட்டாது. (இதில் சர்ச்சை கூடாது) சகல விதமான தடைகளை விட்டும் உள்ளம் தூய்மையடையும். அளவுக்கேற்ப இந்த நிலை உண்டாகிறது. ''உள்ளம் தெளிந்து ஒரு வினாடி இறை சிந்தனை செய்வது ஈருலகங்களின் இபாதத்தைவிட மேலானதாகும்'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமாகியுள்ளார்கள். இங்ஙனம் நேர்மையுடன் சிந்தனை செய்வதற்கு உள்ளம்

குழப்பமின்றிக் காலியாகித் தெளிந்து இருக்கவேண்டுமென்பது கட்டாய வழியாகும். இது மட்டும்போதாது. கைபுடைய சகாயம் அதாவது, இறையருளும் வேண்டும். அல்லா(ஹ்)வின் அனுக்கிரகத்தின் ஒளி கொஞ்சம் கலந்துவிட்டாலும் போதும்; இந்தப் பாக்கியம் கிடைத்துவிடும். இதற்கு அல்லா(ஹ்)வின் புறத்திலிருந்து நேர்வழி காட்டலும் வேண்டும். இதுபற்றி 'ஆரிப்' மௌலானா ரூமி (ரஹ்) இல்லிதம் எடுத்துரைத்துள்ளார்கள்; ''அல்லா(ஹ்)வின் அனுக்கிரகமும் அஹ்லுல்லாக்களுடைய அனுக்கிரகமும் இல்லாவிட்டால் மலக்காக இருந்தாலும் அவரது பட்டோலை கருப்பாகவே இருக்கும்''

அல்லா(ஹ்)வை அடைவதில் புத்திக்கு இடம்பாடில்லை

அரிய நண்பனே. 'மஃரிபத்தே இலாஹி' என்னும் மெய்ஞ்ஞானமானது அறிவைக்கொண்டோ, நூலாதாரத்தைக்கொண்டே ஏற்பட்டுவிடமாட்டாது. எழுத்துக்களின் அளவுகோல் கொண்டு இதை அளக்கவும் முடியாது. இந்த ஞானம் எழுத்துக்களில் அடங்கிவிடுவதில்லை, மனக்கண் திறந்தால்தான் இதன் உண்மைபுலப்படும், இங்ஙனமிருக்கும் போது அதைப்பற்றிக் குறை கூறுவதற்கில்லை.

இஷ்கின் மர்தபாவில் (மெய்ஞ்ஞானப் பதவியில்) கல்விக்கும் அறிவுக்கும் சம்பந்தம் கிடையாது. இதை ஒட்டிய கருத்தை அல்லாமா இக்பால் (ரஹ்) தமது பாடல் ஒன்றில் இல்வாறு வெளியிட்டுள்ளார்கள்.

''அல்லா(ஹ்)வின் திருச்சபையில் நீ வந்து சேர்ந்து கொள்ள நாடினால் உன் அறிவையும் ஆராய்ச்சியையும் ஒதுக்கிவிட்டு வா.''

பருத்தறிவு கொண்டு விவாதத்தில் உழல்பவனே, இங்கு அதற்கெல்லாம் இடம்பாடில்லை. காரணம், அந்த உன்னத நிலை அடியான் தன்னைத் தான் 'பனு'ஆக்கிக்கொள்வதால் சித்தியாவதாகும். ரஷ்கவின் ஸிபத்துகளைக்கொண்டு

தன்னை நிராமயப்படுத்திக்கொள்வதால் இந்த நிலை உண்டாகும். அந்தரங்கத் தெளிவு என்னும் ஞானக்கண்கொண்டு பார்த்தால்தான் ஏகனின் ஏகத்துவ உண்மை புலனுகும். இவ்விதம் சத்தியத்தைக் கண்டுகொண்டவர்கள்அல்லாஹுத் தஆலாவின் 'இனயத்' என்னும் அருட்கொடை பெற்ற நல்லாத்மாக்கள் ஆவர்.

அல்லா(ஹ்)வின் பெருங்கருணையே அவர்களை விவாதங்களின் அந்தஸ்திலிருந்து மேலே உயர்த்தி உன்னத நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தது. மேலும், அவனது திருபையானது அவர்களைக் குறிப்பைக்கொண்டு குறிப்பில்லாத வஸ்தை விளங்கும் தாழ்ந்த பதவியிலிருந்து, ஜாத்தினுடைய அருபத்தை ரூபத்திலேயே (உருவத்திலே) காணும்படியான உன்னத உயர் பதவியில்கொண்டு போய்விடுகிறது.

'லாமக்கான்' (குறிப்பில்லாதது) என்பது 'மக்கான்' (குறிப்பு) என்பதில் இடங்கொண்டுவிட்டது. அடையாளம் மற்றது, அடையாளத்தில் அடங்கிவிட்டது. இதை ஞானவான்கள் தங்கள் சத்தியக் கண் (மனக்கண்) கொண்டு தரிசித்துக்கொண்டனர் என்பது இதன் விளக்கமாகும்.

லாஹூத் தர் ஜப்ரூத் பின்
ஜப்ரூத் தர் மலகூத் பின்
ஈ(ன்) ஹர்சே தர்
நாசூத் பி தர் ஆகிலே ரும்ஷோ தரீன்.

ஹாபிஜே ஷீராஜீ (ரஹ்) அவர்களின் இந்தப் பாரஸீகக் கவியின் கருத்தாவது: ''லாஹூத்தை ஜபரூத்தில் பார்; ஜபரூத்தில் மல்கூத்தைப் பார். இம்மூன்றையும் நாஸூத்தில் பார். நீ அறிவாளியாய் இருந்தால் அதில் நீ மறைந்து போ!

ஆரிப் (மெய்ஞ்ஞானி) வஸ்துக்களை ஹக்கைக் கொண்டே அறிகிறார்

வருணிக்க முடியாத ஏகனவன், 'ஆலமே கைப்' என்னும் திறைமறைவிலிருந்துகொண்டு, கூவியத் (அவன்)

என்ற நிலையிலிருந்துகொண்டு பெயர்களாலும் குணங்களாலும், அடையாளங்களாலும், பலவகையில் இறங்கி அடியார்களுக்குத் தன் திருக்காட்சியை (ஜல்வாவை) அருள்புரிகிறன். பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களும் அவனுடைய உஜூதைக் கொண்டே நிலையாய் இருக்கின்றன. இதை ஆதாரப் பூர்வமாய்த் தெரிந்து மனத்தில் எண்ணிக்கொள்வதால் திருப்தி யடைந்துவிட முடியாது. எனவே, 'ஹக்கை' 'ஷை' என்னும் பொருள்களை ஆதாரமாகக்கொண்டு தெரிந்து கொள்ள முயல்வானுயின் அவன் தரீகத்தை அறியாத மூடனேயாவான். ஆனல், 'ஷை' என்னும் பொருள்களை ஹக்கின் மூலம் அறிந்துகொள்ள முற்படுபவனே ஆரிப் என்னும் பக்குவ ஞானியாவான்.

அன்னியத் தன்மையை நீக்குவதே மனிதனின் பரிபூரணத் தன்மை

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, ''தாங்கள் அல்லாஹுத்தஆலாவை எங்ஙனம் அறிந்துகொண்டீர்கள்'' என்று கேட்டார். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள், 'ஷை'களை (வஸ்துக்களை அல்லா(ஹ்)வைக் கொண்டு அறிந்தேன். ஹக்கை ஹக்கைக்கொண்டே அறிந்தேன். மற்ற வஸ்துக்களை) அல்லா(ஹ்)வைக்கொண்டே அறிந்தேன்'' என்று பதிலளித்தார்கள்.

எனவே, கண்களுக்கெல்லாம் கண்ணுகிய ஞானக் கண்கொண்டு எதையும் பார்த்து அதிலிருந்து ஹக்கை வெளிப்படையாகக் காண்பவரே ஆரிப் என்னும் மெய்ஞ்ஞானியாவார். தௌஹீதே-இலாஹியில்தான் மனிதனின் நப்ஸ் பரிபூரணத்துவம் எய்துகிறது. அந்த ஒளியானது அகப் பார்வையிலிருந்து 'கைரியத்' என்னும் அன்னியத் தன்மையைப் போக்கித் தன்னை ஹக்கில் அழியச் செய்து விடுகிறது.

அவரவர் திறமைக்கேற்ப ஞானம் பிறக்கிறது

ஆலமே அர்வாஹும், ஆலமே அஷ்பாஹும் அல்லா(ஹ்)வின் 'தாத்' என்னும் கடலில் நீர்க்குமிழிகளைப் போன்

றுள்ளன. இக்காட்சிப் பொருள்கள் அந்தரங்கத்தில் கடல் நீரைத் தவிர வெறொன்றும் இல்லை. அல்லா(ஹ்)வின் ஒலி மார்கள் அந்த நீர்க்குமிழிகள் என்னும் மண்டபத்தின் கீழ் மறைவில் இடம் பெற்றுள்ளனர். இவ்வாறே, ஞானமுடை யவர் ஒவ்வொருவரும் தத்தம் நிறமைக்கேற்ப, அல்லா(ஹ்) வின் 'முஹப்பத்' என்னும் பானம் பருகி ஞான வாரிதியில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலர் அந்த ஞான வாரிதியிலிருந்து கொஞ்சம் (ஒரு வாய்மட்டும்) குடித்து உண்மை அறிந்தவர்களாயும் உள்ளனர். இங்ஙனம் உள்ளம் தெளிந்தவர்கள், இறைவனால் ஒப்புக்கொள்ளப்பட்ட நற்குண நன்னடத்தையில் சிறந்திருப்பார்கள். இந்தத் தகுதி, உள்ளத் தெளிந்தவர்களுக்கு உரியதாகும்.

மற்றும் சிலர் ஹக் என்னும் கடலில் ஒரு கூஜா நிறைய குடித்தவர்கள் ஆவர். இவர்கள் ஹக்காணியத்தில் தன்னை மறந்தவர்களாயிருப்பார்கள். வெளிக் கோலம் எதையும் கண்கொண்டு பார்க்க மாட்டார்கள். இவர்கள் ஞான மதுவை, அஸ்மாக்களைக் கொண்டும் தஜல்லியாத்தைக் கொண்டும் பருகிக் கொண்டேயிருப்பார்கள். இந்தப் பதவி அப்தால்களுடையதும் ஔதாதுகளுடையதும் ஆகும்.

மேற்கூறப்பட்டவர்கள் முறையே ஒரு குவளையளவும், ஒரு கூஜா அளவும், ஒரு பானையளவும் பருகி மெய்ஞ்ஞானத் தில் மூழ்கியிருப்பவர்களாவர். குதுபுமார்களுடைய நடை முறையும் இவ்வகையில் முஹப்பத்தை வெளிப்படுத்தக்கூடிய தாய் இருப்பதால் தன்னைத்தான் அருந்திக் கொள்கிறார்கள். (தன்னைத்தான் இழந்து விடுகிறார்கள்.)

''உன் அடையாளமே இல்லாதெனத் தெரியாமல் உன்னை அழித்துக் கொள்வாயாக! உன் ஜீவியத்தின் நிறம், மணம்கூட இல்லாது போகட்டும்! 'ஹூ' என்ற கடலில் நீ ஆழ்ந்து போ! அப்போது 'ஹூ'வைத் தவிர வேறெதுவும் உன்னில் இல்லாதிருக்கட்டும்.'' (இஃதொரு பாடலின் கருத்து.)

'குர்பின் கடமை அடியான் தன்னை ஹக்கின் நிலையில் அழித்துக்கொள்வதே

வாசகர்களில் சிலர், தௌஹீதின் இன்பத்தை அடையாத வர்களாய் இருக்கலாம். இவர்கள் 'தக்லீத்' என்னும் கண் மூடித்தனத்தில் மேகங்களலான இருளில் கிடப்பவர்களாவர். அதாவது, பாமரர்கள் தௌஹீதின் அந்தரங்க இன்பத்தை நுகர இயலாதவர்களாயுள்ளனர். அவர்கள் 'வஹ்தத்தே ஹகீ'யின் ஒளியைக் கஷ்ப் என்னும் ஞானக் கண்ணால் கண்டவர்களில்லை. சொல்லப்படும் வெறும் பேச்சுகளைக் கொண்டு அதைப் பாடம் பண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால், அந்தரங்கத்தை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. கண் மூடித்தனமான தக்லீதின் காரணத்தால் சந்தேகம் என்னும் கருமேகம் அவர்களை அந்தகாரத்தில் ஆழ்த்தி விட்டது.

இதனால்தான் 'அஹ்லெ லாஹிர்' என்னும் வெளிப் படைப் பேச்சுக்காரர்களுடைய பகிரங்கம், அந்தரங்கம் என்ற இரண்டு கண்களும் கைபுடைய ஸிர்ருகளை (பரம ரகசியங்களை)க் கண்டுகொள்ள முடியாது போய்விடு கிறது. வெளிப்படையான (நிலுடைய) கட்டளைகளை உடும்புப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு அது தம்மை ஆட் கொள்ள இடம் கொடுத்து விட்டவர்களே' அஹ்லெ லாஹிர்'கள் எனப்படுவர். அல்லாஹுத்தஆலா 'அல் லாஹிர்' (பகிரங்கமானவன்) என்ற திருப்பெயர் கொண்ட வனாக இருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. எனினும், இவர்கள் வெளிப்படையான இல்முடைய எல்லையைக்கடந்து போகாததால் இவர்கள் பாத்தின் என்னும் அந்தரங்க ஞானத்தின் மேல் தொலியை மட்டும் கண்டவர்களாயுள்ள னர். உள்ளிருக்கும் சுளையின் இன்பத்தை இவர்கள் சுவைப்ப தெப்படி? அந்த இல்மின் உள்சத்து என்னவென்பதை இவர் கள் அறிவதில்லை. உலகின் வெளித் தோற்றங்களில், அவர் களுக்கு இந்த வெளிப் பூச்சுத்தான் காணப்படுகின்றது. இந்த மேற்பூச்சுகளால் அல்லாஹுத்தஆலாவின் தஜல்லியை ஒரு போதும் காணமுடியாது.

அல்லா(ஹ்)வின் தஜல்லி, அடியானின் தராதரத்திற்கு ஏற்பவே உண்டாகும்

ஆத்ம ஞானத்தைப் பற்றிப் பேசப் புகுந்த பற்பல கூட்டத்தினர், அல்லாஹுத்தஆலாவைப் பற்றித் தத்தம் மனப் போக்கின்படி கூட்டிக் குறைத்துக் கூறிச் சென்றுள்ளனர். அவர்களுடைய அகப் பார்வையின் அளவுக்குத் தக்கபடியே அந்தக் கூற்றுக்களும் அமைந்துள்ளன. அவர்கள் தாங்கள் கண்டுபிடித்த ஆற்றல் அளவே, விஷயங்களே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கண்ட காட்சி அவர்களின் திருஷ்டியின் அளவேயாகும்.

ஏனெனில், அடியார்கள் மீது அல்லா(ஹ்)வின் 'தஜல்லி' என்னும் அனுக்கிரகம் அவரவர் தராதரத்துக்குத் தக்கபடியே கூடர் விடுகிறது. தராதரத்தின் தன்மைக்கேற்ப ஞான வெளிப்பாட்டிலும் அவர்கள் பலவிதத்தினராய்க் காணப் படுகின்றனர். ஆனால், அல்லாஹுத்தஆலாவோ, எல்லாருக்கும் சரிசமமாகவே தன்னுடைய 'நூரை' (தஜல்லியை)வெளிப்படுத்தக் கூடியவனாய் இருக்கிறான்.

பல தர்ஜாக்களில் அந்தரங்கம் நிறைந்திருக்கிறது

அருமை நண்பனே, அந்தரங்கப் பொருள் எல்லை கடந்ததாகும். வார்த்தைகளுக்குள் அதை அடங்கமாட்டாது. அதை எப்படிப் புறக்கண்ணால் காணமுடியும்? தாத்து, ஸிபாத்து, அஸ்மாஃ இலாஹி என்பனவெல்லாம் அகமிய ஞானத்தால் மட்டுமே விளங்கிக் கொள்ளக் கூடியவையாகும். அவற்றின் அந்தரங்கத்தில் பலவகைப் படித்தரங்கள் இருக்கின்றன. அதனால், அது எல்லாப் பாத்திரங்களிலும் நிரம்பி விடுவதில்லை.

எனவே, பற்றும் பிரயாசையும் உடையவர்களின் ஞானமார்க்கத்தில் அது வெளிப்படையாகிறது. அவ்வேலே கல்ப் என்னும் ஞானவான்கள், அந்த அந்தரங்கக் கருத்துக்களை

வெளிப்படுத்தும்போது, தத்தம் மனோ நிலைக்கு ஏற்றவாறு சற்று மர்மமாக அவற்றை வெளியிடுகின்றனர்.

ஸ்தூல உணர்வு குழந்தையும் ஆத்ம உணர்வு தாயும் ஆகும்

நாம் வாழும் பிரபஞ்சம் ஸ்தூல உணர்ச்சி சம்பந்தப்பட்டதாகும். அதை 'ஆலமே ஹிஸ்' என்று சொல்வர். இப்பிரபஞ்சம் ஒரு நிழலுக்கு ஒப்பானதாகும். மேலும், இந்த ஸ்தூல உலகை ஒரு குழந்தைக்கும், ஆத்ம உணர்வை, அதை வளர்க்கும் தாய்க்கும் ஒப்பிடலாம். நிழலானது ஒரு பக்கம் ஒளி இருக்கும்போது தான் தெரியவரும், ஒரு பக்கம் ஒளி இல்லாவிட்டால் எல்லாம் இருள் மயமான 'அதம்'தான்.

இதே போல் பிரபஞ்சங்களெல்லாம் அஸ்மா—ஸிபாத் என்னும் ஞான சூரியனின் ஒளியின் உதவியாலேயே வெளிப்படையாகின்றன. இந்த ஸ்தூல உலகம் அந்த ஞான உலகத்தின் உதவி கொண்டு போஷிக்கப்பட்டு வளர்கிறது. அதாவது, சிசுவை ஊட்டி வளர்க்கும் தாதியைப் போல் ஞான உலகம் ஸ்தூல உலகின் ஊட்டத்துக்கு உதவுகிறது. எனவே, ஞானவான்களின் ஆத்ம நிலையில் உண்டாகும் 'முகாஷபா' என்னும் ஞான விகாசிதங்கள் அறிவுக்கும் ஸ்தூலத்துக்கும் கட்டுப்படாதவையாகும். அறிவு, ஸ்தூலம் ஆகியவற்றின் கட்டுப்பாடுகளால் வீணாயும் கஷ்டம், இதயம் தெளியாதவர்களுக்கே உண்டாகும். இதயம் தெளிந்து தன்னிலை மறந்த ஞானவான்களுக்கு இந்த 'முகாஷபா' யினால் எந்த விதமான கஷ்டமும் உண்டாகாது.

இரண்டுவகை உலமாக்கள் நிலை

ஆரிபாகிய மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் பாடல்கள் சிலவற்றில் தந்துள்ள அருமையான கருத்து வருமாறு:

அல்லாஹுத்தஆலா, 'யஹ்மிலூ அஸ்பாரா': (சுமைகளை அவர்கள் சுமக்கிறார்கள்)'' என்று கூறியிருக்கிறான். தகுதியில்

லாதவர்களுக்கு ஞானம் ஒரு பெரும் சுமையேயாகும். வெளிப் படையான இல்மு, 'ஹூ' என்னும் ஞானத்தை விட்டும் வேறுபடுத்தாக இருக்கிறது.

இதனால் நிராசையம் உண்டாகிவிடாது வெளிப்படை யான இல்மினால், அகமியப் பயன் இல்லாததால், இது நிலைத் திருக்கமாட்டாது. அஹ்லே கல்புகளாகிய ஞானவான் களுக்கு அவர்கள் பெற்றுள்ள இல்மு வாகனமாக உதவுகிறது. இதனால் அவர்கள் அர்ஷுவரை பதவியில் உயர்த்தப்படு கின்றார்கள். ஆனால், ஸ்தூல வாதிகளின் இல்மாகிறது. அவர்கள்மீதே ஏறிச் சவாரி செய்கிறது. இவர்கள் அதற்குப் பொதி சுமக்கும்) வாகனமாகிவிடுகின்றனர். இதுதான் இரண்டு வகையான ஆலிம்களின் நிலையாகும்.

இல்மும் அமலும் மஃரிபத்துக்கு வழிகாட்டிகளே

இல்மைக் கற்றுக்கொள்வதும் அமல் புரிவதும், அல்லாஹ் வின் மஃரிபத்தை அறிவதற்கேயாகும்.

அங்ஙனம் இல்மாலும், அமலாலும் ஒருவனுக்குப் பெருமையும், கர்வமும், 'தான்' என்ற செறுக்கும் உண்டாகு மானால், அதனால் அவன் ஹக்கை விட்டும் தூரமாக்கப்பட்டு வனுவான். அவன் புரிவது வெளிக்கோலத்தில் இபாதத்தாக இருந்தபோதிலும். அந்தரங்கத்தில் அது பாவமான காரியமே யாகும்.

இச்சைகள் அஞ்ஞான அந்தகார இருளை உண்டாக்கி விடுகின்றன. சடங்குமயமான இல்மும் இபாதத்தும்கூட அல்லா(ஹ்)வின் ஒளியை மறைக்கும் திரைகளாக இரு கின்றன. ஆகையால், நண்பனே, நீ உன் உள்ளமையை விட்டு இல்லாமையின் பக்கல் செல்வாயாயின் அப்போது திரைகள் அனைத்தும் விலகி உனக்கு ஹக்கின் தஜல்லி உண்டாகும்.

இன்ஸானே காமில் ஹஜ்ரத் ஜிப்ரயீலைவிட உயர்ந்தவன்

'குல்ஷனே ராஸ்' என்னும் நூலில் அதன் ஆசிரியர் சையத் மஹ்மூது ஸபிஸ்தரி (ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்

> ''வெளவால் சூரியனைப் பார்ப்பதற்கு ஆற்றல் பெற்றிருக்கவில்லை. அது சூரியனைப் பார்க்காதது அதன் துரதிருஷ்டவசமேயாகும். இவ்வாறே புத்தி யின் கண்ணைக்கொண்டு ஹக்கின் ஏகத்துவ ஜோதி யைக் காண்பதென்பது முடியாத காரியம்''

ஹஜ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் மற்ற மலக்குகளை விடப் பதவியில் உயர்ந்தவர்கள். அறிவின் தோற்றத்தில் தென்படுபவர்களாகவும், மனிதக் கண்களுக்கு வெளிப்படுப வராகவும் இருக்கின்றார்கள். ஆனால், பனுபில்லா(ஹ்)வின் ஸ்தானத்தில் இவர்கள் ஆற்றல் அற்றவர்கள். பனுவில் எல்லா ஸிபத்துக்களும் அழிந்து போய்விடுகின்றன. இந்தப் பரிபக்குவம் மலக்குகளுக்குச் சித்திக்கமாட்டாது; ஆனால், இன்ஸானே காமிலாகிய மனிதனுக்கு அந்தப் பதவி சித்தி யாகிறது.

எனவேதான், இன்ஸானே காமிலின் பதவி, ஜிப்ரயீலின் பதவியைவிட உயர்ந்த ஒன்று என்று சொல்கிறோம். இன்ஸானே காமிலைத் தவிர வேறு யாரும் ஆலமே அர்வா கூடிலும், ஆலமே அஜ்ஸாமிலும் (சூட்சும உலகம், ஸ்தூல உலகம் ஆகிய இரண்டிலும்) பிரவேசித்துப் பதவி பெறுவ தென்பது முடியாத காரியம்.

மனிதன் அல்லா(ஹ்)வின் இரகசியம் தாங்கியவனுவான்

மலக்குகளுக்கு அல்லா(ஹ்)வின் சந்நிதானத்தில் நெருங் கும் தன்மை (குர்பே இலாஹி) உண்டு. எனினும். இவர்கள், 'ஸீம அல்லாஹ்' என்ற ஐக்கியப் பதவியை அடைய முடிவ தில்லை.

இப்பிரபஞ்சம், ஹக்கின் (உஜூதின்) பிரதிபிம்பமாகும். மனிதனுனவன் அந்தப் பிரதிபிம்பம் தெரியும் நீலக்கண்ணுடியைப் போன்றுள்ளான். கண்ணுள் உரு அமைந்திருப்பது போல் மனிதனுள் 'ஸிர்ரு' அமைந்திருக்கிறது. எனவே, மனிதன் அல்லா(ஹ்)வின் இரகசியமாய் அமைந்திருக்கிறான். ஹக்கின் தோற்றம் வெளிப்படும் கண்ணுடி இன்ஸானே காமிலினுடைய உள்ளமேயாகும்.

இவ்வுலகம் ஹக்கின் (உஜூதின்) நீலக்கண்ணுடியாகும். அதை அல்லா(ஹ்)வின் நிழல் என்றும் உவமானம் கூறலாம். அந்தப் பிரதிபிம்பத்தை வெளிப்படுத்திக் காட்டும் கண்தான் மனிதன்.

பொருள்களைப் பார்ப்பதற்குக் கண்ணேட்டமும் ஒளியும் தேவை. கண்ணும் ஒளியும் இல்லாவிட்டால் பொருள்கள் இல்லை. இதேபோல் அஸ்ராரே இலாஹியும், ஹக்கின் இர்பானும் மனிதனுக்கு வெளிப்படையாகின்றன. மனிதன் அந்தப் பிரதிபிம்பம் வெளிப்படும் கண் ஆகின்றான். அந்தக் கண்ணின் கருவிழி மத்தியில் ஒரு மனிதனின் தோற்றம் தெரிகிறதே, அது யாருடையது? யாரை அவன் பார்க்கிறானே, அவர் அதில் காட்சியளிக்கிறார். அவன் ஹக்கைப் பார்க்கும் போது ஹக் அதில் காட்சியளிக்கிறான். ஞானக்கண்ணின் கருவிழி மத்தியில் காணப்படுவதே ஹக்கின் தஜல்லியாகும்.

இன்ஸானே காமிலாகிய மனிதன், உண்மையில் பிரபஞ்சத்தின் தோற்றக் கண்ணுக இருக்கிறான். அந்தத் தோற்றத்துக்குப் பின்னுல் நிரையில் ஹக்குத்தஆலா காட்சியளித்துக் கொண்டிருக்கிறான்.

"இத்தப் பாக்கியம் வானத்துக்கும் கிடைக்கவில்லை; மலக்குகளுக்கும் கிடைக்கவில்லை. ஆதமின் மகனுகிய மனிதன் இந்த மர்மத்தைத் தன்னுள் வைத்துக் கொண்டிருக்கிறான்" என்று பறைசாற்றுகிறது பாரஸீகப் பாடல் ஒன்று.

கண்ணுக்குக் கண் தெரிவதில்லை

மனிதனே, நீ பிரபஞ்சத்தின் கண்ணுக இருக்கிறாய். அல்லாஹுத்தஆலா அந்தக் கண்ணின் ஒளியாக இருக்கிறான், கண்ணுடைய உதவியால் பிரபஞ்சம் முழுவதையும் காண முடிகிறது. ஆனல், கண்ணுக்கு அந்தக் கண் தென்படுவதில்லை. "அதைக் கொண்டு எல்லாவற்றையும் பார்க்கின்றான் மனிதன். ஆனல், அதை அந்தப் பார்வையினல் பார்க்க முடியவில்லை. எனவே, அவன் கண்ணுக்குள் இருக்கிறான். எனினும், கண்களுக்கும் மறைந்தவனுக இருக்கின்றான்." (இஃது உர்துப் பாடல் ஒன்றின் கருத்தாகும்)

பார்ப்பவனின் கண்ணில், பிரதிபிம்பத்தின் சகல தோற்றங்களும் பதிந்து விடுகின்றன. அந்தத் தோற்றத்துக்கும் கண் உண்டு. அது அசல் தோற்றத்தைப் பார்க்கிறது. இதைக் கொண்டு என்ன தெரிகிறதென்றால், மனிதன் தன்னுடைய கண்ணைக் கொண்டு தன் கண்ணில்படும் தோற்றத்தைக் காண முடிவதில்லை. இதைப் போல ஸ்தூலக் கண் கொண்டு ஹக்கைக் காண முடியாது.

அல்லாஹ் காணும் காட்சி எது?

அல்லாஹுத்தஆலா தன்னைத்தான் மனிதனுடைய தோற்றத்தில் காண்கிறான். உதாரணமாக என் எதிரில் ஒரு மனிதன் நிற்கிறான். அவன் பிரதிபிம்பம் என் கண்ணில் கருவிழியில் தெரிகிறது. இதை என் எதிரில் நிற்கும் மனிதன் மட்டும்தான் காண முடியும்; நான் பார்க்க முடியவில்லை. எனவே, என்னுடையக் கண்ணைக் கொண்டு அல்லாஹுத்தஆலா, தன்னுடைய ஜமாலைக் கண்டு கொண்டிருக்கிறான்!

ஒரு கேள்வி

ஸுவைதா என்றால், இதயக் கமலத்தில் உள்ள ஒரு கரும் புள்ளிக்குப் பெயர். இதற்கு ஓர் உதாரணம் தரலாம்:

வஹ்தத் என்பது ஒன்றே ஒன்றுதான். வஹ்தத் என்னும் தன்மையில் இரண்டு புள்ளிகள் இருப்பதற்கு இடம்பாடில்லை. இதைப்போல் இதயம் ஒன்றுகவும், அதிலுள்ள கரும்புள்ளி ஒன்றுகவும் (இரண்டாகக்) கணக்கிடப்பட மாட்டாது, இரண்டும் சேர்ந்து ஒன்றேயாகும்.

ஒன்று அசலாகும்; மற்றொன்று அதன் நிழலாகும். இந்த மர்மத்தை அறிந்து உணர்வது மிகவும் சிரமம். நம்முடைய இதயம் அந்தக் கரும் புள்ளியின் பிரதிபிம்பத்தைக் காட்டுகிறது. அங்ஙனமிருந்தும் இதயத்தின் நிலைமை அசலைப்போல் ஒரே நிலையில் இல்லாமல் எப்போதும் மாறுதல் அடைந்து கொண்டே இருக்கிறது. ஏன்?

இந்தக் கேள்விக்கு ஒரு விளக்கம்:

இதயத்திலுள்ள கரும்புள்ளிதான் அசல் என்று நாம் ஒத்துக்கொள்வோமானால், அதற்குக் 'கதீம்' (மூலம்) ஏது? இதயமே கதீமாகும்: கரும்புள்ளி அதன் பிரதிபிம்பமாகும். ஆயினும், இவை துடித்துக்கொண்டும் மாறுதலடைந்து கொண்டும் இருப்பதன் காரணமென்ன? இது தன்னுடைய அசல் ஸ்தானத்தில் இருந்து கொண்டு அசையாமல் ஒரே நிலையாக இருக்க வேண்டுமல்லவா?

இதற்குப் பதில்

தண்ணீரில் சந்திரனின் பிரதிபிம்பத்தைப் பாருங்கள். தண்ணீர் அசைவற்று இருக்கும்போது சந்திரனின் பிரதிபிம்பமும் அசைவற்றுக் காட்சியளிக்கிறது. தண்ணீரில் சலனம் ஏற்பட்டு அசைந்தால் சந்திரனின் பிரதிபிம்பமும் அசைந்து சிதறிப் போகிறது. இது தண்ணீரின் அசைவேயல்லாமல் சந்திரனுடைய அசைவாக மாட்டாது. தண்ணீருள் தோற்றமளித்த சந்திரன் தன்னுடைய அசல் ஸ்தானத்தில் சிறிதும் ஆடாமலும் அசையாமலும் நிலைத்தே இருக்கிறது. இந்த உதாரணத்தில் அதற்குப் பதில் அடங்கியுள்ளது.

அமைதி சிதறும் காரணம் யாது?

உலகின் 'அனுஸிர்' என்னும் மூலப் பொருள்கள் சிருஷ்டி வடிவில் காணப்படுகின்றன. இவை பெருகுவதும் மாறுவதும் இயற்கையாகும். சிருஷ்டித்துவம் ஒன்றேயாயினும் அது வஹ்தத்தேயாயினும்-பிரபஞ்சம் பற்பல தோற்றங்களில் பன்மையாகக் காட்சியளிக்கிறது- உண்மையில் சிருஷ்டி என்னும் வஹ்தத் ஏகமாகவே இருக்கிறது. மேலே கேள்வி எழுப்பிய குல்ஷனே ராஸ் (ஷாரிக்) இதன் அந்தரங்கத்தை அறியாதவராக விளங்குகிறார். ஆகையினால், வஹ்தத் என்பது சலனமற்றுப் பன்மையாய்(ப் பலவிதமாய்) அசைந்து கொண்டிருக்கிறதே ஏன் என்று கேட்கிறார். இதற்கு விடையை அவரால் கூற முடியவில்லை. இந்தப் பிரச்னையை அவரால் தீர்த்து வைக்க முடியவில்லை.

இதைப்பற்றி அவர் இங்கு நன்றாய்ச் சிந்தித்துப் பார்த்திருந்தால். இதன் உண்மை வெளிப்படையாகியிருக்கும் இதை உணர உன்னத நிலை வேண்டும்.

''உனக்கும் மிஃராஜ் கிடைத்திருந்தால், நீயும் ஹக்கைக் கண்டிருப்பாய். நீயோ நீயின் தோற்றத்தை கண்டவனாக இருக்கிறாய். ஆகவே, அகக்கண் கொண்டு தெளிவை அறிவாயாக'' (ஓர் உர்துப் பாடலின் கருத்து)

''மூமினைத் தவிர வேறு யாருக்கும் இந்த இரகசியம் தெரியவராது; ஏனெனில் வெளிப்படையில் 'காரி'யாகக் (குர்ஆன் ஓதுபவராக) காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் அவனே குர்ஆனாகக் காட்சியளிக்கின்றான்'' (அல்லாமா இக்பால்).

''நீ எனக்குக் கண்ணுடியாக இருக்கிறாய்; நான் உனக்குக் கண்ணுடியாக இருக்கிறேன். உன்னில் என்னுடைய தோற்றம் வெளியாகிறது. என்னில் உன்னுடைய தோற்றம் வெளியாகிறது'' (ஓர் உர்துப் பாடல்)

அல்லாஹ்-அய்னுல் இன்ஸான்

இதுவும் ஓர் அற்புதமே! அல்லாஹுத்தஆலா அய்னுல் இன்ஸானாக (மனிதனின் கண்ணாக) இருக்கிறான்; பிரபஞ்சத்தின் சாராம்சமாகவும் விளங்குகிறான். உண்மையில் அல்லா(ஹ்)வுக்கு மனிதனுடன் உள்ள அதே தொடர்புதான் மனிதனுக்கும் இந்தப் பிரபஞ்சத்துடன் இருந்து வருகிறது.

மனிதனின் 'ஹகீகத்' ஹக்கின் கண்ணாடியாகும். மனிதன் சகல மகிமைகளையும் அடையப் பெற்றவனாய் இருக்கிறான். காணப்படும் பிரபஞ்சங்கள் (ஆலம்கள்) முழுவதும் இன்ஸானே காமிலின் அந்தரங்கத்தின் பல வகை நிலைகளாகவும் தோற்றங்களாகவுமே இருக்கின்றன. இதுவே மனிதனுடையதத் துவமாகும்.

''ஏ அமீர், இம்மாபெரும் பிரபஞ்சத்தை நான் கண்டுணர்ந்த பொழுது இது என்னுடைய ஞான மதுக் கூடத்தின் ஒரு சின்னஞ்சிறு குவளை என்று எண்ணிக்கொண்டேன்'' (உர்துப் பாடல்)

கண், காது, கை, கால் எல்லாம் அவனே

لَا يَزَالُ عَبْدِيْ يَتَقَرَّبُ إِلَيَّ بِالنَّوَافِلِ حَتّٰى أَحْبَبْتُهُ فَإِذَا أَحْبَبْتُهُ
كُنْتُ سَمْعَهُ الَّذِيْ يَسْمَعُ بِيْ وَبَصَرَهُ الَّذِيْ يُبْصِرُ بِهِ وَيَدَهُ
الَّتِيْ يَبْطِشُ بِهَا وَرِجْلَهُ الَّتِيْ يَمْشِيْ بِهَا

''என் அடியான், நபில் (வணக்கம்)களைக் கொண்டு என்னை நெருங்குங்கால் நான் அவனை விரும்பி நேசிக்குமளவு அவனுக்கு என்னிடம் அன்மை உண்டாகிவிடுகிறது. அப்போது நான்

அவன் கேட்கும் காதாகவும், அவன் காணும் கண்ணாகவும், அவன் பற்றும் கரமாகவும், அவன் நடக்கும் காலாகவும் ஆகி விடுகிறேன்''

என்று இறைவன் கூறுவதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமாகி இருக்கிறார்கள்.

கேட்பவனும் பார்ப்பவனும் முற்றும் அவனாகவே இருக்கிறான் என்பதை, இந்த ஹதீதே குத்ஸியிலிருந்து நாம் தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம். இங்கே விவரிக்கப்பட்ட நற்பாக்கியத்தை ஒரு நல்லடியான் அடைவானாயின், அவன் காலடி மண்ணை வானமும் தன் தலை மேல் எடுத்து வைத்துக் கொள்ளுமென்பதில் சந்தேகமென்ன?

'தன்னை' விட்டும் விடுதலையடையாதவன்-'நான்' என்னும் தன்மையிலிருந்து விடுபடாதவன்-மேற்கூறிய ஞானப் பொக்கிஷத்தில் ஒரு சிறிதும் அடையாதவனாவான்.

உலக வாழ்வு கனவு போன்றது

நண்பனே, நீ புத்தி சாலியாகவும் தந்திரசாலியாகவும் இருக்கலாம்; ஆனால், தன்னை மறந்தவனாக இல்லையே. ''அமரர் (மலக்கு) போன்ற நிலையை எய்துபவனும் 'தன்னை மறக்காவிடின் சைத்தானாகவே ஆகிவிடுவான்'' என்றல்லவா மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள் அருளியுள்ளார்கள். உலக வாழ்வை நீ சதமென்றோ பயனுடையதென்றோ நம்பியிருப்பாயாயின், இது பகற்கனவேயன்றி வேறொன்றுமில்லை நீ உலகில் காண்பதெல்லாம் ஒருவகை நிழலேயாகும். உண்மையில் நீ காண்பதெல்லாம் அல்லாஹுத்தஆலாவின் உஜூதின் பிரதிபிம்பமேயாகும்.

உதாரணமாக மனிதன் தூக்கத்தில் கனவு ஒன்று காண்கிறான். அதில் நேர்மையற்ற தோற்றங்களைப் பார்க்கிறான். அத்தக் கனவை அசலானதென்று, உஜூதின்படி இருக்க

வேண்டியதே என்றும் எண்ணிக் கொள்கிறான். அது பிரேமையான பொய்த் தோற்றமென்பதை அப்போது அவன் எண்ணிப் பார்ப்பதே இல்லை. அவன் காண்கிறானே கனவு, அதற்கு வெளியில் அது வெறும் நாஸ்தியாகவே இருக்கிறது. அவன் விழித்தெழுந்த பின்னர் தான் இந்த உண்மை அவனுக்குப் புலனாகிறது.

இது போன்றுதான் மனிதனுடைய இவ்வுலக வாழ்வும் அமைந்துள்ளது. மறைவானவை யாவும் மறுமையில் பகிரங்கமாகிவிடும். கனவு கண்டவன் விழித்தெழுந்ததும் தான் கண்டவை வெறும் பிரேமை என்ற உண்மையை உணர்வதைப்போல் இவ்வுலக வாழ்வும் எத்துணை மாயமான தாய் இருக்கிறது என்பதை மரணத்திற்குப் பின்னரே மனிதன் நேரடியாகக் கண்டுகொள்கிறான்.

மரணத்தின் மூலம் அவன் ஜீவியம் என்னும் கனவி லிருந்து விழித்து எழுகிறான். அப்போது கற்பனை சிந்தனை யெல்லாம் மறைந்தொழிந்து போகின்றன! அப்போது தெளி வாகக் காட்சியளிப்பது அல்லா(ஹ்)வின் வஹ்தத்து ஒன்று தான். உஜூது என்பது ஒன்றே. அதை நாம் அன்னியமான தாய்க் கருதி ஞானமிழந்து கிடந்தோம், என்ற உண்மை அப்போது விளங்கும். நாம் உலகில் உண்மையென்று நினைத் திருக்கும் அனைத்தும் நம் எண்ணமும் சிந்தையுமல்லாது வேறு ஏதுமல்ல.

''மதரஸாவோ, ஆலயமோ, இல்லமோ, விக்ரகக் கூட மோ எதிலும் நாம் விருந்தாளியைப் போல் கிடந்தோம். ஆனால், விருந்தளிக்கும் சொந்தக்காரனைக் கண்டு கொள்ள வில்லை.'' (ஓர் உர்துப் பாடலின் கருத்து) கண் பார்வை யிலுள்ள அன்னியமான தன்மையே இந்த மாபெரும் தவறுக்குக் காரணமாகும்!

வஹ்தத் வெளிப்பட்டால் பன்மை மறைந்துவிடும்

அல்லா(ஹ்)வின் உஜூது ஒருமையானது, பிரபஞ்சத் தின் காட்சிகள் (ஜுஹூர்) பன்மையானவை. எனவே, வஹ்தத் வெளிப்படையானால் பன்மை உணர்வு மறைந்து போய்விடும். அல்லா(ஹ்)வின் உள்ளமையின் சுடர் ஒளி ஞான வழி நடக்கும் ஒருவனுடைய அறிவென்னும் மலையுச்சி மீது வெளிச்சம் காட்டத் தொடங்கி விட்டால், அவனுடைய உலக வாழ்க்கையில் படிந்துள்ள இருளெல்லாம் மறைந் தோடிவிடும். அதாவது, 'தான்' என்னும் தன்மையும் பன்மை உணர்வுமான இருள் நீங்கிப்போய் விடும். ஒருமை எனுமே அமைதிக்கு வழியாகும். ஞானிக்குப் பன்மை உணர்வு குறையக் குறைய வஹ்தத் என்னும் ஒருமை உணர்வு அதிகரிக்கும்.

நிர்ணயத்தின் இரண்டு காரணங்கள்

'தஅய்யுன்' என்னும் நிர்ணயத்துக்கு இரண்டு காரணங் கள் உண்டு. ஒன்று வஹ்தத்தின் காரணம். மற்றது கஸ்ரத்தின் காரணம். கஸ்ரத் என்னும் பன்மை உணர்வு மறைவதே ஒருமையுணர்வு என்னும் வஹ்தத் உண்டாகக் காரணமாய் இருக்கிறது. இந்த இரண்டு விஷயங்கள் ஞான வழி செல்லும் சாலிக் சம்பந்தப்பட்டவையாகும். இப்பிரயா சையின்போது சில சமயங்களில் அவன் வஹ்தத்தின் ஒளி பிரகாசிக்கும். அப்போது அவன் அந்த ஒளியின் தோற்றத்தில் லயக்கைக் காணுவான்! சில சமயங்களில் அவன்மீது பன்மை உணர்ச்சி ஆதிக்கம் கொண்டு ஆனா அழுக்கும். அப்போது தெளஹீதின் ஒளி முஷாஹதாவில் தெரியவரமாட்டாது.

உள்ளம் சுருங்கும்-விரியும்

ஞானவழி நடக்கும் ஸாலிகின் உள்ளம் (தன்மையில்) விரிதலும் உண்டு; சுருங்குதலும் உண்டு. இவ்விரண்டு நிலை களும் சுயேச்சையாயில்லாமல் ஆக்கிரமிப்பில் உண்டாகும். இதை அடக்கியாள்வது மனித சக்தியினால் முடியாத காரிய மாகும்.

உள்ளம் சுருங்குதல் என்பது அஞ்ஞானத் திரைபோல் மனத்தில் படிந்து சிக்கலே ஏற்படுத்தும்; விரியுதல் என்பது இபாதத்தின் பயனாகக் கஷ்புடைய நிலையில் உள்ளம் தெளிவடைந்து விசாலமடையும். அப்போது சாந்தி நிலை தெரிய வரும்.

மூன்றுவகை முஷாஹதாவில் 'விலாயத்து'ப் பதவி உண்டு

அருமை நண்பனே, நம்முடைய உள்ளங்கள் ''ஆலமே மிஸால்' எனப்படும். இதுவே இன்ஸானுக்கு மூலாம்சமாகும் அஸ்மா ஸிபத்துடைய சிறப்பைக்கொண்டு, மஹ்பூபா (என்னும் அல்லாஹ்) உடைய நூனு இந்த உள்ளத்தில் அடங்கியுள்ளது. இதனால் அஃது ஒரு விநாடியாவது ஓய்ந்திருப்பதில்லை. சதாவும் அல்லா(ஹ்)வின் 'தாத்'தின் தஜல்லியைக் கண்ணுறும் முஷாஹதாவில் ஈடுபட்ட வண்ணமாய் இருக்கிறது.

ஆகையினால்தான். நாம் ஸுலூக் சம்பந்தப்பட்ட காரியங்களைத் தொடக்கத்திலிருந்து ஆரம்பித்துச் செய்யவேண்டியதாயிருக்கிறது. ஸாலிக்காகிய ஞானப் பிரியர்கள், கமாலியத் என்னும் பதவியை அடையும்போது, அவர்களுடைய தன்மையின் காரணமாக அவர்கள் மனம் மீண்டும் பன்மையின் பக்கம் சார்ந்து சிந்தனைகள் என்னும் சுழலில் சிக்கிவிடுகிறது. அதனால், அதனுள் பல அலுவல் (அஷ்கால்)கள் உண்டாகிவிடுகின்றன. பன்மை என்னும் மாய்கை, மனத்தை இறைவனின் திருக்காட்சியை விட்டும் விலக்கி விடுகிறது. அப்போது அதற்கு வேறு போக்குப் புலப்படுவதில்லை. இத்தகைய தருணத்தில் முயற்சி எடுத்தாவது அத்தகைய எண்ணங்களை மனத்தை விட்டு அகற்றி, ஞானப் பதவியை அடைவதில் ஆழ்ந்துவிட வேண்டும்.

தஜல்லியாத்தை அடைவதே விலாயத்

பன்மை உணர்ச்சிகளை (அஞ்ஞான இருளை) விட்டும், நண்பனே நீ ஒதுங்கிச் சென்று, வஹ்தத்துடைய பதவியை

அடைவாயாக! அது அடையாளமில்லாத ஸ்தானமாகும்; வருணிக்க இயலாத உன்னதப் பதவியாகும். தனிப்பட்ட 'தாத்' உடைய அந்தஸ்தாகும். 'கில்ரு'நபியைப்போல் 'தாத்' என்னும் நித்திய ஜீவியத்தை அளிக்கும் நீரைப் பருகுவாயாக! இதனால் மஹ்பூபின் காட்சி உனக்குப் புலனாகும். ஸாலிக்கின் உள்ளத்தில் திடீரென்று மாறுதல் ஏற்படும். அவன் அந்த இன்பத்தில் மெய் மறந்துவிடுவான் இதுவே விலாயத் ஆகும்.

''ஆத்மீகக் கடல் சுயமே அலே மோ தத் தொடங்கியது; அதிலிருந்து ஓர் உன்னத நிலை தோன்றியது'' என்ற பாடலில் மௌலானா ரூமி(ரஹ்) அவர்கள் இதுபற்றிய தாத்பரியத்தை அடக்கியுள்ளார்கள்.

நுபுவ்வத் முடிந்து விட்டது. ஆனால்...

நுபுவ்வத் முடிவடைந்து போய்விட்டது. புதிதாய் இனி எந்த நபியும் வரமாட்டார்கள்; ஆனால், அத்தத்துவமுடைய தாத், அஸ்மா, ஸிபாத், தஜல்லி என்னும் பதவிகளுடைய முஷாஹதாவின் வழிகள் எஞ்சியிருக்கின்றன. இவைதாம் வலிமார்களுடைய 'விலாயத்' என்னும் பதவியின் அம்சங்களாகும். அதாவது, நபித்துவத்திற்குப் பதிலாக விலாயத்து உண்டு.

நண்பனே, உனக்கும் இந்தப் பதவி உண்டாகலாம். இதை மறந்துவிடாதே! இத்துறையில் ஆழ்ந்து உன்னை மூழ்கடித்துவிடு! தன்னைத்தான் 'பனா'வாக்கிக் கொள். ஞான மதுவையுண்டு போதையில் இரு. இப்படிச் செய்தால் நீ 'நான்' என்னும் பிடியிலிருந்து விடுபடுவாய். உனக்கு விலாயத் கிடைக்கும்; நீ மஹ்பூபை (உன் நேசனை) அடையவாய்.

'பனா' ஆவதற்குக் கராமத்து அவசியமில்லை

நண்பனே, வீணான எண்ணங்களையும், ஷரீஅத்துக்கு விரோதமான பேச்சுக்களையும், தற்பெருமையான காரியங்

களையும், பிறரை வியக்கவைக்கும் கராமத்து ஆசைகளையும் விட்டுத் தொலைப்பாயாக. காரணம், மனிதனுக்கு வேண்டிய கமாலியத்தான பதவி, தன்னை 'பனு பில்லாஹ்' ஆக்கிக் கொள்வதில்தான் அமைந்துள்ளது. அதற்கு இபாதத்தும், ரியாலத்தும், பக்கீரும் தேவை. இந்நடைமுறையில், ஞான வழி நடப்பவனுக்குப் பல சோதனைகள் ஏற்படும். 'பக்கீர்' என்னும் தாழ்மையின் வழியாகவும், ஞான நிபந்தனைகளுக்கு உள்பட்டதாகவும் அவை இருக்கலாம். அப்படிப்பட்ட காரணகாரியங்கள் ஞானவழி நடப்பவனுக்கு 'நான்' என்னும் அஞானியத்தினுல் உண்டாகியிருந்தால் அது 'இஸ்தித் ராஜ்' என்னும் மாய-ஏமாற்று வேலைகளாகும். அது ஷரீஅத்துக்கு ஒவ்வாதது.

இப்படிப்பட்ட நடத்தையுடையவன் அல்லாஹுத்த ஆலாவுக்கு விரோதமாக நடப்பவனுகிறுன். இறைவன் இத்தகையவனுடைய பகிரங்க அந்தரங்க அருட்சாதனங்களைக் கட்டுப்படுத்தி வைப்பதில்லே. அவனே அவன் வழியிலேயே விட்டு வைக்கிறுன். இதனுல், வழி தவறி அவன் கர்வம் கொண்டவனுகிறுன். அல்லா(ஹ்)வின் நட்பு அவனே விட்டும் நீங்கிவிடுகிறது!

பதவியையும் கராமத்தையும் வேண்டுவது ஒருவகை வியாதியாகும்

ஞானவழி நடப்பவருக்குப் பெருமையும், பதவியும் கராமத்தும் வேண்டுமென விரும்புவது ஒருவகை வியாதியாகவே கருதப்படும். பதவி விரும்பி யுழல்வதால் ஒருவகைப் பெருமையும் வெளிப்பகட்டும் உண்டாகின்றன.

நண்பனே, எக்காரணங் கொண்டும் நீ உன்னை இந்த வியாதிகளில் சிக்க வைத்துக் கொள்ளாதே! மக்களை மகிழ்விப்பதற்காகச் செய்யும் வணக்கம் மனிதனைக் கொல்லும் நஞ்சுக்கு ஒப்பாகும். பதவியும் பெருமையும் கராமத்தும் வேண்டுமென்று விரும்புகின்றவர்க்கு இந்தக் கேடுகள் விளைகின்றன.

பொது மக்கள் உறவு நற்பதவியிலிருந்து நீக்கிவிடும்

நண்பனே, நீ ஞானியாக விரும்பினுல் இயன்ற மட்டும் சாதாரண மக்களின் சகவாசத்தை விட்டும் ஒதுங்கி இரு. உன் மனம், வேடிக்கைகளின் பக்கல் போகாதிருக்கட்டும். சாதாரணமான மக்களுடைய போக்கில் சிக்கி விடாதே! நீ அவர்களை உன் பக்கல் இழுத்துக்கொள். உன்னை அவர்கள், இவர் நல்ல மனிதர், இவர் ஸூபி, என்று சொல்ல வேண்டுமென்று ஆசைப்படாதே; இது பிர்ஔனுடைய நடத்தையாகும்.

உன்னுடைய லக்ஷியம் அல்லா(ஹ்)வை அடையவேண்டும் என்பதாகும். உனக்கு அல்லா(ஹ்)வின் 'மஃரிபத்' என்னும் மெய்ஞ்ஞானம் வேண்டும். எனவே, ஹக்கைத் தவிர மற்ற வெல்லாம் அநித்தியம், அழிந்து போகக்கூடியவை என்பதை மெய்ஞ்ஞானி உணருகிறுன். தற்பெருமையால் இந்த ஞானம் உண்டாகமாட்டாது. எனவே, நீ ஒதுங்கி யிருப்பாயாக!

வணக்கத்தில் தூய்மையும் பிரியமும் வேண்டும்

நண்பனே, அல்லாஹுத்தஆலா, நமக்கு இயற்கையாக அளித்துள்ள திறமையை விட்டும், கமாலியத்தை விட்டும் நீ நீங்காதவனுக இருக்கவேண்டுமென்று விரும்பினுல், அறியாமையுடையவர்களான சாதாரண மக்களுடைய தொடர்பை விட்டும் ஒதுங்கியிரு! அவர்களுடன் எத்தகைய தொடர்பும் வைத்துக்கொள்ளாதே! இன்றேல் மனிதனுக்கு இயற்கையாகவே உள்ள உன்னதப் பதவியிலிருந்துகூட நீ கீழேவிழ்ந்து விடுவாய்! கீழானவர்களுக்குக் கீழானவர்களில் போய்ச் சேர்ந்து விடுவாய்! எனவே, தகாதவர்களின் சகவாசத்தை விட்டும் ஒடிப்போவாயாக!

உன்னுடைய நோக்கம் இபாதத் என்னும் வணக்க ஒழுக்கமாயின், வெறும் பழக்க வழக்கங்களை விட்டும் ஒதுங்கி இருப்பாயாக! ஏனெனில், சகவாசதோஷம் கட்டாயம்

உன்னைப் பாதிக்கத்தான் செய்யும். நீ புரியும் வணக்க ஒழுக்கம் முற்றும் பரிசுத்தமானதாய் இருக்கவேண்டும்.

தூய்மையான வணக்கமே அடியானை அல்லா(ஹ்)விடம் கொண்டுபோய்ச் சேர்த்து வைக்கிறது. இத்தகைய வணக்க முறையிலேயே நீ மூழ்கிவிட வேண்டும். உண்மையான வணக்கம் வெளிப்படையான பழக்க வழக்கங்களில் பாழாகிப் போய்விடும். ஒன்று சேரமாட்டா. வழக்கம்போல் (வெறுமனே) தொழுது வருகிற சாதாரண மக்கள் எத்தனைக் காலமானாலும் அல்லாஹுத்ஆலாவின் நட்பை (குர்பத்தை) அடைவதில்லை. இபாதத்தின் அசல் தத்துவத்தையே இவர்கள் இழந்து விடுகிறார்கள்.

ரியாலத்தின் நோக்கம் இறையுணர்வு பெறுவதே

அருமை நண்பா, நீ மானஸீகமாய் எங்கு வேண்டுமானாலும் போ; ஆனால், நப்ஸே அம்மாராவை மட்டும் நெருங்காதே! அதை எதிர்ப்பதையே உன் வழக்கமாகக் கொள்! அப்போதுதான் நீ பூர்வ ரகசியங்களை அடையப் பெறுவாய்!

நப்ஸானது ஆசைக்குக் கட்டுப்பட்டதாகாமல் ரூஹுக்குக் கட்டுப்பட்டதாகவேண்டும். மனம் மாயைகளால் தாக்கப் பட்டுப்போனால், அதற்கு மருந்து எங்கிருந்து கிடைக்கும்.

ஞானிக்கு ரியாலத்தும் ரூஹுக்கும் அத்தியாவசிய மானவையாகும். இவற்றினால்தான், இறைவனின் உணர்ச்சிகள் உன்னில் உண்டாகும். அல்லா(ஹ்)வைப்பற்றி ஓர் உணர்வு (தியானம்) உண்டாவது, ஈருலக வணக்கங்களைவிடச் சிறந்ததாகும் என்பதை அறிவாயாக! ஆசாபாசங்களின் கட்டுப்பாட்டிலிருந்து நீ வெளியே வா! உன்னுடைய சம்பந்தங்களைத் தனிப்படுத்திக்கொள்! ஹக்குடைய ஜமாலியத்தை கண்டானந்திக்கும் முஷாஹதாவில் ஈடுபட்டு உன்னையே நீ பனுவாக்கிக்கொள் இறைவனுடைய சந்நிதானத்தில் உன்னை நிரந்தரமாய் நிலைப்படுத்திக்கொள்.

மேலும், நபிகள் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கமாலியத்துக்களின் நேசத்தில் நிலைத்திருப்பாயாக. வெளிக் கோலத்தைவிட்டும் வெளிக் கருத்துக்களை விட்டும் கடந்து மேலான பதவிக்குச் செல்வாயாக! நபியின் உண்மையான வாரிசாக ஆகிவிடுவாயாக!

மேற்கூறிய எல்லைகளைக் கடந்து, காப-கௌஸைன் என்னும் நெருங்கிய ஸ்தானத்தை அடையப் பெறுவாயாக. காப-கௌஸைன் என்பது வஹ்தத்துடைய நிலையைக் குறிப்பதாகும். இதுவே ஹகீகத்தே முஹம்மதியாவுமாகும். 'உஜூப்' என்பது ஒரு நிலை; 'இம்கான்' என்பது ஒரு நிலை. இவ்விரண்டையும் அடைய வளர்ந்ததே காப-கௌஸைன்.

ஞான வழி செல்லும் ஸாலிக், மேற்கூறிய காப-கௌஸைன் நிலையை அடைந்து விட்டால், அவன் இறைவனின் நிழலில் இரண்டறக் கலந்து அழிந்து உண்மை யுணர்ந்த வலியாகிவிடுகிறான்.

அசுத்தம் நீங்கினால் சுத்தம்; இருள் நீங்கினால் ஒளி

சிருஷ்டிகளில் மனிதன் தான் உன்னதமான கடைசிப் படியில் உள்ளவன். அவனைவிட உயர்ந்த படைப்பு கிடையாது. எனினும், அவனில் ஆதியிலிருந்தே மாய்கை என்னும் இருளும் சேர்ந்தே இருந்து வருகிறது.

இத்தகைய மனிதனின் மூலமே, இறைவனுடைய 'நூரூர்' வெளியாக வேண்டியிருக்கிறது. மனிதனே இந்த உயரிய அமானிதத்தை ஆதியில் ஏற்றுக்கொண்டான். பிரபஞ்சத்தின் மற்றப் பதவிகளும் மனிதனுடைய பதவிகளின் இரு பக்கங்களிலும் சார்ந்திருக்கின்றன. மனிதனுடை மார்பை இருள் சூழ்ந்திலை; ஆனால், அவனுடைய அந்தரங்கத்தில்தான் அஞ்ஞான இருள் சூழ்ந்திருக்கிறது. இதிலிருந்து தெளிவடையும் ஆற்றல் மனிதனுக்கு அருளப்பட்டிருப்பதாலேயே, உஜூது வெளிப்படும். ஜுஹூராக அவன்

அமைந்திருக்கிறான். இதனாலேயே ஹகீகத்தின் உறைவிடம் மனிதனேயாகிறான்.

கண்ணாடி இரண்டு பக்கத்திலும் ஒளியுடையதாய் இருந்தால் முகம் தெரியமாட்டாது. ஒரு பக்கம் இருள் அடைந்திருந்தால்தான் (அதாவது, ரசம் பூசப்பட்டு இருந்தால்தான்) அதில் முகம் தெரியவரும். மனிதனின் நிலையும் இப்படித்தான். ஒரு பக்கம் இருளும் மறுபக்கம் ஒளியும் உடையதாய் இருக்கிறது, மனிதன், மண்ணால் சிருஷ்டிக்கப் பட்டு ஒரு பக்கம் இருள் உடையவனாகவே இருக்கிறான். இப்படி இல்லாதிருந்தால்? அவன் மற்றச் சிருஷ்டிகளைப்போல் இரண்டு பக்கமும் இருளால் சூழப்பட்டே இருப்பான். அப்படி இருந்திருந்தால், அவனிடம் சகல அஸ்மாக்களும், ஸிபாத்தும் பொருந்தி (ஹகீகத்) பிரதிபலிக்கக்கூடிய நிலை இருந்திராது! சுத்தத்தில் அசுத்தம் கலந்திருக்கும் வரை ஸ்ரகாசம் உண்டாகமாட்டாது.

இன்ஸானுக்கு அமரர்கள் ஸஜ்தா செய்ததேன்?

நான்காவது வானத்திலுள்ள சூரியனின் ஒளிக் கிரணமானது இந்த மண்ணுலகத்தைத் தவிர வேறெங்கும் பிரதிபலிக்கவில்லை. அந்த வானத்துக்குக் கீழே காற்று, தண்ணீர், நெருப்பு ஆகிய மூன்று அனலிர்களான மண்டலங்கள் உள்ளன. சூரியனின் ஒளியைக் கிரஹித்துக்கொள்வதில், அந்த மூன்று அனலிர்களின் மண்டலங்களைவிட இந்த மண் உலகமே அதற்கு மிக நெருங்கிய சம்பந்தமுடையதாய் இருக்கிறது. ஆகவே தான் சூரிய ஒளி பூமிக்கு வருகிறது.

மற்றொரு காரணம் யாதெனில், அந்த மூன்று மண்டலங்களிலும் இருள் இல்லை. அதனால், அங்கு ஒளியானது பிரதிபலிப்பை (அக்ஸை)க் காட்டுவதில்லை. அதாவது அங்கெல்லாம் ஒளி தங்குவதில்லை. மேலும், பூமிக்குச் சூரிய ஒளியால் உண்டாகும் பயன் அங்கெல்லாம் உண்டாவதில்லை.

இந்த உவமானத்தைக் கொண்டு விளங்குவது இதுதான்: மனிதன் 'அதம்' என்னும் இருளையும் உடையவனாய் இருப்பதால் உஜூதின் நூரானியத்தை, ஹகீகத்தின் தோற்றத்தை வெளிப்படுத்தக்கூடியவனாக அமைந்துள்ளான். அதாவது, நூரானியத்தினால் ஹகீகத்தாக விளங்குகிறான். இந்த மகிமையின் காரணத்தால்தான் தூயவர்களான மலக்குகளும், இன்ஸானாகிய ஆதமுக்கு ஆதியில் பணிந்து ஸஜ்தா செய்தார்கள். இன்ஸான் என்னும் கண்ணாடியில், அல்லாஹுத்தஆலா தனது தாத், ஸிபாத்தின் தோற்றத்தைப் பிரதிபிம்பித்து, வெளியாகிக் கொண்டிருக்கிறான். மனிதன் இத்தகைய பரிபூர்ணமான குணத்தை உடையவனாக இருப்பதால்தான் மலக்குகளுடைய மஃபூதாகவும் அவன் விளங்குகின்றான்.

ஹே மனிதா, உன் அந்தஸ்து மிக உயர்வானது; உன் 'உஜூதில்' மலக்குகள் தங்கள் மஃபூதுடைய தோற்றத்தைக் கண்டு கொண்டார்கள். ஆகவே, உனக்கு ஸஜ்தா செய்தார்கள்.

இதை மௌலானா ரூமி (ரஹ்) அவர்கள், ''ஹே இன்ஸானே, உன்னில் அந்தத் தூய 'தாத்' உடைய உஜூது இல்லாமற் போயிருந்தால், வெறும் மண்ணும் தண்ணீருமான உன்னை, மலக்குகள் எதற்கு ஸஜ்தா செய்திருப்பார்கள்?'' என்ற வினவில் விளக்குகிறார்கள்!

மனிதனின் உஜூதில், அல்லா(ஹ்)வின் 'தாத்' மறைந்திருப்பதாலேயே, 'அஷ்ரபுல் மக்லூக்' என க் கொண்டு மலக்குகள் சிரம்பணிந்து இபாதத் செய்தார்கள்.

ஹே மனிதா, இகபரம் ஆகிய இரண்டு உலகங்களும் உன்னுடைய உப அம்சங்களேயாம். உனக்குரிய இடம் இம் மண்ணுலகில் இல்லை. உன் அந்தஸ்து எல்லாவித கவுன்-மக்கான்களையும், (பிரபஞ்சங்களையும்) கடந்து, மிகமிக மேலானதாக இருக்கிறது. ஆனால், நீ, 'நான்' என்னும் நிலையினால் மேலே போக முடியாமல் தடைப்பட்டுக் கிடக்கிறாய்!

''தரீகத்துடைய ஆர்வத்தில் ஆழ்ந்து அந்த உன்னத நிலையை அடைய வேண்டும். நாம், நம்முடைய ஸ்தானத்துக்குப் போய்ச் சேருவதற்கே இந்த அரியவழி வகுக்கப்பட்டிருக்கிறது.'' (உர்துப் பாடல் ஒன்றின் கருத்து)

உள்ளத்தில் ஹக்கைத் தவிர எதற்கும் இடமில்லை

நண்பா, நீ இருந்தும் இல்லாமலாகிவிடு. அப்போது உன்னையே நீ அறிவாய். அதாவது, உன் அந்தரங்கத்தை (ஹகீகத்தை) உணர்வாய். ஜீவியத்தின் இடையிலுள்ள நிலைகளில், தங்காமல் நேரே முன்னேறுபவன்தான் வஹ்தத்தின் ரகசியத்தை அறிந்து கொள்வான். அவனே போய்ச் சேர வேண்டிய மன்ஜிலில் போய்ச் சேருவான். ஆரிபே காமிலாகிய மெய்யறிவாளன், உஜூதே முத்லக்கை நன்கு அறிவான். அதையே சதா அவன் முஷாஹதாச் செய்து கொண்டிருப்பான். ஏனெனில், அதைப்பற்றி அவனுக்கு அறிமுகமுண்டு. அதைத் தவிர வேறு உஜூதே அவனுக்குத் தெரியாது. அவனே உஜூதின் வெளித்தோற்றமாகவும், பிரதிபிம்பமாகவும் இருக்கிறான். அந்த உஜூது, குறிப்பிட்ட மனக் கண்ணாடியில் நன்கு தெரியவரும். 'உஜூதே முத்லக்' எப்போதும் தன்னுடைய ஷுஹூதிலேயே இருக்கும்.

கதீம்-முஹ்திஸாத் என்பன வெவ்வேறல்ல; கதீம் என்னும் பூர்வீகம், முஹ்திஸாத் என்னும் புதுமையில் அடங்கியிருக்கிறது. ஹக்கின் தஜல்லியைத் தவிர மற்றவை எல்லாம் அழியக்கூடியவைகளே. நூதனமானது பிரபஞ்சத்தில் காணப்பட்டுக் கொண்டே இருக்கும். அதன் தத்துவம் வாஜிபுல் உஜூத் என்னும் உள்ளமையேயாகும். அசலில் இஃது எதுவானாலும், உண்மையில் பூர்வீகமானதே (கதீமே). புதுமை என்பது வழக்கில் இல்லாத ஒன்றிற்குப் பெயரேயன்றி உண்மையில் ஒன்றுமில்லை.

உள்ளம் என்பது இறைவனுக்குரிய உறைவிடம். இந்த [illegible]

ஏதும் இருப்பதற்கு இடம் பாடில்லை. அப்படி வேறு ஏதும் வந்து குடிகொண்டாலும், அதை எந்த மூடன்தான் 'ஹக்கு' என்று ஏற்றுக் கொள்வான்? பழமையே புதுமையாய் உருவமடைகிறது. அப்படியின்றேல், சிருஷ்டியின் தத்துவமே மாறிப் போகும். எனவே, தோற்றமளிக்கும் உஜூது அனைத்தும் பொதுவாகக் கதீமானதேயாகும். இந்த உஜூது தன் பூர்வீகத்தின் பேரிலேயே நிலைத்திருக்கிறது.

இந்தத் தத்துவத்தை ஞானி ஒருவர் நன்கு உணர்ந்து தெரிந்துகொண்டுவிட்டால் இந்த மார்க்கத்தில் ஏற்படும் சகல சந்தேகங்களும் சங்கடங்களும் அவருக்கு நிவர்த்தியாகிவிடும். நண்பனே, இதை நீ நன்கு உணரவேண்டும். இதனால் உன் பிரமங்கள் தீர்ந்துபோகும். எல்லாச் சங்கடங்களுக்கும் மனக்கிலேசமே காரணமாகும். இந்த வஹ்மினால் (பேதபுத்தி) தான் ஒரு பொருளின் மீதுள்ள ஒரு சிறு புள்ளி பரவலாகிப் பெரிய வட்டம்போல் தெரிகிறது! ஒரு புள்ளி அசைந்து கொண்டே இருந்தால் அது வட்டம்போல் காட்சியளிக்கும் உண்மையில் அஃதொரு புள்ளியேயாகும்.

உள்ளமை ஒழிந்தால்தான் இல்லாமை உண்டாகும்

அருமை நண்பா, (ஹக்கை அடையும் பாதையில்) உன்-தன்னைக் குப்பைக்கூளம் என்று நினைத்து இல்லாமல் ஒழித்து விடு! உன்னை நீ வெளிப்படுத்தி இல்லாமலாக்கிக்கொள்! தன்னைத்தான் மறந்தவனாகிவிடு! அப்போதுதான் நீ ஹக்கின் ஏகத்துவம் என்னும் வஹ்தத்தை அடையலாம்.

இதயம் என்னும் உன் கஃபாவை முதலில் பரிசுத்தப் படுத்து. அதை உன் மஹ்பூபின் உறைவிடமாக்கு. அதை உன்னுடைய ஹக்கு மட்டும் தங்குவதற்காக விட்டுவை. அதிலிருந்து 'அன' என்னும் நீ வெளிப்பட்டு வந்து விட்டால் (உஜூதே ஹக்) ஆகிய உரியவன். அதனுள் வந்து அமர்ந்து கொள்வான். அப்படி வந்து உனக்கு உன்னுடைய உஜூது இல்லாமலேயே அவன் தன்னுடைய தஜல்லிகளை வெளிப்

படுத்துவான். உள்ளமை என்னும் 'த அய்யுன்' ஒழிந்து விட்டால் 'லா த அய்யுன்' என்னும் குறிப்பில்லாமை ஏற்படும். அப்பொழுது திரை விலகிப்போய் 'ஹக்' லாஹிர் ஆகிவிடுவான்.

தான் என்னும் திரை விலகினுல்தான் ஸாலிக்கானவன், ஹக்கின் ஜமாலியத்தை உண்மைக் கண் கொண்டு காண முடியும். இத்தகைய மகாமே முஹம்மதியில் வஹ்தத்து இடம் பெற்று நீ அவனாக மாறும். 'அப்போதுதான் 'வபீ யஸ்மஉ வபீயப்ஸீரு' என்ற மர்தபா உண்டாகும்.

ஆரிபின் பேச்சு அந்தரங்கமானது

அருமையானவனே, ஆத்ம ஞானியாகிய ஆரிபின் மொழி கள் 'ஹக்குல்யகீ'னும் ஆகும். அது அந்தரங்கமானது. வெளியில் பார்த்துக் கற்றுக்கொள்ளும் 'தக்லீத்' அன்று. இஷ்டம் போல் பேசும் 'லன்னி' (சந்தேகப் பேச்சு) மன்று. இந்தப் பாக்கியம், அறிவினுலும் ஆராய்ச்சியாலும் கிடைத்து விடுவதன்று.

அல்லா(ஹ்)வே சகலவற்றுக்கும் ஆதி. எனவே, மாந்தர், அல்லா(ஹ்)வை நம்பித் தங்களுடைய இச்சைகளி னின்றும் விடுபடவேண்டும். அல்லா(ஹ்)வின் எதிரில் எல்லோரும் வயதுவராத பிள்ளைகளே. யாரும் காமில் இல்லை.

உண்மையான கல்வி என்பது குர்பே இலாஹியை அளிக்கும் ஒரு வஸீலாவாக இருக்கவேண்டும். இல்மினுல் பட்டமும் பெருமையும் அடைய வஸீலாவாகக் கொள்ளப் படுமாயின், அது வெளிப்படையான கல்வியேயாகும். அப்படியானுல், உலகில் உள்ள வித்தைகளைப் போல் இதுவும் ஒரு வித்தையாகிவிடும்.

''தன்னை மறக்கும் நிலை எதனுல் உண்டாகுமோ, அதுவே இல்மு ஆகும். தான் என்னும் உணர்ச்சியூட்டும் கல்வியே

நூற்றுக்கணக்கான திமைகள் உண்டு. தன்னுடைய நாயனின் திரு முகத்தைக் காண்பிக்காத கல்வியால் யாது பயன்? அதைவிட மூடத்தனமே நூறு பங்கு மேலாகும்.'' (உர்துப் பாடல் ஒன்றின் நல்லுரை.)

மூன்று விதமான மரணங்கள்

மனித சமூகத்துக்கு நேரிடும் மரணம் மூன்று வகைகளாக விவரிக்கப்பட்டுள்ளது.

முதலாவது வகை மரணம்: சுயதன்மையின்படி அல்லா(ஹ்)வின் தஜல்லியைக் கொண்டு ஒவ்வொரு மூச்சிலும், எப்போதும் நேரிட்டுக் கொண்டிருக்கும் ஒரு நிலை மையாகும். இதனுல், இதற்கு ஆளாகுபவர் ஒவ்வொரு நாளும் ஒரு மகிமையில் இருப்பார்.

இரண்டாவது வகை மரணம்: சுயேச்சையானதாகும். நப்ஸின் இச்சைகளைக் கொன்று, ரஹ்மானுடைய தன்மையில் ஆழ்ந்து மூழ்கிப்போவது. எல்லா உலகத்துக்கும் இது பொதுவானதன்று; சில குறிப்பிட்ட (ஞானம் தெளிந்த) இன்ஸான்களுக்கு மட்டுமே சொந்தமானது. இதனுல் நிரந்தரமான ஜீவியமும் தன்னை மறக்கும் நிலையும் உண்டாகும்.

مُوْتُوْا قَبْلَ اَنْ تَمُوْتُوْا

''மரணிப்பதற்கு முன் நீங்கள் மரணித்துப் பாருங்கள்''

என்ற போதனை இதைச் சமிக்ஞை செய்கின்றது.

மூன்றாவது வகை மரணம்: சுயேச்சை யின்றி உண் டாகும் மரணம். இது நிகழும்போதுதான் உடலும் ரூஹும் பிரிந்து விடுகின்றன. உடலை விட்டும் உயிர் நீங்கிப் போகும்,

''ஒவ்வோர் உயிரும் மரணத்தின் சுவையை அனுபவித்தே நீரவேண்டும்''

என்ற குர்ஆன் ஆயத்து இதை அழகாக எடுத்துரைக் கிறது.

பொதுவாக ஜீவியமும் மரணமும் ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையான விஷயங்களாகும். எனவே, விவேகமுடைய மனிதன், மூன்று விதமான நிலைமைகளில் தங்கி, மூன்று விதமான வாழ்க்கையின்பங்களை அடைகிறான்.

மூன்று விதமான ஜீவியம்

மௌத்து என்னும் மரணம் மூன்று வகையாக இருப்பது போல், ஹயாத் என்னும் ஜீவித வாழ்வும், மூன்று விதமான வையாக விளக்கப்படுகிறது.

முதல் வகை ஜீவியம்: அல்லாஹுத்தஆலாவின் தஜல்லி என்னும் நப்ஸினுல் துர்பத்துல் ஐன் (இமைப் பொழுதில் (என்னும் முறையில் நிகழ்வதாகும். இந்தப் புனித ஜீவியமானது மனிதருக்கு தாத்துடைய தொடர்பினுல் ஞான பாக்கியத்தினுல்–எப்போதும் நேரிட்டுக் கொண் டிருக்கும் ஆனந்த வாழ்வாகும். இது சாதாரண மரணத் துக்கு நேர் மாறுனதாகும். இந்த ஜீவியம் வாழ்க்கையின் போது உஜூதிலேயே சேர்ந்ததாகும்.

இரண்டாவது வகை ஜீவியம்: இது கல்பு சம்பந்தப் பட்டது; சாஸ்வதமானது; நப்ஸின் தன்மைகளை விட்டுப் பரிசுத்தமாக நீங்கிக் கல்பின் ஸிபத்துக்களைக் கொண்டு பயன் அடைவது, மேலும், இந்த ஜீவியம் சுயேச்சையான மரணத் துக்கு எதிரிடையானதாகும் — 'அப்லாத்தூன்' என்ற பேரறிஞர் சொல்வதாவது: ''இந்த மரணமும் ஜீவியமும் மனித இனத்தாருடன் இயற்கையோடு அமைந்தவையாகும். ஞானத்தின் ஒரு வழிமுறை என்றும் கொள்ளலாம். மனி தனின் ஞானத் தெளிவும் இதனுடு சம்பந்தப்பட்டிருக்கிறது.

எனவே, இதன் மூலம் ஆதரவு தேடுவது மனித வாழ்க்கையில் அத்தியாவசியமான ஓர் அம்சமேயாகும்.

மூன்றுவது வகை ஜீவியம்: இந்த ஜீவியம் நிரந்தர மானதாகும். ஆலமே பர்ஸகில் (ஆன்ம உலகில்) இது நிகழ் வதாகிறது. ஒவ்வொருவருக்கும் அவரவர் நிலைமைக்குத் தக்கவாறு இந்த ஜீவியம் இயற்கையாக நேரிடும் மரணத்தின் பிற்பட்டதேயாகும். அதாவது, உயிரும் உடலும் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்த பின் பர்ஸகில் நிகழும் ஒருவகை ஜீவிய நிலை இது.

பழக்க வழக்கமும் இயற்கையாகிவிடும்

அருமை நண்பா, நீ முதலில் உன்னுடைய அந்தரங் கத்தை (ஹகிகத்தை) அறிந்துகொள்வது உன் கடமையாகும். பிறகு அதைப்பற்றித் தொடர்ந்து சம்பந்தம் வைத்துக் கொண்டிரு. ஒரு முறை நீ செய்யத் துணிந்த காரியத்தை மீண்டும் மீண்டும் பன்முறை செய்து கொண்டிருந்தால் அதன் மீது உனக்கு ஆற்றல் உண்டாகும். அதன் பின் அந்தக் காரி யத்தைத் தொடர்ந்து செய்வது உனக்குச் சுலபமாகிவிடும். எத்தனை தடவைகள் அதை நீ திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருப்பாயோ அவ்வளவும் உனக்குப் பயனுடைய தாகிவிடும்.

நல்ல காரியமாயினும் சரி, கெட்ட காரியமாயினும் சரி; உன்னுடைய நப்ஸில் (தன்மையில்) அது குடி கொண்டு விட்டால், அதுவே உனக்கு இயற்கையாகிவிடும். இதே தோரணையில் அதைப் பழக்கமாக்கிக் கொண்டால் அதுவே உன் பலாபலனுகும். இப்பிரபஞ்சத்தில், நீ வழக்கப்படுத்திக் கொண்டவைதாம் உன் பிந்திய வாழ்வில் அதாவது மஹ் ஷரிலும் உன்னுடைய நற்கிரியையாகவும் நற்குணமாகவும் பயன்படும். அந்த மறுமையில் இவை ஒவ்வொரு கோலத்தில் உனக்குக் காட்சியளிக்கும்.

எனவே, உலகத்தில் மனிதனுடைய ஆற்றல் ஆட்கொள்ளும் குணப்பண்பாடே மறுமையிலும் (ஆலமெ-பர்ஸகிலும்) அதற்குத் தக்கதோலத்தில் பாவமாகவோ, புண்ணியமாகவோ பயன்படும். உதாரணமாக அன்ஸர் என்னும் மூலப்பொருள்களின் சேர்க்கையால் முவ்வகைப் பொருட்கள் இயற்கையாகவே உற்பத்தியாகின்றன. அவை, கற்கரடுகள், புற்பூண்டுகள், ஜீவஜந்துக்கள். இதேபோன்று மனிதனுடைய ஆற்றல் என்னும் கிரியா சக்தி நல்லதாகவோ கெட்டதாகவோ வெளிப்பட்டிருந்தால், ஆலமே மிஸால் என்னும் பர்ஸகாகிய மறுமையில் அது ஒளியாகவோ, நெருப்பாகவோ கோலங்கொண்டு பயன்தரும்.

''கோதுமை விதைத்தால் கோதுமை விளையும்; சோளம் விதைத்தால் சோளம் விளையும்; ஆகவே, உன் செயலின் பலாபலன் பற்றி விழிப்புடனிரு!'' (என்பது பாரஸீகப்பாடல் ஒன்றின் கருத்தாகும்.) உலகில் நாம் புரியும் காரியங்களே நமக்குச் சொர்க்கமாகவோ, நரகமாகவோ அமையும்.

உன்னையே நீ சுத்தப்படுத்திக்கொள்

ஆசாபாசம் என்ற இருள் உன் மனத்திலிருந்து நீங்கி விட்டால், உன்னுடைய சகல அங்கங்களும் தூய்மையடைந்து விடும்; உன் இதயத்தில், அறிவும் ஞானமும் உண்டாகி விடும்; ஹக்கினுல் நீ சிறப்படைந்து விடுவாய். அப்போது ஞான அறிவு கொண்டு பார்ப்பவனுகவும் கேட்பவனுகவும் நீ ஆகிவிடுவாய். உன் உடலிலுள்ள உறுப்புகளில் எதனிடமும் நீ வித்தியாசத்தைக் காணமாட்டாய்.

இது குறித்து ''ஞானவானுடைய ஒவ்வோர் உரோமமும் கண்ணுக மாறிவிடுகிறது'' என்று இனிய மொழியாளர் மௌலானு ரூமி அவர்கள் கூறியது உண்மையேயாகும்.

'த அய்யுன்' என்னும் வேற்றுமை உணர்ச்சி அற்றுப் போய்விட்டால், எல்லாம் சரி சமத்துவமாய்ப் பரிணமித்து விடும்.

'ஒருவனுடைய இஷ்க் மிகைத்து ஆட்சி செய்யத் தொடங்கி விட்டால், ஒரே ஒரு மூச்சில் நூறு உலகங்களை அடக்கியாண்டுவிடும். (பாரசீகப் பாடலொன்றின் கருத்து)

நண்பா, நீ உண்மையான நல்ல பல பேச்சுக்களைக்கேட்டு இவற்றிலேயே ஆழ்ந்துவிடு! வேறு விதமான பேச்சுக்களைக் கேட்டு மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே! உனக்கு உண்மையான விஷயம் (ஹகீக்கத்) இன்னதென்று தெரிந்த பின்னர், பகுத்தறிவைக் கொண்டு அதைத் துழாவி ஆராயாதே! நீ அதைக் கொண்டு புரிய வேண்டிய நற்செயலைப் புரிந்துக் கொண்டிரு. பிறர் குறை சொல்வார்களோ என்ற மாய்கையில் சிக்கி, உனக்கு நீயே நீங்கு தேடிக் கொள்ளாதே! உன்னையே நீ எண்ணிப்பார்.

''உன் உள்ளத்தை அன்னிய சிந்தைகளிலிருந்து காலி செய்து கொண்டாயானுல், உன் தன்மையிலேயே நீ, அல்லா(ஹ்)வுடைய 'தாத்' என்னும் பிரகாசத்தைக் காண்பாய். அல்லா(ஹ்)வுடைய 'நக்ஷா' தோற்றம் உனக்குள்ளேயே அமைந்திருக்கிறது. அதை உன்னிலேயே தேடிப் பிடித்துக் கொள்!'' என்பது பாரஸீகப் பாடல் ஒன்றின் அருமையான கருத்தாகும்.

தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிவான்

அருமை நண்பா, நீ ஹக்குத்தஆலாவை வெளிப்படையாகப் பார்க்கவேண்டும் என்று விரும்பினுல்,

مَنْ عَرَفَ نَفْسَهُ فَقَدْ عَرَفَ رَبَّهُ

''தன்னுடைய நப்ஸை அறிந்து கொண்டவன்,
தன் நாயனை அறிந்து கொண்டான்''

என்ற திருமொழியின் பிரகாரம் அமல் செய்து பார்க்கவேண்டும். அதாவது, தன்னைத் தான் அறியவேண்டும்.

அப்போதுதான் ஜமாலே இலாஹியானது முஷாஹதா வில் உனக்குப் புலனுகும். இம்மாபெரும் பாக்கியம் வெறும் புத்தியினலும் ஆதாரங்களாலும் கிடைத்துவிட மாட்டாது.

காந்தம் இரும்புத் துண்டைத் தன் பக்கல் இழுத்துக் கொள்வதுபோல் அல்லா(ஹ்)வின் நல்லடியார்களைத் தன் பக்கம் ஈர்த்துக்கொள்வதே குர்பே இலாஹியின் இயல்பாகும். இந்தக் குர்பு என்னும் நெருங்குதலானது இடையில் தொடர்பு ஏதுமின்றி உண்டாவதாகும். இது இரண்டுவகை யில் உண்டாகும். ஒன்று, இபாதத்தினுல் உண்டாகும். மற்றொன்று, இன்ஸானே காமிலுடைய நற் சகவாசத்தால் உண்டாகும். இந்தப் பாக்கியம் அல்லா(ஹ்)வின் உதவி கொண்டு இபாதத்தின் காரணத்தால் உண்டாகியிருந்தால் அதை 'இபாதத்தின் பயன்' என்று சொல்கிறார்கள். அப் படியின்றி இன்ஸானே காமிலின் நற்சகவாசத்தால் கிடைத் தால் 'ஷெய்குடைய பலன்' என்று சொல்வார்கள்.

இந்தப் பலன் செயல் புரிபவனின் காரணத்தால் அதற் குத் தகுதியுடையவனிடம் போய்ச் சேருகிறது. அல்லாஹுத் தஆலா, மனிதனுடைய இயற்கையில் இந்தத் தன்மையை உண்டாக்கியிருக்கிறன். இதைப் பற்றித் திருக்குர்ஆன் ஷரீ பும் கீழ்க்காணுமாறு எடுத்துரைக்கிறது.

فِطْرَةَ اللّٰهِ الَّتِيْ فَطَرَ النَّاسَ عَلَيْهَا

''அல்லாஹுத்தஆலா மனிதனை எந்த இயற்கை யில் படைத்திருக்கிறனே அதுவே அல்லா(ஹ்)வின் இயற்கையாகும்''.

உணர்வுள்ள ஞானி சுரங்கம் போன்றவன்

மனிதருடைய நிறமையானது ஒன்றுடன் ஒன்று நேர்மை யானதாகவும் எதிரானதாகவும் அமைந்திருக்கிறது. நபி

கள் நாயகம் ரஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல் லம்) திருவுளமாயிருப்பதாவது :

اَلنَّاسُ مَعَادِنُ كَمَعَادِنِ الذَّهَبِ وَالْفِضَّةِ

''மனிதர்கள் இயற்கையில் வெள்ளி-தங்கம் தோண்டி எடுக்கப்படும் சுரங்கங்களுக்கு ஒப்பான (ஸ்தூல) சுரங்கமாக இருக்கின்றனர்''

என்பதேயாகும்.

பூமியை ஓரிடத்தில் ஆழமாகத் தோண்டிப் பார்த்தால் தங்கம் கிடைக்கும். இன்னேர் இடத்தில் தோண்டிப் பார்த் தால் வெள்ளி கிடைக்கும். இன்னேரிடத்தில் இரும்பு கிடைக்கும். இதே மாதிரிதான் மனிதரின் தன்மையும் பல தரப்பட்டனவாக உள்ளன.

இரண்டு வகையான ஸாலிக்குகள்

ஞான வழி நடக்கும் ஸாலிக், குர்பே இலாஹியை நாடிப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறன். அதற்கு உதவியாக ஷெய்காளவர், அவ்வே அல்லாஹுத்தஆலாவின் பக்கல் இழுத்துச் செல்கிறார். அத்துடன் அவனுக்கு குர்பே இலாஹி (இறையுறவு) கிடைக்கும்படி அருள்புரிகிறார்.

இப்பாக்கியம் பெற்றவரை 'ஸாலிக்கே மஜ்ஸூப்' என்று சொல்வார்கள். இத்துடன் மூரீதுக்கு 'ரியாலத்'தின் மூல மாகவும், ஷெய்கின் கவனிப்பின் மூலமாகவும் 'தஸ்கியே நப்ஸ்' (மனத்தூய்மை) உண்டாகிறது. அவனுடைய ஸ்தூலமும் செம்மையடைகிறது. இப்படிப்பட்ட இரண்டாம் வகை சாலிக்கை 'மஜ்ஸூப் ஸாலிக்' என்று சொல்வார்கள்.

ஸ்தூல சுத்தம் ஷெய்கின் ஏவலில் அடங்கியிருக்கிறது

ஒரு விஷயத்தை ஞானி நன்கு அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஷெய்கவர்கள், ரியாலத் (கடுந்தவம்)

புரியும்படி முரீதுகளுக்குக் கட்டளை யிட்டால், அதன் உட் கருத்து அந்த சிஷ்யர்களுக்கு ஸ்தூலத் தூய்மைகளையும், உள்ளப் பரிசுத்தமும் ஒருங்கே உண்டாக வேண்டும் என்பதே யாகும். வெறும் 'ரியாலத்' புரிவதால் மட்டும் குர்பே இலாஹி (அல்லா(ஹ்)வை நெருங்குதல்) கிடைத்து விட மாட்டாது. ஞான ஆசானுகிய ஷெய்கின் நற்சகவாஸத்தில் இருந்து பயிற்சி பெற்றுலன்றி ஸ்தூலத்தூய்மையும் மனப் பரிசுத்தமும் உண்டாகிவிட மாட்டாது.

''ஜாமியானவர் சுயமே ஞானமது உண்ணப் போய்விட வில்லை; ஷெய்கு அளித்த ஆத்மீக உதவியினுலேயே அந்தப் பானம் அவருக்குக் கிடைத்தது'' (ஒரு பாரஸீகப் பாடல்)

அற்பர்களுக்கு ஞானப் பாக்கியம் எளிதில் கிடைப்பதில்லை

ஞானப் பேராசிரியர்களான காமில்களுடைய அனுக் கிரகம் இல்லாதபடி, 'நாகிஸ்' என்னும் பக்குவமடையாதவர் களுக்கு ஞானப் பாக்கியம் (கமாலியத்) கிடைத்துவிடு வதில்லை. மேலும், இபாதத்து (வணக்கங்)களினுலும் யாருக் கும் விலாயத் கிடைத்து விடுவதில்லை. ஆனல், இபாதத்தி லிருக்கும் இவர்களை, அல்லாஹ் நாடினுல் தன் பக்கம் இழுத்துச் செல்லவும் கூடும்.

மேலும், சாதாரண மக்களுக்கு அல்லாஹ்த்தஆலா வுடன் நேரடியான தொடர்பு கிடையாது. அவர்கள் அல்லாஹ்த்தஆலாவுடைய பைஜ் என்னும் ஞானப் பாக்கி யத்தை ஷெய்கின் அனுகிரகமின்றிச் சுயமே அடைவதென் பதும் முடியாத காரியம், இதற்கு ஒரு 'வாஸிதா'வின் (மூல புருஷரின்) சகாயம் கட்டாயம் தேவை. இந்த மூல புருஷர் அத்தரங்கத்தில் அல்லா(ஹ்)வுடனும் பஹிரங்கத்தில் அடியார் களுடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருக்கும் ஆசானுக இருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட 'வாஸிதா' என்னும் தொடர்புடையவர் களாய் நமது நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களே விளங்கினர்கள். பிறகு அவர்களுடைய 'நாயிப்' என்னும் பிரதிநிதிகளாகிய ஷெய்குமார்கள் விளங்குகிறூர் கள். இவர்களுடைய வெளிப்படையான தொடர்பு ஏற்படா தவரை எந்த ஞானவானும் 'பைஜ்' என்னும் பாக்கியத்தைப் பெறமாட்டான்.

நபிமார்களும் ரஸூல்களும் தோன்றியதன் உட்கருத்து

தக்க ஆசானைக்கொண்டு கமாலியத் என்னும் பரிபக்கு வப் பதவியை அடைந்து விட்டவன், அதன்பின் இடைத் தொடர்பு இல்லாமலேயே, அல்லாஹ்த்தஆலாவுடன் தொடர்பு கொண்டு ஞானப் பாக்கியத்தை அடைய முடி யும். இபாதத்துக்களைக் கொண்டு முன்னேற்றச் சாதனங் களைப் பெறமுடியும். இத்தகைய அருள் பெற்றவர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ரௌலாவுக்கும், ஔலியாக் களுடைய 'மஜார்' (கப்ரு)களுக்கும் சென்று பிரார்த்தித்தும் அந்தப் பாக்கியத்தைப் பெறமுடியும்.

நபிமார்களும், வலிமார்களும் இவ்வுலகத்தில் தோன்றி மக்களுடன் பழகியதன் நோக்கமே, அவர்களுடைய சகவாச பாக்கியத்தால் மக்கள் ஆத்மீக உயர்வை அடைய வேண் டும் என்பதுதான். இஃதன்றி வெறும் பிக்ஹு, மஸ்அலாக் களைக் கொண்டும், அகீதாக்களைக் கொண்டும் இந்தப் பாக்கி யத்தை அடைய முடியாது. அப்படி முடியுமானல், மலக்கு களைக் கொண்டே அல்லாஹ்த்தஆலா, அதை நிறைவேற்றி யிருப்பான். இக்கூற்றுக்கு ஆதாரமாக ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் சம்பந்தப்பட்ட இந்த ஹதீதை நோட்டமிடுங்கள்.

هٰذَا جِبْرِيْلُ جَاءَكُمْ لِيُعَلِّمَكُمْ دِيْنَكُمْ

''இதோ, இப்போது வந்துபோனவர், ஹஜ்ரத் ஜிப்ரயீல் (மலக்கு) ஆவார்: உங்களுக்கு (இஸ்லாம்) மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக (இந்த ரூபத்தில்) வந்து போகிறார்''.

அதாவது, அல்லா(ஹ்)வின் தீனை மனிதர்களுக்குப் போதிக்க மலக்குகளாலேயும் முடியும் என்ற உண்மையை இது நிதரிசனமாக்குகிறது.

நற்சகவாசமும் இருவகைக் கஷ்புகளும்

நல்லோர்களின் நல்ல சகவாஸத்திலேயே, ஞானி ஒர் அந்தஸ்திலிருந்து இன்னோர் அந்தஸ்துக்கு உயர்ந்து செல்ல முடியும். இத்தகைய முன்னேற்றத்தின் பாதை ஷெய்கு வரையில் போய்ச் சேருகிறது. இன்னும் ஜஸ்பே முத்தலக் கைக்கொண்டு. அல்லாஹுத்தஆலா எதுவரை நாடுகிறானே அதுவரை கொண்டு செல்வான்.

மகான்களிடம் சில சமயங்களில் வழக்கத்துக்கு மாறான (நூதன) காரியங்களும் உண்டாகும். அவை பல வகைப்படும். அவ்வகைகளில் 'கஷ்பு' என்பது ஒன்றாகும். இங்கு இரண்டு வகையான கஷ்புகளைப் பற்றிக் கூறுவோம்.

'கஷ்பே கௌவி' என்பது ஒன்று. உலகத்தில் எத்தனையோ 'மல்ஜூதாத்' (பிரபஞ்சம்) இருக்கின்றன. இவை ஒருவருக்குத் தெரியாத தூரத்தில் அல்லது மறைவில் இருக்கலாம். ஞானத் தெளிவும் கமாலியத்தும் உள்ளவருக்கு இந்த மறை பொருள்களும் தெரியவரும். அப்படித் தெரிய வந்தால் அதை (கஷ்பே கௌவி) பிரபஞ்ச திருஷ்டி என்று சொல்வார்கள். இது மாஜி, முஸ் தக்பில், ஹால் என்னும் முக்காலத்தைப் பற்றியும் இருக்கலாம். முக்கால ஞானமும் கஷ்பினால் உண்டாக முடியும். உதாரணம் :

ஒருநாள் ஹஜ்ரத் உமர் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், குத்பா (பிரசங்கம்) ஓதிக்கொண்டிருந்தார்கள்.

குத்பாவிலேயே ''ஏ ஸாரியா, மலைக்கு அப்பால் கவனித்துப் பார்; (எதிரிகளைப் பற்றி) ஜாக்கிரதை'' என்று குரல் கொடுத்து எச்சரிக்கை செய்தார்கள். இங்ஙனம் எதை உணர்ந்து எதற்கு எச்சரிக்கை செய்தார்களென்றால், தொழுகை நேரம் பார்த்துக் காபிர்கள், மலைக்குப் பின்னால் படை கூடி முஸ்லிம்களைத் திடீரென்று தாக்குவதற்குப் பதுங்கியிருந்தார்கள். ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள், அம் மலைக்கு நூற்றுக்கணக்கான மைல்கள் அப்பால் இருந்துங்கூட அவர்களுக்கு மறைவான விஷயம் தெரிய வந்தது! அதற்குப் பொறுப்பாளரான ஸாரியாவுக்குக் குரல் கொடுத்து எச்சரித்தார்கள்.'' இது ஒருவகைக் கஷ்பு (ஞான திருஷ்டி).

'கஷ்பே இலாஹி' என்பது இரண்டாவது வகையாகும்: தரீகத்துடைய நடவடிக்கையினால் தன் நிலையும், மற்ற ஸாலிகீன்களுடைய ஆத்மீக நிலையும் அல்லா(ஹ்)வின் நெருக்கத்தின் அந்தஸ்துகளும் வெளியாகும். அல்லாஹுத்தஆலாவின் தாத்-ஸிபாத்துக்கள் பற்றிய பரம ரகசியமான இல்முகளும் தெரியவருவதுண்டு.

ஆனால், முகக் கண்கள் கொண்டு அல்லாமல். ஆலமே மிஸால் என்னும் சூட்சும உலகில், கஷ்புடைய பார்வை என்னும் ஞானக் கண்களுக்குத்தான் அவை 'முஷாஹிதா' வின் மூலம் தெரியவரும்.

'இல்ஹாம்' என்பதும் இந்த வகையைச் சேர்ந்ததேயாகும். அதாவது அல்லாஹுத்தஆலா, ஞானவானுடைய ஸூபி ஒருவருடைய மனத்தில், அரிய இல்ம் எதையும் போட்டு விடலாம்; மறைவான பேச்சும் காதில் வந்து விழலாம். 'ஹாத்திப்' என்று சொல்லப்படும் அசரீரி வாக்கும் இந்த வகையைச் சேர்ந்ததுதான்.

இல்ஹாமும் வஸ்வஸாவும் என்ன ?

'இல்ஹாம்' என்றும் 'வஸ்வஸா' என்றும் இரண்டுவகை ஊசாட்டங்கள் உண்டு. இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு.

இல்ஹாமினல் மெய்ஞ்ஞானியாகிய ஸூபியின் மனத்தில் அமைதியும், சாந்தமும், ஆனந்தமும் உண்டாகும். இது ஆண்டவனின் அருளாகும். வஸ்வஸா என்பது ஷைத்தானியத்தான ஊசாட்டமாகும், இதனல் அமைதிக்குப் பதில் மனக்குழப்பமே ஏற்படும். இதைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது;

اِسْتَفْتِ نَفْسَكَ وَاِنْ اَفْتَاكَ الْمُفْتُوْنَ

''ஒரு விஷயத்தைப் பற்றி உனக்குத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தாலும், உன் மனத்திடமும் நீர்ப்புக் கேட்டுக்கொள்.''

(இது அல்லாஹுத்தஆலா அளிக்கும் ஆலோசனையுமாகும்: வஸ்வஸாவிலிருந்து விடுபட இதுவே வழியாகும்.)

ஹதீஸும், கியாஸும்

கஷ்டான விஷயமோ இல்ஹாமான சமாசாரமோ எதுவும் ஹதீஸுக்கோ கியாஸுக்கே முரண்பட்டதாய் இருந்தால் அதை ஒதுக்கி விடவேண்டும். மேலும், அதில் (பகுத்துணர்வு ஆராய்ச்சி என்னும்) கியாலின் ஷர்த்துக்கள் இடம் பெற்றிருந்தால் (இஸ்லாமிய ஷரீஅத்துப்படி ஹதீஸையும் கியாஸையுமே எடுத்துக் கொள்ள வேண்டும்; கஷ்பையும் இல்ஹாமையும் ஒதுக்கிவிட வேண்டும். இந்தக் கஷ்டு தப்பானதாகும்.

இத்தகைய கஷ்டான விஷயங்களை, ஒலியாக்கள் பொது மக்களுக்கு எடுத்துக் கூறலாம். இஃது அவர்களுக்கு ஜாயிஸ் ஆகும். அல்லாஹுத்தஆலா இந்தப் பாக்கியத்தை அவர்களுக்குத் தன் (இன்ஆம்) வெகு மதிகளாக அருள் புரிந்திருக்கிறான். உதாரணமாக, கலாயிதே கௌஸுஸ்ஸகலைன், மக்தூபாத்தே இமாமே ரப்பானி, ஷெய்குல் அக்பர் ஆகிய மகான்களுடைய ஞான நூல்களில் இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

அல்லாஹுத்தஆலா திருக்குர்ஆனில் திருவுளமாவதாவது:

وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ

''எனவே, நீர் உமது இறைவன் உமக்கு அருள் புரிந்த நிஃமத்துகள் (கஷ்பு-இல்ஹாம்) விஷயங்களை (மக்களுக்கு) எடுத்துரைப்பீராக!'' என்பதே.

அஹ்லுல்லாக்களை எதிர்ப்பது அல்லா(ஹ்)வை எதிர்ப்பதாகும்

காமிலான ஒலியாக்கள். காமிலான முறையில் ஞானே உபதேசம் புரிவதற்கும் உதவி செய்வதற்கும் சக்தியுடையவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தங்கள் 'பைஜ்' என்னும் அருள் பாக்கியங்களால் மக்களுக்கு அருள் புரிந்து வருகிறார்கள். பொது மக்களின் நன்மைக்காக அவர்கள் மறைவான தகவல்களும் அறிவிப்பார்கள்.

வலிமார்கள், மக்கள் கூறும் குறைகளைப் பற்றியோ, குற்றங்கள் பற்றியோ சற்றும் கவனம் செலுத்தமாட்டார்கள். மக்கள் தங்களை நிராகரிக்கிறார்களா என்பது பற்றிக்கூட அவர்களுக்குக் கவலையில்லை. இதைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ''என்னுடைய உம்மத்தினரில் எப்போதும் ஒரு நல்ல கூட்டத்தினர் இருப்பார்கள். இவர்கள், உலகில் அல்லாஹுத்தஆலாவின் காரியங்களை நிறைவேற்றி வைப்பார்கள்'' என்று அருளியுள்ளார்கள்.

மக்களுக்கு நேர்வழி காட்டுதல், சன்மார்க்க விஷயங்களை மேன்மைக்குக் கொண்டு வருதல் ஆகிய நற்காரியங்கள் ஒளலியாக்களுடைய கடமையாகும். ஒளலியாக்களை நிராகரிப்பவர்கள் அவர்களை ஒன்றும் கெடுக்க முடியாது: ஒளலியாக்களை இல்லாமலொழிக்கும் கெட்ட எண்ணங்களிலும் அவர்கள் வெற்றிபெற மாட்டார்கள்.

மக்களுக்கு சன்மார்க்கம் காட்டுவது நபிமார்களுடைய ஸுன்னத்து என்னும் கடமையாகும். நபிமார்கள் இல்லாத காலங்களில் ஒளலியாக்கள், இந்தக் கடமைகளை நிறைவேற்றி வைக்கிறார்கள். அப்பர்களின் எதிர்ப்புக்கோ, குறை கூறலுக்கோ அவர்கள் பயந்து கொஞ்சங்கூடத் தங்கள் கடமைகளை நழுவவிட மாட்டார்கள்.

ஒளலியாக்களுக்கு எத்தகைய பயமும் கிடையாது. கவலைப்படவும் மாட்டார்கள். ஒளலியாக்களுடைய தூய்மையான அந்தரங்கத்துக்கு அபூர்வமான சக்தி இருக்கிறது. இதைக்கொண்டு இவர்கள், தங்கள் காரியங்களை நடத்திக் கொண்டு போகிறார்கள்.

ஷெய்கின் அந்தரங்க சக்தி முரீதுக்குப் பயன் தருகிறது

மேற் கூறப்பட்ட சக்தியினாலேயே ஷெய்குமார்கள் முரீதுகளுக்கு நன்மையளித்து வருகிறார்கள்.

இத்தொடர்பில் ஷெய்கும் முரீதும் ஓர் உயிர் ஈருடல்கள் போல் ஆகிவிடுகிறார்கள். பனுபிஷ்ஷெய்கு என்பதற்கு இதுதான் உட்பொருள். உதாரணமாக ஷெய்கு தலையில் வலி உண்டானால் உத்தம முரீதுக்கும் தலையில் வலி உண்டாகும் முரீதுக்கு ஜுரம் வந்து விட்டால் ஷெய்குக்கும் ஜுரம் ஏறி விடும்.

இதே மாதிரி ஷெய்குக்கு ஏற்பட்டுள்ள உள்ளத் தூய்மை அந்த ஒளியினால் முரீதுடைய உள்ளமும் தூய்மையடைந்து அந்த ஒளி இங்கும் பிரகாசிக்கத் தொடங்கிவிடும்.

அன்னிய சகவாசம் அறவே கூடாது

மெய்ஞ்ஞானியரின் திருச்சபைகளைச் சேர்ந்தவர்கள் அன்னியருடைய சகவாஸத்தால் மட்டுமென்ன, அவர்களுடைய வாடைகூடத் தம்மீது படாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். இதற்கு சில உதாரணங்கள் தரலாம்.

ஹஜ்ரத் காஜா உபைத்துல்லாஹ் அஹ்ரார் (ரஹ்) அவர்கள் சொல்வதாவது: ''ஒரு நாள் நாங்கள் ஹஜ்ரத் நிஜாமுத்தீன் காமூஷ் (ரஹ்) அவர்களைக் காணச் சென்று கொண்டிருந்தோம். வழியில் எங்களுக்கு அறிமுகமான மனிதர் ஒருவர் எதிர்ப்பட்டார். அவர் அப்போது மது அருந்திப் போதை ஏறியவராய் இருந்தார். அவர் எங்களுடன் சில நிமிடங்கள் உரையாடிவிட்டுச் சென்றார். பின்னர் நாங்கள் ஹஜ்ரத் நிஜாமுத்தீன் காமூஷ் (ரஹ்) அவர்கள் சமூகத்தை அடைந்தோம். ஹஜ்ரத் அவர்கள் எங்களை நோக்கி, ''நீங்கள் மது அருந்திவிட்டு வந்தீர்களா?'' என்று வினவினார்கள். அதற்கு நாங்கள், 'இல்லை' என்று பதிலளித்தோம். இதைக் கேட்டு ஹஜ்ரத் அவர்கள், ''சரி வரும்போது உங்கள் நிலைமையாதாயிருந்தது?'' என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள், ''ஆம், நாங்கள் வரும்போது வழியில் குடித்துப் போதை ஏறியிருந்த ஒருவனைச் சந்தித்துப் பேசினோம்'' என்று உண்மையை எடுத்துரைத்தோம். இதற்கு ஹஜ்ரத் அவர்கள், ''சரிதான்; அவனுக்கு ஏறியிருந்த போதை சகவாசத்தால் உங்களுக்கும் உண்டாகி விட்டது போலும்!'' என்று சொன்னார்கள் (நப்ஹாத்.)

இன்னொரு சம்பவம்

ஒருநாள் ஹஜ்ரத் ஷெய்கு பாயஜீது (குத்திஸ் ஸிர்ருஹு) அவர்களுடைய மஜ்லிஸில் ஏதோ குறைபாடு (மனக்குழப்பம்) காணப்பட்டது. ஹஜ்ரத் அவர்கள் எங்களை நோக்கி, ''நம்முடைய இந்த மஜ்லிஸில் (திருச்சபையில்) யாரோ ஓர் அன்னியன் வந்து இருக்கிறான் போலிருக்கிறது. இன்றேல் இப்படிக் குழப்பமுண்டாகி யிருக்காது'' என்று எச்சரித்தார்

கள். நாங்கள் எங்களுக்குள் நபர்களை ஆராய்ந்து பார்த்தோம். அன்னியன் ஒருவனையும் காணவில்லை. இதை ஹஜ்ரத் அவர்களிடம் சொன்னோம். இதைக் கேட்ட ஹஜ்ரத் அவர்கள், ''கைத்தடி (அஸாக்)கள் வைக்கும் மூலையில் போய் பார்த்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டார்கள், நாங்கள் அ ஸ ா வைக்குமிடத்தில் பார்த்தோம். அங்கு அன்னியன் ஒருவனுடைய கைத்தடி (அஸா) வைக்கப்பட்டிருந்தது. அதை ஹஜ்ரத் அவர்கள் எடுத்து வெளியில் வீசி விட்டார்கள். அதன் பின்னர் அந்தச் சபையில் மனச் சாந்தியும் அமைதியும் குடிகொண்டன. (ரஷ்ஹாத்)

மூன்றுவது சம்பவம்

ஹஜ்ரத் காஜா அஹமத் யஸ்வி (ரஹ்) அவர்கள் சம்பந்தப்பட்ட திருச்சபையிலும் ஒரு முறை இவ்விதம் மனக் குழப்பம் ஏற்பட்டது. ''இந்தச் சபையில் அன்னியன் யாரோ வந்து அமர்ந்திருக்கிறான். அவன் நம் அமைதி என்னும் முத்தைக் களவாடி விட்டான்'' என்று சொல்லி எச்சரித்தார்கள். உடனே நாங்கள் நெடுகிலும் பரிசீலித்ததில் அன்னியன் ஒருவனுடைய செருப்புக் கிடக்கக் கண்டோம். அந்தச் செருப்பை எடுத்து நாங்கள் வெளியில் வீசிய பின்னர் எங்கள் சபையில் அமைதியும், சாந்தமும் நிலவின. ஹஜ்ரத் அவர்களும் திருப்தி அடைந்தார்கள்.

மேற்கூறிய சம்பவங்களிலிருந்து மெய்ஞ்ஞானியரின் சபையில் அன்னிய சகவாசம்கூடப் பாதகமான நிலைமையை விளைவிக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. பாதையில் குடிபோதையுள்ளவனுடன் பேசியதும், மூலையில் அன்னியன் கைத்தடி கிடந்ததும், சபையில் அன்னியரின் செருப்பு கிடந்ததும்கூடப் பாதகத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. விரும்பத்தகாத செயலுடையவரின் ஓர் அம்சம் கூடத் திருச்சபையில் அமைதியின்மையை உண்டாக்கிவிடும். தியவர்களைப்பற்றிய சிந்தனைமட்டுமன்று; சம்பந்தம்கூடக் குழப்பத்தையும் அமைதிக் கேட்டையும் உண்டாக்கும்.

தகாதவர்களின் சகவாசத்தால் ஞானியின் மனமும் கெடும்

அந்தோ, இக்காலை நம்மவர்களின் நிலையைச் சிந்தித்துப் பாருங்கள்! நண்பர்களே, நம்முடைய அக்கம் பக்கமெல்லாம் அமைதியைக் கெடுக்கும் அன்னியத் தன்மை குடி கொண்டு உள்ளதே! தகாத செயல்கள் நம் அந்தரங்கத் தூய்மையைத் தின்று கொண்டிருக்கின்றனவே! நமது ஞானப் பயிரை அந்த மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றனவே! அதைப்பற்றி நாம் கவனிக்காமல் இருக்கலாமா?

நாம் நமது இக்குறைபாடுகளை எண்ணிப் பார்த்துத் தலை குனிந்து வெட்கப்படவேண்டாமா? நாம் வஹ்தத்தின் நடை முறை ஒழுக்கத்துக்கு மாறுக எத்தனை தூரம் வழி தவறிப் போய்விட்டோம் என்பதைக் கண்ணோட்டமிடவேண்டாமா?

நாம் வஹ்தத்தின் நலனை இழந்து விட்டதற்குக் காரணம் என்ன? இதற்கு ஏதாவது பரிகாரம் செய்யவேண்டுமே!

ஒதுங்கியிருப்பதே பரிகாரம்

வஹ்தத்தின் நலனைப்பெற அன்னியர்களை விட்டும் நாம் ஒதுங்கியிருப்பதே சரியான பரிகாரமாகும், நாம் தனித்தும் இருக்கவேண்டும்.

நாம் வஹ்தத்தையும், முர்ஷித் உடைய-ஒளியாக்களுடைய-நினைவையும், சகவாசத்தையும், தியானத்தையுமே உள்ளத்தில் இருத்தவேண்டும். நம்முடைய உள்ளம் என்னும் செம்பைத் தங்கமாக்கி வைக்கும் 'அக்ஸீர்' என்னும் ரசவாதம் இதுவேயாகும்.

''ஷெய்கின் உறவும் தோழமையுமே உன் மனத்தைத் தங்க மயமாக்கி வைக்கும்'' என்பது உர்துப் பாடல் ஒன்றின் கருத்தாகும்,

ஹக்கைத் தேடும் ஞானவான் எப்போதும் முர்ஷிதின் நற்சகவாசத்திலேயே இருக்கவேண்டும். இந்த நல்லுறவே மனத்தைப் பரிசுத்தப்படுத்தி அந்தரங்கப் பாக்கியத்தை அருள்புரியும், பாக்கியம் கிடைக்காதபோது கட்டாயம் அன்னியர்களை விட்டும் ஒதுங்கியிருக்கவேண்டும். ஏகாந்தமே மனத்தின் மாசைப் போக்கும்.

தனித்திருப்பதில் இரண்டு வகை உண்டு

'உஜ்லத்' என்றால், ஞானவழியில் தனித்திருப்பது என்று பொருள். இந்த ஏகாந்தம் இரண்டு வகைப்பட்டதாகும், ஒன்று. முரீதுகள் அன்னியர்களை விட்டும் ஒதுங்கியிருப்பது; ஞான வழியில் ஈடுபடாதவர்களை விட்டும் இயன்றமட்டும் தூர விலகியிருப்பது.

இன்னொன்று உள்ளத்தை விட்டும் அன்னிய அம்சங்களை ஒதுக்கித் தள்ளித் தனித்திருப்பது. இது விவேகிகளுடைய ஏகாந்தமாகும். அதாவது பிரபஞ்சத்திலுள்ள சகலவற்றையும் உள்ளக் கமலத்திலிருந்து நீக்கிவிடவேண்டும். கல்பு என்ற மிஸ்ராபிலும், பாத்தின் என்ற கஃபாவிலும் அல்லாஹ் அல்லாத விக்கிரகங்களை (எண்ணங்களை)க்கொண்டு வந்து நுழைக்கக்கூடாது. 'மாஸிவா; என்னும் அன்னியத் தன்மைக்கு இடம் தரக்கூடாது. அல்லாஹ் மட்டும்தான் அதில் குடியிருக்கவேண்டும். தஜல்லிக்கு மட்டும் அங்கு இடம் கொடுக்கவேண்டும்.

அன்னியத் தன்மையை ஒழிப்பது எப்படி?

'நம்முடைய இதயமோ-'மாஸிவா' என்னும் அன்னிய அம்சம் நிறைந்ததாயுள்ளது. அந்த ஆபத்துக்களை ஒதுக்கி, மனத்தை நம் ஆதிக்கத்தில் கொண்டு வருவது எங்ஙனம்? கொஞ்சம் கொஞ்சமாக அந்த ஆபத்தை விலக்கிக் கொண்டு வா. இறுதியில் எல்லாவற்றையும் விட்டுப் பயமற்றவனாவாய்'' (என்பது பாரசிகப் பாடல் ஒன்றின் கருத்தாகும்.)

இப்படித்தான் கொஞ்சம் கொஞ்சமாக ஊசாட்டங்களைப் போக்கி, மனத்தைக் கழுவி சுத்தப்படுத்த வேண்டும். பிறகு அன்னிய எண்ணம் வராதபடி பாதுகாக்கவும் வேண்டும். அப்போதுதான் அமைதி குடிகொண்டு நல்ல வழக்கம் உண்டாகும்.

எனவே, அல்லா(ஹ்)வைத் தவிர எந்த எண்ணமும் சிந்தனையும் அருகில் வராதபடி, உள்ளத்தை ஒதுக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். எவ்வித அடையாளமும் இல்லாத தூய இடத்தில்தான் அஹதியத் இடம் பெற்று இலங்கும். அங்குத்தான் லிர்களின் நாயன் குடிபுகுந்திருப்பான். இந்நிலையடைந்த ஞானிதான் தன்னை விட்டு பனாவாகி ஹக்குடைய தாத்தில் ஹக்காக நிலைத்திருப்பார்.

நண்பனே, இந்நிலை எய்தினால் நீ சாஸ்வதமான **'அபதி ஹயாத்தை'** (வாழ்வை) பெற்றவனாகிவிடுவாய். அப்படிப்பட்ட நித்திய ஜீவியத்தை அடையாமல் இந்த உடலைவிட்டுப் பிரிந்து போனால் மாபெரும் நஷ்டவாளியாவாய்!

إِنَّ الْإِنسَانَ لَفِي خُسْرٍ

''மனிதன் மாபெரும் நஷ்டத்தில் இருக்கிறான்''

என்று அல்லாஹ்த்தஆலா எச்சரித்திருப்பதைக் கவனித்துப்பார். பிறகு பரிதாபப்பட்டு யாது பயன்!

''குருவிக் கூட்டம் வந்து, பயிரைத் தின்று பாழாக்கி போன பிறகு பரிதாபப்பட்டு அழுதால் என்ன பயன்?'' (ஹிந்திப் பழமொழி)

இருவகையான முரீதுகள் தன்மை

மேற்கூறிய வழிமுறைப் படியும், ஞான போதனைகளின் படியும் நடக்கும் ஞானவான்கள் இருவகையாவர். அதாவது

'முரீதே முஸ்தஇத்' என்று ஒரு வகையும், 'முரீதே கைர் முஸ்தஇத்' என்று வேறு வகையுமாவர். 'முரீதே முஸ்தஇத்' என்பவர் ஞானவழியில் உஷாரானவராகவும், கெட்டிக்காரராகவும் மனத்தாலும் உடலாலும் உயிராலும் தன்னுடைய ஷெய்கை விரும்பித் நியாகம் செய்யக்கூடியவராயும் இருப்பார். முர்ஷிதுடைய போதனைகளை ஒரு போதும் தட்டிக் கழிக்க மாட்டார். ''நீ நெருப்பில் விழுந்து விடு!'' என்று முர்ஷித் சொன்னால் முரீதானவர் 'ஏன்' என்றும் கேட்காமல் அந்தக் கட்டளையை முதலில் நிறைவேற்றத் துணிவார். பிரேதமானது குளிப்பாட்டுபவருடைய கையில் சலனமற்றுக் கிடப்பது போல் முர்ஷிதுடைய ஆதிக்கத்தில் வீழ்ந்து கிடப்பார். முர்ஷிதிடம் நிடமான நம்பிக்கை வைத்திருப்பார். இஸ்திஃதாத் என்னும் மனை உறுதியில் தளராதவராகவும் லாயக்கான தருநியுள்ள சிஷ்யராகவும் விளங்குவார்.

இரண்டாவது வகை முரீது 'கைர் முஸ்தஇத்' ஆவார், சோம்பேறியாகவும், மந்தமதியுடையவராகவும் இருப்பார். செக்கு மாடு போல் செக்கைச் சுற்றிச் சுற்றி வருவதேயல்லாமல் செக்கினால் என்ன பயன் என்பதை அறியமாட்டார். இவர், முர்ஷிதின் கட்டளைகளையும் உத்திரவுகளையும் சரிவர நிறைவேற்றி வரமாட்டார். அங்கும் தன்னுடைய சுயநலம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பார். தன் உயிரே அவருக்குப் பிரியமான தாய் இருக்கும். பிறரைப்பற்றி சிரத்தை இராது. கஷ்டம் கண்டு பயந்து ஒடுவார். ஸுலூக்குடைய ஞானக் கடமைகளிலும் மனம் லயிக்காமல் உள்ளாளும் கள்ளனாக இருப்பார். இவர் பெயரளவில் ஷெய்கிடம் முரீதாக இருந்தாலும் கடமைகளை நிறைவேற்றுவதில் முரீதாக மாட்டார். இவர், இத்துறையில் நாலாயக்-நாக்கிஸ் (அருகதையற்றவரும் பக்குவமற்றவரும்) என்று இழித்துரைக்கப்படுவார்.

நல்ல முரீதைப் பீரே காமில் ஆதரிப்பார்

மேற்கூறிய இருவகை முரீதுகளில் முதலாவது வகை முரீதை, பீரே காமில் அவர்கள், மனமுவந்து ஆதரித்து

நெஞ்சுடன் அணைத்துக்கொள்வார். அவர்மீது எப்போதும் அதிகம் கவனம் வைத்திருப்பார். அவர்மீது கருணை புரிவார். முர்ஷித் உடைய ஆதரவினால், அந்த முரீது பல சங்கடங்களை விட்டும் பாதுகாக்கப்படுவார்.

பொதுவாக, முர்ஷித்மார்கள் நல்ல முரீதை ஏற்றுக் கொண்டு, தகாத முரீதுகளை விரட்டி விடுவதில்லை. ஆனால், இவர்களையும் கவனித்து நல்ல பயிற்சி அளித்துப் பரிகரித்து விடுவார்கள். இங்ஙனமிருக்க, தனக்கு வேண்டியதைத் தானே முர்ஷிதிடம் கேட்டுப் பெறாமல், 'வந்தது வரட்டும்' போனது போகட்டும்' என்று பராமுகமாக இருந்துவந்தால் அதற்கு முர்ஷிதுதான் என்ன செய்வார்? எனவே, முர்ஷித் போதனையை ஏற்று நடப்பதே முரீதுக்கு நற்கதியை அளிக்கும்.

நிலைமை மாறுவதும், திருந்துவதும் அல்லா(ஹ்)வின் கிருபை

ஹக்கை விரும்பிய முயற்சியும் சிந்தனையும் செய்பவர்க்கு சில சமயங்களில் தன்னிலை மாறிப்போவதுண்டு. அதை 'ஹால்' (பரவசநிலை) என்று சொல்வார்கள். ஹால் சில சமயங்களில் தோன்றும்; சில சமயங்களில் மறைந்துவிடும். ஹாலுடைய சுபாவமே இதுதான். ஹால் வந்து மறைந்து போவதும் ஹக்கின் அணுக்கிரகமேயாகும். இதைக்கண்டு ஹால் உடையவர் திருப்தியடையவேண்டும். இதன்படி மேன்மேலும் முயற்சித்துக்கொண்டே இருக்கவேண்டும். இப்படி அடிக்கடி ஹால் வந்து போய்க்கொண்டிருந்தால், ஓர் அரிய ஆத்மசக்தி உண்டாகும். அது எப்போதும் அவருடைய சுபாவத்தில் ஸ்திரப்பட்டிருக்கும். அப்போது ஞானியானவர் 'பனா'வின் நிலையைக் காண்பார். 'பனாபில்லாஹ்' உடைய நிலையை அடைந்து பரிபக்குவமடைவார்.

யாருடைய சத்சகவாசத்தினால், ஞானிக்கு இந்த ஹால் ஏற்பட்டதோ அவரை (முர்ஷிதை) உறைவிடமாக எப்போதும் கொள்ளவேண்டும். இந்த நிஸ்பத்தானது (தொடர்பு)

அவருடைய சொத்தாகவே கிடைத்ததென்று கருதவேண்டும் ஏனெனில், முர்ஷிதின் கவனத்தாலும் அந்தரங்க சம்பந்தத் தாலுமே இந்தச் செல்வம் கிடைத்திருக்கிறது. இதற்காக 'அல்ஹம்து லில்லாஹ்' என்று அல்லா(ஹ்)வை புகழ வேண்டும்.

முர்ஷிதின் அருட்பார்வையும் தோற்றமும்

முர்ஷிதே காமில் தன்னுடைய முரீதுக்கு ஞானப்பாக்கியம் (பைஜ்) அளிக்கும்போது அருள் பார்வை செலுத்துவார். அதாவது முரீதை எதிரில்உட்காரவைத்துக்கொண்டு, அவரது இரண்டு கண்களிலும் தனது இரண்டு கண்களின் நோட்டத் தைச் செலுத்துவார். அப்போது ஞானியாகிய முரீது அதை விசுவாசத்துடன் ஏற்று, குருநாதருடைய அருள்தம் பக்கல் வருவதாக ஒப்புக்கொள்ளவேண்டும்; அப்போது பய பக்தியோடும் இருக்கவேண்டும்.

ஷெய்கு நேரில் இல்லாத சமயங்களிலும், இந்தப் பாக்கி யத்தை 'பர்ஸக்' தோற்றத்தில் பெறலாம். எப்படியெனின் நிம்மதியாக அமர்ந்து ஷெய்கின் திரு உருவை மனத்தில் இறுத்தி 'முராகபா'ச் செய்யவேண்டும். ''ஷெய்கின் அருள் கரம் அவர் இல்லாத சமயத்தில் சுருங்கிவிடுவதில்லை''

(பாரஸீகப் பாடல்)

முரீதானவர் ஊரில் இருந்தாலும் சரி, வெளியூரில் இருந் தாலும் சரி. கரையிலோ, கடலிலோ எங்கிருந்தாலும் சரி, முர்ஷிதின் உருவத்தோற்றத்தைப் 'பர்ஸக்' ஆகக் கண்முன் நிறுத்தி மனத்தில்கொண்டு முராகபாச் செய்துகொண்டிருக்க வேண்டும்.

ஐந்து நேரத்தொழுகைக்குப் பிறகும் சிறிது நேரமாவது ஷெய்கின் தியானத்தில் லயித்திருக்கவேண்டும். மக்ரிபுத் தொழுகை, தஹஜ்ஜத் தொழுகைகளுக்குப் பிறகு, பூரண நிம்மதியோடு அதிக நேரம் தியானிக்கவேண்டும்.

ஷெய்கின் சமுகத்தில்

முர்ஷித் அவர்கள் நேரில் இருக்கும்போது, ஞானியாகிய தாலிபே ஹக், ஷெய்குடைய கவனத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஷெய்கும் முராகபாவில் அமர்ந்து முரீதுக்கு அருளை (பைஜை)ப் பரபரிந்து கொண்டிருப்பார். இது ஷெய்கின் எதிரில் நடைபெற வேண்டிய ஒழுங்கு முறை யாகும்.

மஹானின் மஜாரில்

இனி ஷெய்கு மறைந்து போயிருந்தால் அவருடைய மஜாரில், அல்லது மஹான்களுடைய திருக் கப்ருகளுக்கருகில் இருக்கும்போது, முதுகைக் கிப்லா பக்கம் காட்டி, முகத்தை அடக்கமாகியிருக்கும் மகானுடைய நெஞ்சுக்கு நேராக வைத் துச் சரியாக இருந்து முதலில் ஸலாம் சொல்லி, பாத்திஹா ஓதி, முராகபாவில் அமரவேண்டும். அப்போது ''மஜாரில் அடங்கியிருக்கும் வலியுல்லாஹ் உடைய கல்பிலிருந்து நூரா னது வெளிப்பட்டு அருள் பாக்கியமாக என் உள்ளத்தில் வந்து சேகரமாகிறது'' என்று எண்ணிக் கொண்டு தியானம் புரிய வேண்டும். அதாவது, சூரியன் உதயமாகும்போது அதன் கிரணம், வீட்டுக்கூரை சந்திலிருந்து பாய்ந்து வீட்டுக் குள் வருவதுபோல் தன்னுள் வருவதாகப் பாவிக்க வேண்டும்.

'நிஸ்பத்' என்னும் வஸீலா

ஒவ்வொரு மகானுடைய நிஸ்பத் என்னும் ஞானத்தெளி வும் வெவ்வேறு வகையில் வெளிப்படும். வஸீலா தேடி அம் மகான்களிடம் செல்வோர் இதைப் பலவகையில் உணர்வார் கள். சிலர்க்கு நறுமண வாசனை வந்து மனம் குளிரும்; இன்னும் சிலர்க்கு இதயத்தில் குளிர்ச்சியுண்டாகி மகிழ்வு பிறக்கும்; வேறு சிலர்க்கு உற்சாகமும் ஊக்கமும் உடலில் புது சக்தியும் உண்டாகும். இவ்வாறுகிய 'பரவசநிலைக்' கொண்டு அந்தந்த மகான்களின் மகிமை வெளிப்படும்,

இப்படிப்பட்ட விஷயங்கள் சாஹிபே நிஸ்பத் என்னும் கஷ்பே இலாஹி பெற்ற மகான்கள் அறிவார்கள். அதாவது இந்த நிலைமை யாருடைய புறத்தால் உண்டாயிற்று என்று உணர்வார்கள்.

மக்கள் சிலர் தங்களுடைய நாட்டங்களையும் திருப்தி அதிருப்தியையும் நாடி மகான்களுடைய மஜார்களுக்குப் போய் அங்குக் காத்திருந்து முராகபாச் செய்கிறார்கள். இதிலும் மனப் பரிசுத்தமாய் அகேதாவோடு இருந்தால், இவனுள்ளே எந்த உதிப்பு ஏற்படுகிறதோ, அதை அம்மகானுடைய நாட்டமாகக் கொள்ளவேண்டும். இந்த அறிவிப்பு மகான்கள் சார்பாக நமக்குக் கிடைத்தாலும் அதையும் அல்லாஹுத்தஆலாவின் அருளாகப் பாவிக்க வேண்டும்.

இத்தகைய தருணங்களில் நாட்டங்கொண்டு மகான்களின் மஜார்களுக்குச் செல்வோர், அனுஷ்டிக்க வேண்டிய ஒழுங்கு முறையாவது: அங்கு அமர்ந்து கண்களை மூடிக் கொண்டும் பார்ஸக் முறையில் முர்ஷிதைத் தியானம் செய்ய வேண்டும். தன் மனத்தில் தஜல்லியும் அன்வார் என்னும் பிரகாசமும் உண்டாகும் வரை பேசாமல் இருக்கவேண்டும். இங்கு நிகழும் அடையாளங்கள், சமிக்ஞைகள் பற்றித் தங்கள் முர்ஷிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் ஹகீகத்தான 'கஷ்பு' இதே தோற்றத்தில் கிடைக்கும்.

—0—

மூன்றும் பாகம்

"தனஸ்ஸுலாத்தே ஸித்தா" என்னும் ஆறு அரிய ஞானோபதேசங்கள்

வஹ்தத்நிலிருந்து இன்ஸான்வரை இறங்கிவரும் படித்தரங்களை 'தனஸ்ஸுலாத்தே ஸித்தா' (ஆறு அம்சங்கள்) என்று சொல்வார்கள். அவை முறையே :—

(1) அஹதியத் (2) வஹ்தத் (3) வாஹிதிய்யத் (4) அர்வாஹ் (5) அம்ஸால் (6) அஜ்ஸாம் என்பனவாம்

வஹ்தத் இரண்டாவது மர்தபா உடையது. இது முதலாவது. தனஸ்ஸுல்; ஹகீகத்தே முஹம்மதி முதலாவது த அய்யுன். பார்ஸகே குப்ரா, முதலாவது தஜல்லியாகும்.

அஹதியத், வஹ்தத், வாஹிதிய்யத் இம் மூன்று மர்தபாக்களையும், உலூஹியத் என்றும், தகிலி என்றும், இலாஹி என்றும் சேர்த்துச் சொல்வார்கள். இது பூர்வீகமானது. (கதீம்)

அஹதியத்தைக் கைபே ஹுவிய்யத் என்றும், கைபுல் கைப் என்றும், கன்ஜே மக்பீ என்றும், அஜலுல் ஆஜால் என்றும் சொல்வார்கள். இந்தப் பதவியில் உடலுக்கும் ஊசாட்டங்களுக்கும் தஅய்யுனுக்கும் (குறிப்பு) இடம்பாடு கிடையாது.

வஹ்தத்துடைய பதவியில் நான்கு எஃதிபாராத்கள் ஆதாரங்களாகும். அவை (1) உஜூது (2) இல்மு (3) நூர் (4) ஹுஹுது ஆகியவைகளாகும்.

வாஹிதிய்யத்தில் ஏழு ஸிபத்துக்கள் ஆதாரங்களாகும். அவை :

(1) ஹயாத் (2) இல்மு (3) இராதத் (4) குத்ரத் (5) ஸமஃ (6) பஸர் (7) கலாம் என்பனவாகும். இதனை உம்மஹாத்துஸ் ஸிபாத் என்றும், ஸபஅ ஸிபாத் என்றும் சொல்வார்கள். (1) அர்வாஹ் (2) அம்ஸால் (3) அஜ்ஸாம் இம்மூன்று பதவிகளும் 'காரிஜே இலாஹி' என்று சொல்வார்கள். இது 'ஹாதிஸ்' நூதனமாகும்.

மனிதன் சகல குணங்களும் சேகரமானவனாக இருக்கிறான். அஹதியத், வஹ்தத்' வாஹிதிய்யத், அர்வாஹ், அம்ஸால், அஜ்ஸாம் ஆகிய பதவிகள் மனிதனில் சேகரமாயிருக்கின்றன.

'ஜாமிஉல் மராத்திபாக இருப்பதால் இன்ஸானுடைய நிலை ஏழாவது மர்த்தபா என்றும் சொல்கிறார்கள். அதாவது, இன்ஸானுக்குள் கன்ஜே மக்பி, ஜுஹூரே தாத்தே இலாஹி ஹகீகத்தே முஹம்மதி, ஹகீகத்தே இன்ஸானி, அர்வாஹி அம்ஸாவி யாவும் வெளிப்படையாகும் தன்மை அடங்கியிருக்கின்றது.

ஞான மார்க்கத்தில் இன்ஸானின் யாத்திரை

மேற்கூறிய ஸிபாத்துகளையும் மர்த்தபாக்களையும் இன்ஸான் அடையும் போக்கை, ஸபரே இன்ஸான் (மனித யாத்திரை) என்றும் சொல்வார்கள். தன்னிலிருந்து, தன்னில், தன்மீது, தனக்காக, தனக்குத்தானே தாத்திலிருந்து ஜிஸ்மே ஆதம்வரை பிரயாணம் செய்வதாகும்.

இம் முறையில் இன்ஸான் பல கோலங்களைக் கொள்கிறான். ''தொளாயிரத்து எழுபது (970) கோலங்களை நான் பார்த்திருக்கிறேன். புல் போலப் பல தடவை முளைத்திருக்கிறேன்'' என்பதாக மௌலானா ஷம்ஸ் தபரேஜ் (ரஹ்) கூறுகிறார்கள். (பார்ஸீ பைத்து)

இந்த உடைகள் உலூதே முதலத் என்னும் தாத்துடைய உடைகளாகும். கடைசி உடை இன்ஸானுடைய கோலமாகிய உடையாகும். இன்ஸான் குத்ரத்தின் விளைவாகும். பல ''சரீரத்தின் கோலங்கள் பலவகையாக மாறியே இன்ஸானின் கோலம் உண்டாகிறது'' என்றும், இன்ஸானும் பல மர்த்தபாக்களைக் கடந்து தன் அசலைக் கொண்டு தூரமாகி விட்டான் என்று கூறப்படுகிறது.

ஹகீகத்தே இன்ஸான்

இன்ஸானானவன் தன்னுடைய ஹகீகத்துகளைத் தெரிந்து கொண்ட பின்னர் 'ஆலமே அர்வாஹில்' யாத்திரை செய்து கொண்டிருக்கவேண்டும் பிறகுதான் அசல் நிலைக்குப்போய்ச் சேரவேண்டும்.

இதற்குத் திருக்குர்ஆனிலும் ஆயத்து ஆதாரம் உண்டு; தன்னுடைய எஜமானனிடத்தில் சத்தியமான இருப்பிடத்தை அடைகிறான் என்பதே அது.

இந்த ஸ்தானமானது 'லாமக்கானை' விட்டும் அப்பாற்பட்டதாகும். இம்மகிமைகளின் காரணமாக இன்ஸானானவன் இந்த ஸ்தூல தேகத்தில் இருந்துகொண்டே மலக்கூத்து ஜபரூத்து, வாஹூத்து பிரபஞ்சங்களையும் கடந்து யாத்திரை புரிந்து பரிபக்குவம் (கமாலியத்) அடைபவனாக இருக்கிறான். ஹுக்மாக்களாகிய விவேகிகள், மனிதனை 'ஆலமே ஸகீர்' (சிறு பிரபஞ்சம்) என்று சொல்கிறார்கள். ஆனால் காமிலான ஆரிபுகள், இன்ஸானை 'ஆலமே கபீர்' (பெரும் பிரபஞ்சம்) என்று சொல்லுகிறார்கள்.

மௌலானா ரூமியின் தத்துவம்

இதை மௌலானா ரூமி (ரஹ்) தமது மஸ்னவி ஷரீபில் இவ்விதம் எடுத்துக் கூறுகிறார்கள்.

''வெளிப்படையான விவேகத்தைக்கொண்டு பயன் அடைபவர்கள் மனிதனை, 'ஆலமே அஸ்கர்' என்று சொல்

கிறார்கள். ஆனால், தேர்ந்த ஞானிகள் (காமில்கள்) அவனை 'ஆலமே அக்பர்' என்று சொல்கிறார்கள், எனவே, மனிதன் வெளிப்படையில் சிறிய உலகமாகவும் அந்தரங்கத்தில் பெரிய உலகமாகவும் இருக்கிறான்''

> ''வெளிப்படையில் இவ்வின் முன்னையில் ஒரு பழம் காணப்பட்டாலும், அது இவ்வுக்குள்ளிருந்து வெளிவந்ததேயாகும்''

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது: ''எல்லா நபிமார்களும் எனக்குப் பிற்பட்டவர்கள் தாம். நான் கடைசியாக உலகில் தோன்றியிருந்தாலும் எல்லாவற்றிற்கும் நான் ஆதி மூலமானவன், ஆதம் வெளிப்படையாகச் சிருஷ்டிக்கப்பட்டாலும் அதனுள்ளும் அந்தரங்கமானவன் நான்: ஆதமுடைய உருவத்திற்கு மலக்குகள் ஸஜ்தா செய்தது எனக்கு ஸஜ்தா செய்ததே யாகும். எல்லாவற்றிக்கும் ஆதி காரணம் நான்தான். விதையிலிருந்து மரம் வெளிப்படுவதுபோல், ஆதம் வெளிப்பட்டிருக்கிறார்.''

முதலில் சிந்தனையுண்டாகிறது; பிறகே அமல் செய்யப்படுகிறது. சுருங்கக் கூறுமிடத்து ஏழு வானங்களையும் மற்றுமெல்லாவற்றையும், அல்லாஹுத்தஆலா 'நூரே முஹம்மதி'யை ஆதியாகக் கொண்டே படைத்தான் என்பது கருத்தாகும்.

ஓர் உஜூதும் இரண்டு தாத்களும்

அருமை நண்பனே, இன்ஸானுடைய நமது அசல் சுதேசம் வஹ்தத்துடைய மார்த்தபாவேயாகும் — இறைவனுடைய 'தாத்'தேயாகும். ''குல்லு ஷை இன் யர்ஜிஉ இலா அஸ்லிஹி'' அதாவது ''எல்லா வஸ்துக்களும் அதன் அசல் உற்பத்திப் பக்கமே போய்ச் சேருகின்றன'' என்பது போல், இன்ஸான் தன்னுடைய ரப்பின் பக்கமே போய்ச் சேருகிறான்.

மனிதன் மண்ணால் படைக்கப்பட்டவன் என்று மட்டும் எண்ணிவிடக்கூடாது: இவனே 'மல்ஹறே இலாஹி'யாக இருக்கிறான். அல்லா(ஹ்)வின் தாத்தும், ஸிபாத்தும் இவன் மூலமே வெளியாகின்றன என்பதை அறிக,

உஜூது ஒன்றேதான். அது அல்லாஹுத்தஆலாவே, அடியானுக்குத் தன்னிடமிருந்து இரவல் கோலமாகவே அருளப்பட்டதாகும். இதை 'உஜூதே இஜாபி' என்று சொல்வார்கள். எனவே, சங்கை மிகுந்த ஸூபியாக்கள் சிலர் உஜூது ஒன்று என்றும் 'தாத்' இரண்டு என்றும் வலியுறுத்திக் கூறுகிறார்கள். அதாவது, அல்லா(ஹ்)வுடைய உஜூதை 'வாஜிபுல் உஜூது' என்றும், அடியானுடைய உஜூதை 'மும்கினுல் உஜூது' என்றும் சொல்கிறார்கள். ஆனால், நல்வழிப்படி நடக்கும் ஞானி, வஹ்தத்தை 'ஷை'களுக்கு உள்ளாலும், கஸ்ரத்தை 'ஷை'களுக்கு வெளியிலும் காணுகிறான்.

ஆலமே மலக்கூத்-ஆலமே நாஸூத்

அருமை நண்பனே, வஹ்தத்துக்கு நிழல் போன்றது ஆலமே மலக்கூத். இதை 'ஆலமே மிஸாலி' என்று சொல்லுவார்கள். வாஹிதியத் உடைய நிழலாகவே இப்பிரபஞ்சம் கருதப்படுகிறது. அந்த மலக்கூத்-நாஸூத் இரண்டுக்கு மிடையில் ஸ்தூல உடலில் மூச்சு ஒரு சுவர்போல் இருக்கிறது.

இங்ஙனம் மலக்கூத் உடைய தேகம் கிடைக்கப்பெற்ற வனுக்கு மவ்த்தே கிடையாது: சாஸ்வதமான நிலையை அடைந்து விடுகிறான். அதாவது நாஸூத்துடைய ஸ்தூலத்தை மறந்தவரே ஒளலியாக்களுடைய அந்தஸ்தை அடைந்து கொள்கிறார். அப்போது 'தான்' என்ற ஐயத்தையும் இரண்டு என்ற ஐயத்தையும் மறந்து கைவிடுவதே மரிப்பதற்கு முன் மரிப்பது என்றும், கமாலியத் என்றும் சொல்கிறார்கள்.

மலக்கூத் ஆன்ம சரீரத்தை விட்டு நாஸூத் சரீரம் வேறுக அமைந்திருக்கவில்லே. இரண்டும் ஒரே அமைப்பின்படி ஆனவைதாம், இது வேறு அது வேறு அல்ல. அஃது ஆலமே அம்ரைக் கொண்டதாகும். இஃது ஆலமே கல்கைக் கொண்டதாகும். அது அந்தரங்கம், இது பகிரங்கம், உடைவது. சிதைவது, அழிவது என்பதெல்லாம் மலக் கூத்துக்குக் கிடையாது. எனவே, மலக்கூத்தில் தனித்திருப் பவர்க்கு மரணமே இல்லே.

இவ்வுண்மைகளே அறிந்த ஆரிபே காமில் இதற்கு உதாரணப் புருஷராக இருக்கிறார். ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத் யாவும் உணர்ந்தவராய் இருக்கிறார். இதன் நியாய வழிக்குக் கட்டுப்பட்டிருப்பவர், 'முல்ஹித்' (வழி தவறியவர்) ஆகக் கெட்டுப்போக மாட்டார்.

உஜூது மௌஜூதுக்கு உதாரணம்

உஜூதுக்கும் மௌஜூதுக்கும் (தாத்–சிபாத்) இங்கு ஓர் உதாரணம் கூறுகிறேம்: ஒரு பெரிய குடத்தில், ஓர் ஆயிரம் சன்னமான துவாரங்களே உண்டாக்குங்கள். பிறகு குடத்தின் மத்தியில் ஒரு வெளிச்சமான விளக்கை வையுங்கள். விளக்கின் ஒளி, ஒவ்வொரு துவாரத்தின் வழியாகவும் பாய்ந்து குடத்துக்கு வெளியே வரும். ஒவ்வொரு துவாரத் தின் வழியாகவும் வெளிச்சம் வரும். வெளிச்சக் கதிர்கள் தனித் தனியாகவே காட்சியளிக்கின்றன. உண்மையில் வெளியே காணப்படும் எல்லா ஒளி கிரணங்களும் ஒன்றே யாகும். ஒன்றிலிருந்து வெளிவருவனவேயாகும். குடத் தினுள்ளிருக்கும் வெளிச்சத்துக்கும், 'துவாரங்கள் வழியாக வெளிவரும் வெளிச்சத்துக்கும் வித்தியாசமென்ன? ஒன்றுமில்லே.

குர்பும் மஇய்யத்தும்

இதில் அல்லா(ஹ்)வின் குர்புக்கும் மஇய்யத்துக்கும் உவமானம் அமைந்திருக்கிறது. அகக் கண் கொண்டு பார்ப்

பவன், துவாரங்களின் வழியாக வரும் வெளிச்சத்தையும் குடத்திற்குள் இருக்கும் வெளிச்சத்தையும் ஒன்றுகவே பாவிப் பான். ஏனெனில், இரண்டுக்கு மிடையில் எந்த விதமான வேற்றுமையும் இருக்கவில்லே. ஆனல், வித்தியாசமும் வேற்றுமையும் காணப்படுகிறதென்றல், கற்பனேயான உவமான தோற்றத்தில் மட்டும்தான்.

நூரே முத்லக்

குடத்துக்குள் இருப்பது நூரே முத்லக் (அசல் வெளிச்சம்) எனப்படும். அசல் ஜோதியைக் கண்டு கொண்டவன் அதிலேயே லயித்து அதையே முஷா ஹதாச் செய்வான். இங்ஙனம் அசல் ஜோதியில் லயிப்பவன் 'இன்ஸானே காமில்' எனப் பாராட்டப்படுவான். இதைக் கொண்டு 'தாத்' எப்படிப் பூர்வீகமானது என்று கருதப்படுகிறதோ, அப்படியே ஸிபாத்தும் பூர்வீகமானதென்று கொள்ளப்படும். ஏனெனில், அன்னியமானது என்றே அசலானது என்றே பிரித்துக்காட்டு வதற்கில்லே. குடத்துக்கு உள்ளே வெளிச்சம் எப்போது உண்டாயிற்றே அப்போதே வெளியில் தெரியும் வெளிச்சமும் உண்டாகி விட்டது. இதைத் தூய ஒளி என்றும், முஷா ஹிதயே முத்லக் என்றும், தாத்துடைய நுட்பம் என்றும், ஸிர்ரே இலாஹி என்றும், ரூஹே அஃலம் என்றும் பல பெயர் களிட்டு அழைக்கலாம்.

அந்தரங்க நோக்கை அடையும் வழி

மேற்கூறிய உவமானப்படி ஞானியானவன் அந்தரங்க மான லக்ஷியத்தை அடைவதற்கு ஒரே வழி, காமிலாகிய முர்ஷிதை அடைந்து பயன் அடைவதேயாகும். அதற்கு முதலில் முர்ஷிதை (மஃஷூக்காக) ஏற்றுக்கொள்ளவேண்டும் அத்துடன் அகப்பார்வையும் அடையப் பெறவேண்டும். அன்பனே! அந்த முத்லக்கான நூரை, மனக்கண்கொண்டு சதா எந்த நிலேயிலும், மிருந்த மரியாதையுடனும் கண்ணி யத்தோடும் நிம்மதியாகப் பார்த்து வரவேண்டும். பார்வை யில் பார்! இரண்டறக் கலந்து ஒன்றித்துவிடு என்று ஞானி

கள் கூறுகிறார்கள். நீ உன் 'தன்னை' மறந்து விடுவதே சிறப்பாகும்.

ஸ்தூல தேகம் சம்பந்தமான இந்த இரகசியங்கள் வீணான விஷயங்களல்ல; வேடிக்கைப் பேச்சில்லை; மிகப் பரிசுத்தமான தூய விவகாரங்களாகும்: இந்தத் தரீகத்துடைய ஞானத்தை ஞானசிரியர்களான முர்ஷிதைக்கொண்டும், வலியைக் கொண்டும் படியேற்றி வைப்பவனைக்கொண்டுமே தெரிந்து கொள்ள இயலும்.

'குல்கந்து'போல் மதுரமான ஞானம்

'தாத்தே இலாஹி' குல் என்னும் ரோஜா இதழ்களுக்கு ஒப்பானது. 'தாத்' (ரஸூலுல்லாஹ்) சர்க்கரைப் பாகுக்கு ஒப்பானது. இவை இரண்டையும் சேர்த்துப் பக்குவப்படுத்தி 'குல் கந்து' ரூபத்தில் தருபவர் முர்ஷிதேயாவார். அதாவது முர்ஷிது 'குல்கந்து ஆவார். குல்கந்து என்பது எப்படிக் (குல்+கந்து) எனக் கலந்து ஒர் இனிப்பான மருந்தாக இருக்கிறதோ அதைப்போல் முர்ஷித் அல்லா(ஹ்)வும், ரஸூலும் கலந்த ஒரு வஸ்தாக இருக்கும். ஆகவே, பனுபிஷ் ஷெய்கு என்ற பதவியை அடைந்தவன் பனுபிர் ரஸூல் பனுபில்லாஹ் என்ற பதவியையும் அடைந்துகொண்டான். என அஹ்லுல் லாக்கள் கூறுகிறார்கள். இதன் நுட்பத்தை அனுபவ ஞானிகளிடம் விளக்கம் பெறுவீர்களாக.

எனவே, எந்த மகானுடைய உள்ளத்தில் அல்லாஹ் உடைய இஷ்க் இருக்குமோ, அல்லாஹ் உடைய முஹப்பத் குடிகொண்டிருக்குமோ அவருடைய திருக்கரத்திலேயே 'பை அத்' செய்யவேண்டும். அப்படிப்பட்டவரால் அடையும் இன்பமே தனியானதாகும்.

முர்ஷிதானவர், வழிகாட்டியாகவும், அழைத்துசெல்பவராகவும் இருப்பது ஒரு பக்கமிருக்கட்டும். அவருக்குள்ள 'இஷ்கே இலாஹி' என்பது ஒரு வாளாயுதமாகும். 'மாஸிவா' என்னும் அன்னியத் தொடர்பை அது வெட்டித் தள்ளிவிடும்;

தன்னைத்தான் மறக்கச் செய்துவிடும்; சகலவிதமான துயரங்களையும் போக்கிவிடும்.

இப்படிப்பட்ட நட்புக் கிடைத்தால் ஐயப்பாடு என்னும் திரைகள் விலகிப் போய்விடும்! அசல் லக்ஷியம் கைகூடிவிடும். நிழலானது தரையில் வீழ்வதுபோல், ஆரிபின் பார்வை தரையில் பாயாது; எப்போதும் மேலே அர்ஷை நோக்கியே செல்லும், அதாவது, ஆலமே குத்ஸில் (தூய உலகில்) சஞ்சரிக்கும்.

إِنَّ لِلَّهِ عِبَادًا أَبْدَانُهُمْ فِي الدُّنْيَا وَقُلُوبُهُمْ عِنْدَ اللَّهِ

"அல்லா(ஹ்)வுக்கு(ச் சொந்தமான) அடியார்கள் சிலருண்டு. இவர்களுடைய உடல்கள் உலகத்தில் இருக்கும். இவர்களுடைய இதயங்களோ அல்லாஹுத்தஆலா இடத்தில் பொருந்தி இருக்கும்"

சக்தியுள்ள அல்லா(ஹ்)வாகிய மலீக் இடம், இவர்கள் அமரும் ஆசனம் (மக்அத சித்க்) இருக்கிறது. எனவே, ஆரிபே காமில் எப்போதும் உன்னதமான ஸ்தானத்தில் இருப்பார்.

அப்படிப்பட்ட நிலையில் அவர் பேசும் மொழியை, அவருடைய வாய்மொழி என்று கருதாதீர்கள். அல்லாஹுத்தஆலாவின் புறத்திலிருந்து வரும் நிருமொழியாகவே கொள்ளுங்கள். 'மெய்ஞ்ஞானியானவர் கண்ட உண்மையையே கூறுவார்' என்பது பாரஸீகப் பழமொழியாகும்.

ஞானம் அறியாதவர்களே ஆரிப் என்று கருதாதீர்கள். உஜூதைப் பற்றிய உண்மையை அறியாதவன் ஜாஹிலாவான். அவனுக்குப் பார்வையின் நுட்பம் இருக்காது.

''ஞானப்பார்வை என்னும் செல்வம் இல்லாதவனிடம் இருந்து நீரும் துன்யாவும் கிடைப்பதாயிருந்தாலும் அதனால் பயன் ஒன்றுமில்லை'' என உர்துப் பாடல் ஒன்று எடுத்துக் கூறுகிறது.

வீழ்ந்து கிடப்பவனுக்கும் நின்று கொண்டிருப்பவனுக்கும் வித்தியாசம் நிறைய உண்டு. இதே மாதிரி தான் அந்ஞானிக்கும் மெய்ஞ்ஞானிக்கும் இடையில் மாபெரும் வேத்துமையுண்டு.

ஷரிப் பில்லாஹ்களின் மகிமை மகா மேலானதாகும். இவர்கள் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின் பற்றி வழிகாட்டுபவர்களாவர். பண்டைய தரிகாக்கள் தோன்றியதும் இதே நோக்கத்துக்காகத்தான். ஷரீஅத்துடைய காரியங்களில் இதே கட்டுக்கோப்பு அடங்கியிருக்கிறது.

ஷரீஅத்தின் கட்டுக்கோப்படி நடக்க வேண்டும்

அதாவது, 'நப்ஸே அம்மாரா'வை அடக்கியாளவேண்டியது முதற் கடமையாகும். ஷரீஅத்தின் தரிக்காக்கள் (ஆட்டுத்திட்டங்கள்) நப்ஸின் இச்சைகளை விலக்கி தரிகா அம்மாராவை அடக்கித் தூய வாழ்க்கை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டவையாகும். நாம் ஷரீஅத்தின் கட்டுக்கோப்படி நடக்கும் அளவுக்கு நாம் மறை இச்சைகளிலிருந்து விலக்கப்பட்டவர்களாகி நன்மையடைவோம். எனவே, ஸுன்னத்தின் தாத்பரீகாரம் நடப்பதே சகல சௌபாக்கியங்களையும் தரித்து வைக்கும். ஸுன்னத்துக்கு மாறுக நடப்பது சகலவிதமான கஷ்டங்களையும் நிலைகளையும் உண்டாக்கிவிடும்.

செய்யிதுல் முர்ஸலீன் முஹம்மது முஸ்தபா (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய அடிச்சுவட்டில் ஸ்திரமாய்ப் பின்பற்றி நடக்கும் பாக்கியத்தை எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா நம் அனைவருக்கும் தந்தருள்வா

பக்குவமும் பெறுதற்காகக் கணக்கற்ற நபிமார்களையும் ரசூல்மார்களையும் கால, தேச நிலைக்கு ஒப்ப, அம்மனிதஇனப் பெருந்தொடரினிடையே அணி அணியாய் ஏற்படுத்தி வைத்தான்.

இதன் பின்னர் தனது ஆதி எண்ணத்திற்குள் எண்ணமாய்—சிந்தைக்குள் சிறந்த சிந்தனையாய்...கருத்துக்குள் திருப்பொருளாய் இருந்த சம்பூரணத் தூதுவரை இறுதிநாள் வரை உள்ள காலமனைத்திற்கும் ஏற்ற முறையில் ஒரு பெரு நபியை வெளிப்படுத்த இறைவன் எண்ணினான்.

இறுதி நபியவர்கள் தோற்றமாவதற்கு முன்னமேயே இறுதி நபி அவர்களின் வருகைபற்றியும் நிறை மறை குர்ஆன் ஷரீபு அருளப்படுவதுபற்றியும் காலத் தொடரனைத்திலும் தீர்க்கதரிசிகளை முன்னறிவிப்புச் செய்யும் தோரணையிலும் முன் விமர்சனப்படுத்திவைக்கும் விதத்திலும் அனுப்பித் தனது தனிப் பெரும் கருணையை நிறைவேற்றி வைத்தான்.

இதன் பின்னர் நான் படைத்த காலங்களிலேயே வசந்த காலமாயும் திருவருள் சுரக்கும் புனித காலமாயும் உள்ள யானை ஆண்டு, ரபீஉல் அவ்வல் மாதம், வளர்பிறை 12-ல் திங்கட்கிழமை அதிகாலை ஆதவன் தன் பொற் கதிர்களைப் பரப்புவதற்குமுன் இளந்தென்றல் வீசும் இனிய வேளையில், அகிலகோடி படைப்பனைத்திற்கும் அருட்பெருந்தலைவராகவும் இறுதி நபியாகவும் ஹலரத் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பெருந்திருவாகத் தோற்றுவித்தான்; பல்லுலகங்களுக்கும் [பரமன் தன் தூதுவராக அனுப்பி வைத்தான்; இருட்குபிரின் இனமனைத்தையும் அகற்றி மருட்பவம் அனைத்தையும் போக்கி அருட் பெருங் கொடை வள்ளலாக இருக்கும் முறையில் ஏற்படுத்தி வைத்தான். என்னே! மன்பதைகள்மீது உள்ள அல்லா(ஹ்)வின் தனிப் பெருங்கருணை! அல்ஹம்து லில்லாஹ்.

இத்தகைய இஸ்லாமிய மெய்ஞ்ஞானம்தான் நபிகள் நாயகம் அவர்களுக்குப்பின் அவ்லியாக்கள், குதுபுமார்கள்,